# தமிழாலயம் முன்சன்

## Thamilalayam München

# 17வது அகவை நிறைவு மலர்

# 1994 - 2011











தமிழ்க் கல்விக் கழகம் யேர்மனி
Tamilische Bildungsvereinigung e.V.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாவீரர்களே!

யுகம் யுகம் சென்றாலும்

உம் நினைவுகள்

எம் மண்ணின் மக்களிடம் வாழும்

உம் கனவு மெய்ப்படும்

உமை மறந்தால் எமக்கு வாழ்வேது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழாலய கீதம்

கல்வியும் கலையும்
நம்மிரு கண்கள்
நல்தமிழ் மொழி
எங்கள் உயிராகும்

பன் மொழிக்கல்வியும்
பல் கலை நுட்பமும்
பயிற்றுவிக்கும் தமிழாலயம்
எங்கள் தமிழாலயம்

தன்மானத் தமிழர்
பண்பாடதனை
தரணியிற் பரப்பிடும் தமிழாலயம்
எங்கள் தமிழாலயம்

பாலகர் நாங்கள்
பாடி ஆடி
படித்து மகிழும் ஆலயம்
எங்கள் தமிழாலயம்

பாவலர் போற்றிட
நாவலர் வாழ்த்திட
என்றென்றும் வாழிய தமிழாலயம்
எங்கள் தமிழாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுப் பதிவு

1994ம் ஆண்டு மாசி மாதம் பத்தொன்பதாம் திகதி எர்லோசர் (Erlöser Kircher) தேவாலயத்தில் முன்சன் தமிழாலய ஆரம்ப வைபவம் நகரச் செயற்பாட்டாளரான திரு சிவபாதசுந்தரம் இளவழகன் தலைமையில் நடைபெற்றது. உலகத் தமிழர் இயக்கத்தின் தென்மாநிலச் செயற்பாட்டாளர்களான திரு ஆறுமுகம் விவேகானந்தன் அவர்கள், திரு நாராயணசாமி மனோகரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். திரு ஆ. விவேகானந்தன் தமிழாலயத்தை ஆரம்பித்து வைத்தார். இவ் வைபவத்தில் திரு. நாகராசா நிர்மலதாசன் அவர்கள் நிர்வாகியாக நியமிக்கப்பட்டார். அன்றைய நாளில் எட்டுச் சிறார்கள் இணைந்தனர். அச் சிறார்களுக்குத் தமிழ்ப் பணி ஆற்ற முன்வந்த திருமதி இந்துமதி நடேசமூர்த்தி, திருமதி வனித்தா விஜயகுமாரன் ஆகியோர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். எமது தமிழாலயம் முதன் முதலில் எர்லோசர் (Erlöser) தேவாலயத்தில் நடைபெற்றது. எமது தமிழாலய வளர்ச்சிக்குத் தமிழ்க் கல்விக் கழகத்தின் நிர்வாகக் கட்டமைப்பு பெரிதும் துணையாக நின்றது.

2004ம் ஆண்டு 10வது ஆண்டு நிறைவை நாம் கொண்டாடியபோது எமது முதலாவது மலரை வெளியிட்டிருந்தோம். அம் மலரில் முன்சன் தமிழாலயத்தின் ஆரம்பகால விபரங்கள் இடம்பெற்றுள்ளன. எமது தமிழாலயத்தில் மாணவர் தொகை அதிகரித்ததன் காரணியமாகப் பாடசாலை நடைபெறும் இடங்களை மாற்ற வேண்டிய தேவையேற்பட்டது. இதற்கமைய 2005ல் இருந்து எமது தமிழாலயம் (VHS) Volkshochschuleல் நடைபெற்று வருகின்றது. தற்போது எமது தமிழாலயத்தில் 281 மாணவர்கள் மொழிபயின்று வருகின்றார்கள். எமது மாணவர்களின் தொகைக்கேற்ப இடவசதி போதாமையாக உள்ளது.

எமது தமிழாலயத்தில் பதினெட்டுத் தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் பணியாற்றுகின்றார்கள். வாழ்வில் பல்வேறு நெருக்கடிகள் இருந்தாலும் தமிழ்மொழியிலும் எதிர்காலச் சந்ததியிலும் பற்று வைத்துத் தன்னலம் கருதாது பணியாற்றி வருகின்றார்கள். இப் பணிக்கப்பால் நீண்டதூரப் பிரயாணம் மேற்கொண்டு தேர்வு மேற்பார்வையாளர்களாகவும் தமிழ்த்திறன் போட்டி நடுவர்களாகவும் பங்காற்றி வருகின்றார்கள். இவர்களது இப்பணிக்கு முழு ஒத்துழைப்புகளையும் வழங்கி வரும் இவர்களது குடும்ப உறுப்பினர்களின் பாங்கு பாராட்டத்தக்கது. இவர்களுடன் இணைந்து பணியாற்றும் நான்கு கலை ஆசிரியர்களும் எமது மாணவர்களின் கலை முன்னேற்றத்திற்காகத் தமது உழைப்பை நல்கி வருகின்றனர். நீண்ட தூரத்தில் இருந்து வந்தும் எமது மாணவர்களின் கலை ஆசிரியர்களுக்கான பணியினைப் பூர்த்தி செய்து வருகின்றனர்.

தமிழாலய மாணவர்கள் தமிழர் திருநாள், வாணி விழா, தாயக நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபற்றி வருகின்றனர். எமது தமிழாலயத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் தமிழாலய நிர்வாகத்தினருக்கும் வளர்ந்த மாணவர்கள் சில உதவிகளைச் செய்து வருகின்றார்கள். தமிழாலயத்திற்கான வளர்ந்த மாணவர்களின் உதவிகள் போதாது. இது மேலும் வளர்ச்சியடைய வேண்டும். தமிழாலயக் கல்வியை முடித்துக்கொண்ட மாணவர்கள், தமது கடமைகளைத் தமிழாலய வளர்ச்சிக்கு நிரந்தரமாகச் செய்ய முன்வரவேண்டும். இதனைப் பெற்றோர்களும் ஊக்குவிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கடந்த காலங்களில் எமது தமிழாலயத்தின் மாணவர்கள் செல்வன் சிவரஞ்சன் சிவராசா, செல்வன் சுஜீவன் மாணிக்கராஜா, செல்வன் டிலக்ஷன் சோதிலிங்கம் என்போர் உதவி நிர்வாகிகளாகப் பணியாற்றியுள்ளனர். இத்துடன் பெற்றோர் பிரதிநிதிகளாகத் திரு முத்துவேலு குகதரன் அவர்கள், திரு துரையப்பா கஜேந்திரன் அவர்கள், திருமதி சுதர்சினி தவராசா அவர்களும் பணியாற்றியுள்ளனர்.

முன்சன் நகரத்தில் பல தமிழ் மாணவர்கள் உயர் கல்விக்கான தகுதிகளைப் பெற்றிருக்கின்றார்கள். இவர்கள் யாவரையும் முன்சன் தமிழாலயம் வாழ்த்துகின்றது. எமது தமிழாலயத்தில் மழலையர்நிலையில் இருந்து ஆண்டு 11 வரை தொடர்ச்சியாகக் கல்வி கற்ற செல்வன் இராஜலிங்கம் வீணாகரன் அவர்கள் யேர்மன் பாடசாலைக் கல்வியிலும் முதற்தரச் சித்தியினைப் பெற்று, முன்சன் பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் கல்வி பயின்று வருகிறார். இது எமது ஏனைய மாணவர்களுக்கும் மிக முன்மாதிரியான விடயமாகும்.

எமது தமிழாலயத்தின் சகல விபரப்பதிவுகளையும் கணினியில் முழுமையாகக் கோவைப்படுத்தித் திட்டவடிவமைப்பு செய்து தந்து உதவியவர் திரு குலசேகரம் வருணஉதயன் அவர்களாவார். இதனால், எமது தமிழாலயக் கணினி வேலைகளை இலகுவாகச் செய்ய முடிகிறது எனலாம். எமது தமிழாலயத்தின் கணினி தட்டச்சு உதவிகளைச் செல்வன் பார்த்தீபன் குகதரன் அவர்களும் செல்வன் டிலக்ஷன் சோதிலிங்கம் அவர்களும் செய்து தருகின்றார்கள்.


ஆரம்ப காலம் தொடக்கம் இன்று வரை எமது தமிழாலய வளர்ச்சியில் அன்பும் ஆதரவும் அறிவுரையும் கூறிவரும் தமிழ்க் கல்விக் கழகப் பொறுப்பாளர் தமிழேந்தல் திரு இரா. நாகலிங்கம் அவர்களும் செயலகப் பொறுப்பாளர் திரு செல்லையா லோகானந்தம் அவர்களுக்கும் தமிழ்த்திறன் பிரிவுப் பொறுப்பாளர் திரு இரா. மனோகரன் அவர்களுக்கும் முன்சன் தமிழாலயத்தின் சார்பில் நன்றி கூறுகின்றோம். எமது தமிழாலய வளர்ச்சியில் நகரச் செயற்பாட்டாளர்களான திரு நல்லையா சிறிகாந்தன், திரு சின்னப்பு கொண்சன்ரைன், திரு துரைச்சாமி இராசதுரை அவர்களும் எமது தமிழாலய வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகிறார்கள்.

கடந்த காலங்களில் தாயக மக்களின் மேம்பாட்டு நலத்திட்டங்களுக்கு எமது மக்கள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். ஆசிரியர்கள், நிர்வாகம், பெற்றோர்கள் யாவரும் ஒன்றிணைந்து எமது எதிர்காலச் சந்ததியினரின் கல்வி வளர்ச்சிக்கு அயராது உழைப்போம். முன்சன் தமிழாலய வளர்ச்சியை மென்மேலும் பன்மடங்காக்குவோம்.

நிர்வாகம்
தமிழாலயம் முன்சன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தமிழ் பரப்பும் தமிழாலயத்துக்கு நல் வாழ்த்துக்கள்



உலகில் தோன்றிய இனங்களில் மூத்த இனம் தமிழினமென்றும், முதலில் உருவான மொழி தமிழ்மொழி. அம்மொழி நாவலந்தீவிலே உருவானதென்றும், அதன் வேரிலிருந்தே ஆரிய "ஐரோப்பிய மொழிகள் துளிர் விட்டன என்றும் 50 ஆண்டுகளாக மொழிகளை ஆய்வு செய்த தேவநேயப்பாவணர் பல ஆதாரங்களைக் காட்டி உலக ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் எழுதியுள்ளார். அவரின் ஆய்வுகளை ஆராய்ந்த மொழி ஆய்வாளர்கள் தமிழ் மொழி வேரிலிருந்தே ஆரிய ஐரோப்பிய மொழிகள் உருவாகின என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர். அத்தோடு ஆரிய மொழியிலிருந்தே ஐரோப்பிய மொழிகள் உருவாகியது என்ற யேர்மனியரான யோன் சிமித்தின் ஆய்வு தவறானதென எழுதினர். அதை யோன் சிமித் ஏற்றுக் கொண்டார். பாவாணர் ஓர் பேராசிரியர். தான் வாழ்ந்த 79 ஆண்டுகளில் 50 ஆண்டுகள் மொழி ஆய்விலே ஈடுபட்டு மூன்று பாகங்களை விளக்கமாக எழுதியுள்ளார். அதனால் பல்கலைக்கழகங்கள் மொழிஞாயிறு, தனித்தமிழ்ஊற்று, தமிழ்ப்பெருங்காவலர், செந்தமிழ்ச்செல்வர் என்ற பட்டங்கள் வழங்கிக் கௌரவித்துள்ளன. அத்தகைய மூத்த மொழிக்கு இன்று நாடு இல்லா நிலையை திட்டமிட்டு ஆரியரும், ஈழ இனவாதிகளும் ஏற்படுத்தி வந்துள்ளனர், ஒரு மொழி வளம் பெற, விஞ்ஞான அறிவாற்றலை வளர்த்துப் பாதுகாக்க நாடும் அரசும் அவசியம் என்பதனை உலகெலாம் பரந்து வாழும் தமிழினம் சிந்திக்க வேண்டும் செயலாற்ற முன்வர வேண்டும்.

தமிழ்மொழி சங்ககாலம் முதல் மூவேந்தர்களாலும் மன்னர்களாலும் போற்றிவளர்க்கப்பட்ட மொழியாகும். நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என இறைவனுடன் வாதாடிய சங்ககாலப்புலவர்களான நக்கீரன் போன்றோரால் இலக்கண, இலக்கிய செழுமையுடன் வளர்ந்த தமிழ்மொழி என்பதனால் பாதுகாக்க அரசு இல்லாத போதும் செழுமையாக உலகெலாம் வளர்ந்து சிறந்து இலங்குவதைக் காண்கிறோம். ஈழத்திலும் பன் நெடுங்காலமாக வளர்ந்து 1811 ஆண்டுவரை பண்டார வன்னிய மன்னன் காலம் வரை கொடியோடும், முடியோடும் அரசோச்சி, ஐரோப்பிய ஆக்கிரமிப்பால் இனவாதிகளின் காட்டிக் கொடுப்பாலும் தமிழ் எட்டப்பராலும் அரசிழக்க நேரிட்ட சம்பவம் வரலாற்று உண்மையாகும். 1948ல் பிரித்தானியர் திட்டமிட்டு தமிழராண்ட வட கிழக்கு அரசுரிமையை இனவாதிகளிடம் ஒப்படைத்தமையே இன்றுவரை தமிழின அழிவுகளுக்குக் காரணமாய் அமைந்தது. இனவாதிகள் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி வடகிழக்கின் மண்ணையும், சொத்துக்களையும் காலத்துக்குக்காலம் சூறையாடினர். முப்படைகளின் உதவியுடனும், வல்லரசுகளின் உதவியுடனும் உரிமைகளைப் பேணப் போராடிய அப்பாவித்தமிழர் பல இலட்சம் மக்கள் நாசகாரக் குண்டுகள் மூலம் கொன்றழித்த சோகம் நிறைந்த வரலாற்றை ஏன் என்று எந்த நாடும் கேட்கவில்லை. இதனால் தமிழினம் புலம் பெயர்ந்தது. ஐரோப்பிய நாடுகளில் புலம் பெயர்ந்தோரில் கணிசமானோர் யேர்மனியில் வாழ்கின்றனர். இவர்களின் எதிர்கால நல்வாழ்வு கருதி தாய் மொழிக்கல்வி, கலை, கலாச்சாரங்களை வளர்க்க வல்ல பாடசாலைகளை அமைத்துக் கல்விக்கழகம் என்ற அமைப்பு தமிழாலயம் என்ற பெயருடன் வளர்த்து வளம் பெருக்க இங்கு வாழ் மூத்த அறிஞர்கள் உதவினர். யேர்மனியில் வாழும் தமிழினம் இனமொழி உணர்வும் தாயகப் பற்றும் மிக்கவர்கள். அதனால், ஐரோப்பிய நாடுகளில் யேர்மனி தமிழ்மொழி கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியில் முன்னணி நாடாகவும் யேர்மன் மக்களால் பாராட்டப்படுகின்ற இனமாகவும் வாழ்கின்றமை பாராட்டுக்குரியதே! யேர்மனியில் ஆல் போலத் தளைத்து அறுகு போல் வேரூன்றிச் செழித்து 130 விழுதுகளைப் பரவலாக ஊன்றி நிமிர்ந்து நிற்கும் தமிழாலயங்களில் முன்சன் நகரமைந்த தமிழாலயமும் ஒன்றாகும்.

இவ்வாலயம் 19.02.1994ல் 08 மாணவர்களுடனும் 2 ஆசிரியர்களுடன் கல்விப்பணியினரால் ஆரம்பிக்கப்பட்டது. இதன் நிர்வாகியாக நாகராசா நிர்மலதாசன் நியமிக்கப்பட்டார். அன்று தொட்டு இன்றுவரை உணர்வோடு ஆலயத்தை வளர்த்து 281 மாணவ மணிகளையும் 22 ஆசிரியர்களையும் தன்னகத்தே கொண்டு தமிழாலயம் நிமிர்ந்து நிற்பது பாராட்டுக்குரியது. உதவி நிர்வாகியாக மாணவர் சார்லன் செல்வநாதன் பணியாற்றுகின்றார். பாலராண்டு முதல் 12ஆம் ஆண்டு வரை கற்பித்தல் நடைபெறுகின்றது. இங்கு பயிலும் மாணவமணிகள் உணர்வுமிக்கவர்கள். பொதுத்தேர்வு, தமிழ்த்திறன், விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொண்டு யேர்மனி ரீதியில் முதலாம், இரண்டாம் நிலைகளைப்பெற்றதுடன் தொடர்ந்து சில ஆண்டுகளாக விளையாட்டுபோட்டிகளில் முதல் நிலைகளையும் பெற்றுள்ளமை தமிழாலயத்துக்கும் முன்சன் நகரத்துக்கும் பெருமை சேர்த்துள்ளனர். இவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் மொழி உணர்வு, இன ஆர்வமும் மிக்கவர்கள். அதனால்தான், இம்மாணவர்கள் முதல் நிலையில் திகழ்கின்றார்கள். இங்கு வாழும் பெற்றார்கள் தமிழ்மொழிப் பற்று மிக்கவர்களாகவும், தம்பிள்ளைகள் எதிர் காலத்திலே தமிழர்களாக வாழவேண்டும் என்ற ஆதங்கம் மிக்கவர்களாக உயர்வாழ்வுவாழவேண்டும் என்ற ஆவலாலும் பலதுறைகளிலும் பல மொழிகளைக் கற்க வழிகாட்டி வருவது பாராட்டுக்குரியது. ஆர்வமுடன் பணியாற்றும் நிர்வாகம், மொழி இனப்பற்று உள்ள நல்லாசான்கள் உள்ளும் புறமும் ஆர்வமுடன் உதவும் ஆர்வலர்கள் அனைவரின் முயற்சியால் யேர்மனியிலேயே அதிக மாணவமணிகளைக் கொண்ட ஆலயமாகவும், முதற் தர ஆலயமாகவும் துலங்கி 09.07.2011ல் அகவை 17ன் நிறைவு விழா எடுப்பது பாராட்டுக்குரியதே. இந்நன்நாளிலே அனைவரையும் தமிழ்க் கல்விக் கழகத்தின் சார்பிலே பாராட்டி வாழ்த்துவதுடன் மேற்படிவிழாச் சிறப்பாக நடைபெற வேண்டி நல்லாசிகள் நல்கி அகம் மகிழ்கின்றேன்.

நன்றி

“கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு

மாடு அல்ல மற்றை யவை”

வாழ்க தமிழ் வளர்க தமிழாலயம்

திரு. இரா. நாகலிங்கம்

பொறுப்பாளர்

தமிழ்க் கல்விக் கழகம் – யேர்மனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கல்விக் கழகம் யேர்மனி

தமிழாலயங்களின் கல்வி, கலை, விளையாட்டு ஒருங்கிணைப்பு நடுவம்

# Tamilische Bildungsvereinigung e.V.

**Bildung, Kultur und Sport**

ஸ்ருற்காட், 09.07.2011

அன்புடையீர் !
வணக்கம்



மொழியும், கலையும், பண்பாடுமே ஒரு தேசிய இனத்தின் உயிர்ப்பைக்காட்டுகின்றன. தமிழின் தொன்மைக்கு நிகரான அதன் நிகழ்கால எதிர்கால வளர்ச்சி அமையவேண்டும். அவன் எங்கு வாழ நேரினும் அங்கெல்லாம் தனது இன, மொழி, பண்பாட்டு அடையாளங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்புக்கு உட்படுகின்றான். முன்சன் வாழ் தமிழ் மக்கள் இப்பணியைத் திறம்படச் செய்ததன் அறுவடையை அவர்களின் 17 வது அகவை நிறைவினூடாகக் காணும்போது பெருமிதம் அடைகின்றோம்.

கிளைகளென நினைத்து முறித்து எறியப்பட்டவர்கள் வேர்களாய் இறங்கி விளைந்து செழித்ததன் தகுதிச் சான்றே யேர்மனியில் தமிழாலயங்கள். எம் சிறார்கள் மொழியாலும், பண்பாடுகளாலும் இரட்டிப்புச் சுமைகளுக்கு மத்தியில் வாழ்கின்றார்கள். கிடைக்கும் ஓய்வு நேரங்களைத் தமது தாய்மொழிக் கல்விக்காகச் செலவிடுகின்றார்கள். இந்த முயற்சிகளினால் யேர்மன் பள்ளிகளிலும் தாம் வாழும் சமூகத்திலும் ஏனைய மாணவர்களைவிட அவர்கள் தம்மை முதன்மைப்படுத்தி நிற்பதையும் காண்கின்றோம். தமிழ்ப் பண்பாடுகளைத் தமது பிள்ளைகளுக்குக் கைமாற்றுச் செய்வதில் எமது பெற்றோர்களும் பல சிரமங்களையும் செலவீனங்களையும் சந்திக்கின்ற போதிலும் அவை அனைத்தையும் ஒரு சவாலாக ஏற்று எம்மோடு இணைந்து நின்று செயற்படுகின்றார்கள். பண்பட்ட நிலத்துப் பயிர் செழித்தோங்கும் என்பது பொய்யாமொழி. இந்த அடிப்படையில் முன்சன் நகரம் தலைசிறந்த களமாக அமைகின்றது.

ஒரு தமிழாலயம் தனது இலக்கை அடைவதற்கு நிர்வாகிகள், ஆசிரியர்களின் சேவை மிக அவசியமாகின்றது. அந்தவகையில் முன்சன் தமிழாலய ஆசிரியர்கள் கடந்த 17 ஆண்டுகளும் சேவை அடிப்படையில் தமிழினத்துக்குப் பல புத்திஜீவிகளையும், பண்பாளர்களையும் உருவாக்கித்தந்துள்ளனர். ஆசிரியர்களின் சிறந்த செயற்பாட்டுக்குச் சிகரம் வைத்தாற்போல முன்சன் தமிழாலயம் கடந்த 17 ஆண்டுகளுக்குள் கல்வித்தரத்திலும், விளையாட்டுத்திறனிலும் நாடுதழுவிய ரீதியில் சிறந்த நிலைக்கு வளர்ந்துள்ளது. ஆரம்பத்திலிருந்து நிர்வாகியாச் செயலாற்றும் திரு நாகராசா நிர்மலதாசன் அவர்களின் சிறப்பான செயற்பாடுகளும், பெற்றோர், ஆசிரியர்களின் ஒத்துழைப்புக்களையும் இந்த இனிய நாளில் மனம் நிறைந்து வாழ்த்துகின்றோம்.

கடந்த 21 ஆண்டுகளில் யேர்மனியில் தமிழர் வாழும் பகுதிகளில் ஆங்காங்கே 133 தமிழாலயங்களை அமைத்து 6500 க்கு மேற்பட்ட தமிழ்ச்சிறார்களுக்குத் தமிழ்பயிற்றுவித்துவரும் எமக்கு முன்சன் நகரில் வாழும் தமிழர்களின் அடுத்த சந்ததியினர் தமிழை மறந்து விடுவார்களோ என்ற அச்சம் 17 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது உண்மையே. இன்று அந்த அச்சம் தவிர்த்து மகிழ்கின்றோம். அதற்கு உங்கள் அனைவரின் உயர்ந்த பணியே பொறுப்பு. நாம் என்ன சேவை செய்கின்றோம் என்று புரிந்துகொண்டு அதை ஒழுங்காகச் செய்தாலே போதும். எல்லாம் நன்றாக அமையுமென்று கூறி முன்சன் தமிழாலயம் மேலும் சிறப்பாக வளர மனம் நிறைந்து வாழ்த்துகின்றேன்.

கல்வியும் கலையும் நம்மிருகண்கள் நல்தமிழ்மொழி எங்கள் உயிராகும்

நன்றி

செ.லோகன்.

பொறுப்பாளர்

செயலகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

*கனியிடை யேறிய சுளையும் -முற்றல்*
*கழையிடை யேறிய சாறும்*
*பனிமல ரேறிய தேனும் - காய்ச்சுப்*
*பாகிடை யேறிய சுவையும்*
*தனிகற வைபொழி பாலும் - தென்னை*
*நல்கிய குளிரிள நீரும்*
*இனியன என்பேன் எனினும் - **தமிழை***
***என்னுயிர் என்பேன் கண்டீர்.***

ஓர் இனத்துக்கும், அதன் பண்பாட்டுக்கும், நாகரிகத்துக்கும், நாட்டுக்கும் அடிப்படையாக இருப்பது மொழி. மொழிப்பற்று இல்லாதவருக்கு நாட்டுப் பற்றும் இருக்காது. மொழியில் பற்றுக் கொள்ளாத இனம், தன் மொழியையும் இழந்து நாட்டையும் இழந்து பண்பாட்டையும் இழந்து முகவரி இழந்து இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய்விடும். அப்படி அழிந்து ஒழிந்து போன வரலாறுகள் உலகில் பல உண்டு. மொழி இன்றேல் இனமில்லை என்பதறிந்து எம் இனம் வீழ்ந்து விடக்கூடாது என்ற உயரிய நோக்கத்துடன் பணியாற்றும் **முன்சன் தமிழாலய** நிர்வாகிகளையும் ஆசிரியர்களையும் மாணவர்களையும் அப்பள்ளியின் வளர்ச்சிக்கு உதவுகின்ற பெற்றோர்களையும் **தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை** வாழ்த்தி நிற்பதில் பெருமையடைகிறது.

இன்று 281 மாணவர்களையும் 22 ஆசிரியர்களையும் தன்னகத்தே கொண்டு பதினேழாவது அகவை நிறைவைக் கொண்டாடும் **'முன்சன் தமிழாலயம்' தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையினுடைய** நூல்களைப் பெற்றும் கல்வி மேம்பாட்டுப் பேரவை உலகளாவ நடத்துகின்ற தமிழ்மொழிப் பொதுத் தேர்வில் பங்கேற்றும் தன் தாய்மொழிப் பற்றையும் இனப் பற்றையும் வெளிக்காட்டி நிற்கிறது. தாய்மொழிக் கல்வியையும் தமிழ்க் கலையொழுக்க மரபு விழுமியங்களையும் எம் தமிழ்ச் சிறார்களுக்குக் கற்றுக் கொடுத்து நற்றமிழை மேம்படுத்த முழுமையான அர்ப்பணிப்போடு அயராது உழைக்கும் **முன்சன் தமிழாலயத்தின் ஆண்டுவிழா** சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றோம்.

எம் தமிழ் வளர்க்கும் பெரும்பணியில் பங்கேற்கும் அனைவரும் உறுதியுடன் செயற்படுவோம். தமிழ் வெல்லும். தரணியை ஆளும். எம்மை வாழவைக்கும். இதற்குத் தேவை எமக்கு நம்பிக்கையும் உறுதியும். இவை இரண்டையும் துணைக்கொண்டு உளஉரம் என்ற போராயுதத்தை ஏந்தி எதையும் வெல்வோம்.

நகுலேசுவரி அரியரத்தினம்
மேலாளர்
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**தமிழ் எங்கள் உயிர்ப்பின் இருப்பு**

***Siège: 2allèe Maurice audin 93390 Clichy sous bois FRANCE***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய தொண்டாற்றியவர்களை வாழ்த்துகின்றேன்




*' கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு*
*மாடல்ல மற்றை யவை.'*

நம் மழலைகள் புலம்பெயர்நாட்டில் வேற்று மொழிக் கலாச்சாரத்துள் வாழ்ந்தாலும், இந்தப் பிஞ்சு நெஞ்சங்களுக்குள் தளராத நம்பிக்கையுடன், அஞ்சாநெஞ்சத் துணிவூட்டி அழகுத்தமிழில் தாய்மொழிப்பற்றூட்டி, அந்த தமிழ்ப்பிஞ்சுகளைத் தமிழாலயம் என்ற சோலையில் ஒன்றிணைத்து, அக்குழந்தைகளுக்கு வள்ளுவன் தந்த தமிழ் உணர்வூட்டி, தாய்மொழியில் நாம்பெற்ற புலமைதான் அந்நிய மொழியிலும் புலமைபெற உரமூட்டும் என நினைவூட்டி, பாட்டோடு பொருளுமென இசையுடன் லயத்தையும் அபிநயத்துடன் சேர்த்தூட்டிய பெருமையுடன் உயர்ந்துநிற்கும் உங்கள் அனைவருக்கும் தமிழ்த்தாயின் சார்பிலும் புலம் பெயர் மக்கள் சார்பிலும் வாழ்த்துகின்றேன்.

தாய்மொழியைக் காத்திடும் பணியில் முன்சன் தமிழாலயம் 17ஆவது அகவையில் எட்டி நிற்பது மகிழ்வைத் தருகின்றது. சிரமங்களுக்கு மத்தியிலும், உணர்வோடு சிறப்பாகக் கற்பித்தலை முன்னெடுக்கும் ஆசிரியர்களுக்கும், எதிர்கால நலன் கருதி குழந்தைகளுக்குத் தமிழ்க்கல்வி புகட்டுவதில் ஆர்வம் காட்டும் பெற்றோர்கள், மற்றும் தமிழ் உணர்வாளர்களின் பணியினாலும் முன்சன் தமிழாலயம் உயர்ந்து நிற்பது பெருமையைத் தருகின்றது.

யேர்மன் ரீதியில் பல பரிசுகளைப் பெற்றிருக்கும் மாணவர்களைப் பாராட்டுவதுடன் தொடர்ந்து உங்கள் அனைவரினதும் பணிகள் வளர்ந்து செழிப்புற வாழ்த்துகின்றேன்.

நன்றி,
வாழ்க தமிழ், வளர்க தமிழாலயங்கள்!



தமிழ்த்திறன் பிரிவுப் பொறுப்பாளர்
தமிழ்க் கல்விக் கழகம் ~ யேர்மனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாகியின் கருத்துரை



யேர்மனியில் பல தமிழாலயங்களைத் தமிழ்ச் சிறார்களுக்காக உருவாக்கி, தமிழ் மொழியைப் பாதுகாத்து வருகின்றது தமிழ்க் கல்விக் கழகம். இக் கழகத்தின் 65வது தமிழாலயமாக நாம் 19.02.1994 அன்று இணைத்துக்கொள்ளப்பட்டோம். அன்றைய ஆரம்ப நாளில் எம் நகரச் செயற்பாட்டாளர்களாலும் உலகத் தமிழர் இயக்கத்தினால் நிர்வாகப் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தனர். எட்டு மாணவர்களுடனும் இரண்டு ஆசிரியர்களுடனும் ஆரம்பிக்கப்பட்ட எமது தமிழாலயம் அனைவரின் ஒன்றிணைந்த செயற்பாடுகளினால் 281 மாணவர்களைக் கொண்ட மிகப் பெரிய தமிழாலயமாக உருவாக்கப்பட்டுள்ளது.

இவ் வளர்ச்சியை எட்டுவதற்கு எமது பெற்றோர்களின் மொழியினப் பற்றும் ஒத்துழைப்பும் புரிந்துணர்வும் முக்கியமானதாகும். எமது ஆசிரியர்களின் பணி வியக்கத்தக்கது. இயந்திர வாழ்விற்குள்ளும் கற்பித்தலுக்காகத் தங்களை அர்ப்பணிப்பதோடு, கடந்த ஆண்டுகளில் இடப்பற்றாக்குறை, ஆசிரியர் போதாமை, எல்லாச் செயற்பாடுகளுக்கும் தொலைதூரம் செல்ல வேண்டிய தேவை என்பனவற்றிற்கும் முகம் கொடுத்து எமது செயற்பாடுகளைத் தாங்கிச் செய்யும் தன்மை உறுதுணையாக அமைந்தது.

எமது மாணவர்களே தமிழாலயத்தின் ஆதார சக்திகள். இம் மாணவர்கள் தாய் மொழியைக் கற்பதோடு நின்று விடாமல் பல கலைகளையும் கற்று கல்வியும் கலையும் நம்மிரு கண்கள் என நிரூபித்து வருகின்றார்கள். இத்துடன் விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபற்றித் தங்களின் திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றார்கள். எமது தமிழாலய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களின் இணைந்த உழைப்பிற்குக் கிடைத்த வெற்றிகளையும் சமகாலப் பதிவுகளையும் எமது இந்த இரண்டாவது மலர் தாங்கி நிற்கின்றது.

எதிர்காலத்தில் எமது தமிழாலயம் மேலும் வளர்ச்சியடைய வேண்டுமானால் வளர்ந்த மாணவர்களின் ஒத்துழைப்பிலேயே தங்கியுள்ளது. கற்பித்தலுக்கும் நிர்வாகச் செயற்பாடுகளுக்கும் உதவி வரும் மாணவர்களின் தொகை பன்மடங்காக்கப்பட வேண்டும். பெற்றோர்கள் தயவு செய்து இப்பணியைப் புரிந்துகொண்டு தங்கள் பிள்ளைகளைத் தயார்படுத்தி உதவ வேண்டும். தமிழாலயத்திடம் இணைந்து செயலாற்றும் மாணவர், ஆசிரியர், பெற்றோர்கள் பணியாளர்கள் அனைவரின் ஒத்துழைப்புக்கும் அன்பிற்கும் நன்றி கூறுகின்றேன்.

**மொழி இன்றேல் இனமில்லை. எமது மாணவச் செல்வங்களின் வாழ்வு சிறக்க அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்படுவோம்.**


நாகராசா நிர்மலதாசன்
நிர்வாகி
தமிழாலயம் முன்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழாலய நிர்வாகம்



நிர்வாகி
நாகராசா நிர்மலதாசன்



உதவி நிர்வாகி
சார்லன் செல்வநாதன்



பெற்றோர் பிரதிநிதி
விமலாதேவி நவராசா



நிதிப் பிரிவு
நந்தினிதேவி செல்வபாஸ்கரன்



கல்விப் பிரிவு
சிவபாதசுந்தரம் இளவழகன்



தேர்வுப் பிரிவு
றஜிகலா சிறீகாந்தன்



தமிழ்த்திறன் பிரிவு
ரஞ்சினி ரவீந்திரன்



கலைப் பிரிவு
தனேஸ்வரி சண்முகராசா



பாடநூல் பிரிவு
சிவாஜினி நகுலேந்திரன்



மாணவர் பிரதிநிதி
கீர்த்தனன் உலகநாதன்

## நிர்வாகப் பணிகளுக்கு உதவும் மாணவர்கள்:



பார்த்தீபன் குகதரன்



டிலக்‌ஷன் சோதிலிங்கம்



பிரகாஷ் முருகையா



அகிலன் இராசதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்க் கல்விக் கழகம் - யேர்மனி
தமிழாலயங்களின் கல்வி,கலை,விளையாட்டு ஒருங்கிணைப்பு நடுவம்
Tamilische Bildungsvereinigung e.V.
Bildung, Kultur und Sport



## தமிழ் மொழி வளர்க்கும் தமிழாலயமே நீ வாழ்க!

தமிழன் இல்லாத நாடு இல்லை ஆனால் தமிழனுக்கு என்று ஒரு நாடு இல்லை. தமிழன் புலம் பெயர்ந்து அந்நிய நாடுகளில் வாழ்ந்தாலும் தமது மொழி கலை கலாச்சாரத்துடன் வாழவேண்டும் என்பதற்காக 21 வருடங்களுக்கு முன்பு யேர்மனியில் தமிழாலயங்கள் பரவலாக ஆரம்பிக்கப்பட்டன. முன்சன் நகரிலும் 17 வருடங்களுக்கு முன்பு 8 மாணவர்களுடனும் 2 ஆசிரியர்களுடனும் ஆரம்பிக்கப்பட்டதுதான் முன்சன் தமிழாலயம்.

தமது பிள்ளைகளுக்குத் தாய்மொழியைக் கற்பிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்கள் தன்னலமற்ற ஆசிரியர்கள் சிறந்த நிர்வாகி ஆகியோரின் அயரா உழைப்பினால் இத்தமிழாலயம் இன்று 281 மாணவர்கள் 20 ஆசிரியர்கள் 3 உதவி ஆசிரியர்கள் 4 கலைப்பிரிவு ஆசிரியர்களுடன் யேர்மனியின் மிகப் பெரிய தமிழாலயமாக விளங்குகின்றது.

கடந்த 17 ஆண்டுக் காலத்தில் இத்தமிழாலயம் பல சாதனைகளைப் படைத்துள்ளது. இங்கு தமிழ் பயிலும் மாணவர்கள் பொதுப் பரீட்சை தமிழ்த்திறன் போட்டி விளையாட்டுப் போட்டி போன்றவற்றில் பங்கு பற்றி மாநில ரீதியாகவும் யேர்மன் ரீதியாகவும் பல பரிசில்களைப் பெற்று பெருமை தேடித்தந்துள்ளனர்.

இத்தமிழாலயம் பொதுப்பரீட்சை தமிழ்த்திறன் போட்டி என்பவற்றில் யேர்மன் ரீதியாக முதல் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத் தக்கதாகும். இத்தகைய பெருமைகளைக் கொண்ட தமிழாலயம் தென்மாநிலத்தில் இருப்பதையிட்டு நான் மிகவும் பெருமையடைகின்றேன். இங்கு இளையவர்கள் ஆசிரியர்களாகவும் உதவி ஆசிரியர் உதவிநிர்வாகியாகவும் செயலாற்றுவது மகிழ்ச்சியளிக்கிறது.

முன்சன் தமிழாலய மாணவர்கள் ஆசிரியர்கள் நிர்வாகிகள் பெற்றோர்கள் அனைவரினதும் ஒன்றுபட்ட உழைப்பினால் இத்தமிழாலயம் சகல துறைகளிலும் யேர்மன் ரீதியில் முதன்மையான தமிழாலயமாக வளர எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி
விமலாதேவி லோகேஸ்வரன்
தென்மாநிலச் செயற்பாட்டாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை பதினேழில் அன்னைத்தமிழ் வளர்க்கும்

# முன்சன் தமிழாலயம்



தரணி எங்கும் தமிழ் மணம் பரப்பி - என்றும்

தன்னிகரற்ற தாய் மொழியாம் எம் தமிழை

உலகெங்கும் தளைத்திடச் செய்து - எங்கும்

தமிழர் புகழ் பரப்பி அவர்தம் தலை நிமிர

தடைகள் பல தாண்டி தளராத சேவையாற்றி - இன்று

அகவை பதினேழில் அகமகிழ்ந்து விழாக் காணும் - எம்

முன்சன் தமிழாலயம் மேலும் சிறப்புற வாழ்த்தி - என்றும்

முத்தமிழ் வளர்த்து எம் முன்னோர் புகழுரைத்து

தமிழர் தம் பண்பாட்டு கலாச்சார விழுமியங்களோடு

மறத்தமிழன் வீரத்தையும் அவர்தம் வரலாறுகளையும்

எம்மிளம் பரம்பரைக்கு இனிதாக எடுத்துரைத்து - மேலும்

பற்பல பணி செய்து தளைத்தோங்க - என்றும்

வாழ்த்துகின்றேன் வரலாறு படைத்திடுக.

நன்றி.

நல்லையா சிறிகாந்தன்
தமிழர் சம உரிமைக்கான மையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமுதான மொழியான தமிழ் எங்கள் உயிரே!**
**அழியாமல் காத்துநிற்கும் தமிழாலயம் நமதே!**

தேன்சுவையில் தெவிட்டாத செம்மொழியாம் தமிழ்மொழிக்குச் சொந்தக்காரர்களான நாங்கள் புலம்பெயர்ந்து உலகமெல்லாம் பரவி வாழுகின்ற இந்தச் சூழலில் எமது வருங்காலச் சந்ததியினராகிய இளம் பிள்ளைகள் தமிழ்மொழியைப் பேசவும் அந்த மொழியின் சிறப்புகளைத் தெரிந்து கொண்டு அதைப் பேணிப் பாதுகாத்து உலகத்தில் தமிழராகத் தலை நிமிர்ந்து வாழ்வதற்கும் தமிழ்க் கல்விக் கழகம் அளப்பரிய சேவையாற்றி வருகின்றது. அந்தவகையில், யேர்மனியில் முன்சன் பெருநகரில் அமைந்துள்ள எமது தமிழாலயம் கடந்த 17 வருடங்களாக எமது சிறார்களுக்குச் செய்து வரும் கல்விச் சேவை அளப்பரியது-பாராட்டுக்குரியது. எமது இளைய தலைமுறையினர் தாய்மொழியைப் பயின்று தமிழ்மொழிப் புலமை பெற்றவர்களாகவும் தமிழ் இலக்கியம், தமிழர்பண்பாடு, தமிழர் கலை முதலியவற்றை அறிந்து அதன்படி ஒழுக்கசீலர்களாக வாழ்வதும் இனி வருங்காலச் சந்ததியினரும் இதைப் பேணிப் பாதுகாத்து வர, தொடர்ந்து கல்விப் பணியாற்றி வருவதும் நம்பிக்கைக்குரியதும் போற்றப்படவேண்டியதுமாகும்.

இந்த மாபெரும் பணியை அயராது செய்துவரும் முன்சன் தமிழாலய நிர்வாகி திரு. நாகராசா நிர்மலதாசன் அவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களாகிய நாங்கள் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றோம். சக பெற்றோர்களின் ஊக்குவிப்பும் அர்ப்பணிப்பும் தமிழாலயம் வளர மேலும் உறுதுணையாய் இருந்ததையிட்டுப் பெற்றோர் சார்பில் மனநிறைவும் மகிழ்ச்சியும் அடைகிறேன். இனிவரும் காலங்களிலும் பெற்றோர்களாகிய நாங்கள் நிர்வாகி ஆசிரியர்களுடன் இணைந்து செயற்பட்டு, தமிழாலயத்தின் வளர்ச்சிக்கும் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்கும் உறுதுணையாக இருப்போம் - இனிய தமிழை வளர்ப்போம் என்று திடசங்கற்பம் பூண்டு அகத்திலும் புலத்திலும் வாழும் தமிழ்மக்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு நேசித்து வாழ்வதற்குத் தாய்மொழி அறிவு அவசியம் என்பதும் அதைவிட, நாம் தமிழர் என்ற அடையாளத்தை நிலைநிறுத்தத் தாய்மொழித்தேர்ச்சி அவசியம் என்பதையும் உணருகின்றோம். எனவே, இவற்றை மனதில் இருத்தி எமது வருங்காலச் செயற்பாடுகளை நிறைவேற்றுவோம் என்ற நம்பிக்கையோடு இந்தப் 17வது ஆண்டு நிறைவு விழா வெற்றி விழாவாக அமைய வாழ்த்துகிறேன்.

திருமதி விமலாதேவி நவராசா

பெற்றோர் பிரதிநிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழாலய மாணவர்களுடன் ஆசிரியர்களும் நிர்வாகிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த காலங்களில் யேர்மனியில் உள்ள தமிழாலயங்களுக்குள் எமது முன்சன் தமிழாலயத்தின் வெற்றி நிலை

| ஆண்டு | பொதுத்தேர்வு தமிழ் | தமிழ்த்திறன் போட்டி | மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டி (தென்மாநிலம்) |
|---|---|---|---|
| 2005 | | 3 | 1 |
| 2006 | 2 | 2 | 1 |
| 2007 | 2 | 2 | 2 |
| 2008 | 1 | 2 | 1 |
| 2009 | | 1 | |
| 2010 | | 2 | |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது முன்சன் தமிழாலய ஆசிரியர்கள்



இ - வ: திருமதி பகீரதி ஆனந்தசிங்கம். திருமதி பிறேமினி செல்வரட்ணம். திருமதி சரோஜநாயகி அம்மா இரத்தினம். திருமதி சிவாஜினி நகுலேந்திரன். திருமதி சரஸ்வதி நிர்மலதாசன் திருமதி இரத்தினமலர் மாணிக்கராஜா. திருமதி அபிராமி கனகலிங்கம். திருமதி மோகனராணி கந்தசாமி. திருமதி சிவாசினி சிவானந்தம். திருமதி நந்தினிதேவி செல்வபாஸ்கரன் திருமதி இரதிகலா விஷ்ணுதாஸ். திருமதி றஜீகலா சிறீகாந்தன். திருமதி டெனிசியா பீற்றர் தோமஸ்பிள்ளை. திருமதி ரோகினி சிவானந்தராஜா. திருமதி ஜெகதீஸ்வரி இராமதாஸ் திருமதி ரஞ்சினி ரவீந்திரன். திருமதி சுதாஜினி இராஜலிங்கம்

சமூகமளிக்காதோர்: திரு சிவபாதசுந்தரம் இளவழகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது தமிழாலயத்தில் மாணவச் செல்வங்களுக்குத் தற்போது தமிழ் அறிவூட்டும் ஆசான்கள்

1. திருமதி நந்தினிதேவி செல்வபாஸ்கரன்
2. திருமதி சரஸ்வதி நிர்மலதாசன்
3. திருமதி இரத்தினமலர் மாணிக்கராஜா
4. திருமதி மோகனராணி கந்தசாமி
5. திருமதி சிவாஜினி நகுலேந்திரன்
6. திருமதி றஜிகலா சிறீகாந்தன்
7. திரு சிவபாதசுந்தரம் இளவழகன்
8. திருமதி அபிராமி கனகலிங்கம்
9. திருமதி இரதிகலா விஷ்ணுதாஸ்
10. திருமதி சரோஜநாயகி அம்மா இரத்தினம்
11. திருமதி ரோகினி சிவானந்தராஜா
12. திருமதி ரஞசினி ரவீந்திரன்
13. திருமதி பகீரதி ஆனந்தசிங்கம்
14. திருமதி பிறேமினி செல்வரட்ணம்
15. திருமதி சிவாசினி சிவானந்தம்
16. திருமதி சுதாஜினி இராஜலிங்கம்
17. திருமதி டெனிசியா பீற்றர் தோமஸ்பிள்ளை
18. திருமதி ஜெகதீஸ்வரி இராமதாஸ்

முன்சன் தமிழாலயத்தில் எமது மாணவச் செல்வங்களுக்குத் தமிழறிவு ஊட்டிய ஆசிரியர்கள்

1. திருமதி பத்மாவதி சிவநாதன்
2. திருமதி சுகந்தினி நகுலேஸ்வரன்
3. செல்வி சிவதர்ஷினி சிவநாதன்
4. திருமதி பிரமிளா சுரேஸ்குமார்
5. திருமதி பாலராசேஸ்வரி நித்தியராஜா
6. திருமதி தயேந்தினி கண்ணன்
7. திருமதி வனித்தா விஜயகுமாரன்
8. திருமதி ரேணுகாதேவி பாஸ்கரன்
9. திருமதி ஜகிலா புவீந்திரகுமார்

முன்பு சேவையில் இருந்த கலையாசிரியர்கள்

திருமதி வானதி தேசிங்குராஜா
திருமதி பிரியந்தினி குணரட்னம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## என்னை வழி நடாத்திய தமிழாலயம்

மொழியானது ஆரம்ப காலங்களில் மனிதன் தனது எண்ணங்களை வெளிப்படுத்திப் பரிமாறுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. அதனூடாகவே ஆதிமனிதன் நகர வாழ்க்கை முறையில் நுழைந்தான். இன்றோ ஒரு மொழி ஓர் இனத்திற்குரிய அடையாளமாக விளங்கி நிற்கின்றது. ஆகையால், ஒவ்வொரு குழந்தையும் தனது தாய்மொழியை அறிந்திருப்பது அவசியமானது. உலகெங்கும் பரந்து வாழும் எம் தமிழினத்திற்குத் தற்காலத்திலுள்ள அதிமுக்கியமான கடமை எம் அடையாளமான தாய்மொழியைப் பேணிக்காப்பதே ஆகும்.

அவ்வகையில் புலம்பெயர் மண்ணான யேர்மன் நாட்டிலே வளர்ந்து வரும் எம்போன்ற இளந்தலைமுறையினருக்குத் தாய்மொழியாம் தமிழ்மொழியைக் கற்பிக்கும் பணியில் 21 வருடங்களுக்கு மேல், தமிழ்க் கல்விக் கழகமும் பதினேழு வருடங்களாக அதன் தமிழாலயங்களில் ஒன்றான எம் முன்சன் தமிழாலயமும் வெற்றிகரமாகச் செயலாற்றி வருகின்றது. யேர்மனியில் அதிக மாணவரெண்ணிக்கையுடன் பல வெற்றிகளைக் கண்ட எமது முன்சன் தமிழாலயம் இன்று தனது 17வது ஆண்டு நிறைவை விழாவெடுத்துச் சிறப்பாகக் கொண்டாடுகிறது.

முன்சன் தமிழாலயத்தில் நானும் நான்கு வயதுச் சிறுமியாக அன்றைய பாலர் ஆண்டில் காலடிவைத்துத் தற்போது 12ஆம் இறுதியாண்டு வரை எமது தாய்மொழியைக் கற்றுவந்துள்ளேன் என்பதில் பெருமையடைகிறேன். அத்துடன் நடனம், வாய்ப்பாட்டு, வீணை ஆகிய கலைகளைப் பயில்வதற்கும் தமிழ்த்திறன் போட்டி, விளையாட்டுப் போட்டி போன்ற நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்கும் இத்தமிழாலயம் எனக்கு வாய்ப்பளித்தது. சிலசமயங்களில் யேர்மன் மொழியில் பல்வேறு இலக்கண, இலக்கிய விடயங்கள் தமிழுடனும் ஒத்ததாகவும் வேறுபட்டதாகவும் இருப்பதை இனங்கண்டு, பாடத்திட்டங்களை இலகுவாகப் புரிந்துகொண்டேன். சமூகக்கல்வியில் கற்ற பலவிடயங்கள் யேர்மன் பள்ளியில் அவற்றைக் கற்கும்போது முன்னுதவியாக அமைந்திருந்தன.

முக்கியமாக, நான் தமிழாலயம் சென்றதனூடாகத் தாய்மொழி ஆற்றல் மட்டுமல்லாமல் தமிழருக்குரிய பண்பாடுகள், நல்லொழுக்கம், பொறுப்புணர்ச்சி, எமக்கிடையே ஒற்றுமையுணர்வு போன்ற நல்வழிப்பேறுகளைக் கண்டறிந்தேன். அந்த வகையில் இத்தனை ஆண்டுகளாக அன்புசெலுத்தித் தமிழூட்டிய அனைத்து ஆசிரியப் பெருமக்களுக்கும் மற்றும் 17 ஆண்டுகளாகச் சலிக்காது பணியாற்றிவரும் முன்சன் தமிழாலயத்தின் நிர்வாகியான எங்கள் 'நிர்மலன் மாமா' விற்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்து, மேலும் பலவருடங்களுக்கு எமது தமிழாலயம் வெற்றிகரமாக நிலைத்து நிற்க வாழ்த்துகிறேன். இத்துடன் முடிக்காமல், நான் கற்ற தாய்மொழிக் கல்வியை அடுத்து வரும் மழலைகளுக்கும் கற்பிக்கும் ஆசிரியையாக இத்தமிழாலயத்தில் செயலாற்றுவேன். இது என்னுடைய கடமையாகும்.

**'கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக'**

தமிழாலயத்தினூடாகப் பெறக்கூடிய நன்மைகளைக் கற்று அவற்றை வாழ்க்கைக்குத் தக்கவாறு பயன்படுத்துவோம்!

செல்வி கயல்விழி நவராசா

ஆண்டு 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் செய்ய விரும்பும் சாதனைகள்

எனது பெயர் ராதுயன் ரமேஷ்குமார். நான் நான்காம் வகுப்பில் கல்வி கற்கிறேன். எனது வயது 10. நான் விண்ணுந்து பொறியியலாளராக வர விரும்புகிறேன். இந்த உலகத்தில் பிறந்த எவரும் ஏதாவது ஒரு சாதனை படைக்க வேண்டும். நான் ஒரு விண்ணுந்துப் பொறியியலாளராக வந்து புதிய கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடிக்க விரும்புகிறேன். இந்த உலகத்தில் பிறந்த குழந்தைகள் ஒவ்வொருவரும் தீயவராவதும் நல்லவராவதும் பெற்றோர்களின் வளர்ப்பினிலேயே எனப் பெரியோர்கள் கூறியுள்ளனர். அதேபோல் நான் இந்த உலகத்தில் பெரிய பெரிய சாதனைகளைப் படைத்து, என் பெற்றோர்களைப் பெருமைப்படுத்த விரும்புகிறேன். சகல மாணவர்களுக்கும் நான் கூறுவது என்னவெனில், எமது வாழ்க்கையில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்றும் உறுதியோடு வாழ வேண்டும் என்றும் கூறுகிறேன்.

செல்வன் ராதுயன் ரமேஷ்குமார்

வளர்நிலை - 4

மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டின் போது மாணவர்களும் பெற்றோர்களும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி காவு

எமது தமிழினம் இருபதாம் நூற்றாண்டுக்கும் முன்பே பல கொடுமைகளையும், சண்டைகளையும் எதிர்கொண்டது. ஆனால், எமக்கு எதிராக இருக்கும் சிங்கள அரசு சூழ்ச்சிகளைச் செய்து தமிழரை அடிமையாக்கியது. தமிழர் உரிமைகளைக் கேட்கும் போது அவர்களுக்குக் கடுமையான கொடுமைகளைக் கொடுத்தது சிங்களம். இனவெறியாலும் மொழி மதவெறியாலும் கட்டுண்ட சிங்களம், தமிழீழத்தில் தன்னினத்தைக் குடியேற்றியது.

சிங்கள அரசுக்கு உதவிய நாடுகள் பலபல. இரண்டாம் உலகப்போரில் கூட சம்பந்தப்படாத, வரலாற்றில் கூட ஒன்று சேர்ந்து நின்றது எனக் கேள்விப்படாத நாடுகள் ஒன்று சேர்ந்து எமது தமிழினத்தை அழிக்க முன் வந்தன. சீனா, இந்தியா, பாகிஸ்தான் என்பன இந் நாடுகள். இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் சண்டை மட்டும் தான். ஆனால், தமிழ் மண்ணை அழிப்பது என்றால், இரண்டு நாடுகளும் ஒன்று கூடிவிட்டன. இந்தியாவில் தமிழ் ஆட்சியாளர்கள் இருந்தும் எமக்கு உதவாமல் சிங்கள இனத்துக்கு உதவி செய்து, தமிழீழத்துக்குத் துரோகம் செய்தனர்.

இந்தியா ஆயுதங்களைச் சிங்கள அரசாங்கத்திடம் கொடுத்தது. பல கருவிகளைக் கொடுத்து உதவியது. மக்கள் எங்கிருக்கின்றார்கள் எனக் காட்டும் கருவிகளைக் கொடுத்தது. குண்டுகள், ஆயுதங்கள், நவீன கருவிகள் எனப் பலவிதத்திலும் கொடுத்துத் தமிழினத்தைக் கொச்சைப்படுத்தியது. தமிழர் நாம் எமது உரிமைகளுக்காகப் போராடக் கொத்துக் குண்டுகளும் கொடுமைகளும் கிடைத்தன.

மக்கள் பலவிதமாக அழிக்கப்பட்டனர். கர்ப்பிணிப்பெண்கள் கொன்று குவிக்கப்பட்டனர். சிசுக்கள் அழிக்கப்பட்டனர். சிறுவர்கள் பல கொடுமைகளைத் தாங்க வேண்டி வந்தது. பாடசாலைக்குச் செல்லமுடியவில்லை, உணவு உண்ண வாய்ப்பில்லை; உணவைக் காணவே முடியாது. பெண்கள் பல வேலைகள் செய்ய வேண்டிய கட்டாயம், முதியோர் நோய்வாய்ப்பட்டு மருத்துவ வசதியின்றி இறந்தனர். மன நோயாளர்கள் பலர் உருவாகினர். எல்லாச் சொந்தங்களையும் இழந்து மனம் பாதிக்கப்பட்டு பலர் மனநோயாளர்கள் ஆயினர். அழிந்த மக்களின் தொகை எண்ணில் அடங்காது. உடலுறுப்புகள் இழந்த மக்கள் பல ஆயிரம். சிங்கள அரசானது எல்லாம் கொடுக்கிறேன் என்று ஐக்கிய நாடுகள் சபைக்குக் கூறினாலும், உறவுகளையும் உறுப்புகளையும் திருப்பித் தர முடியுமா?... இல்லை. உறவுகளின் அன்பையும், உரிமைகளையும் திருப்பித் தரமுடியாது.

சரணடைந்த மக்களின் நிலைமை மிகவும் மோசமானது. கொடுமைகள் தாங்க முடியாது. அது மிகவும் மோசமானது. சிங்கள அரசு சரணடைந்த மக்களை அலைய வைத்தது. ஐக்கிய நாடுகள் சபைக்கு "இவர்களை நாம் கவனமாக மனித உரிமைகளைக் கொடுத்து ஆதரிக்கின்றோம்" எனச் சொன்னாலும் எமக்குத் தெரியும்–அது நடக்காதென்று. முதியோர், சிறியோர் என எல்லோரும் கொடுமைக்குள் வாழ்கின்றனர். அவர்கள் உணவு இல்லாமல் இருப்பார்கள். உடை இல்லாமல் சில நேரம் இருக்க வேண்டும் எனச் சிங்களஅரசு கூறும். இதிலிருந்து தப்பிக்க முயன்றால் கொலைதான்! சிங்கள அரசு செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களம் பல கொலைகள் செய்ததால் அவர்களுக்குப் பயம் என்பது இல்லை. கொலை என்றால் முகாமிலும் சிறையிலும் சகசம். தமிழர் கொலைகள் எண்ணற்றது. முகாமில் வசதிகள் இல்லை. பெண்கள் பல சித்திரவதைக்குள் சிக்கிக் கொண்டனர். குழந்தைகளும் கொடுமைகளை எதிர்கொண்டனர். "இவற்றை எதிர்த்தால் கொலைதான் மருந்து" எனச் சிங்கள அரசு கூறும். ஆண்களை நிற்க விட்டு, பின்னர் சுட்டுத் தள்ளுவார்கள். சிறுவர் உணவைக் கேட்டால், மறுநாள் உணவைக்கூடக் கொடுக்க மறுக்கும் சிங்களம்.

தமிழினம் இந்நிலையை விட்டுவர ஆண்டவன் அருளளிப்பார். சிங்கள அரசு அழிந்து போகும். தமிழ் உயரும்! தமிழீழம் மலரும்! இது தமிழ் மக்களின் கனவு மட்டுமன்றி தமிழ்த்தாயின் கொள்கையுமாகும்.

செல்வி சன்னிதி பரமலிங்கம்

ஆண்டு - 11

2008 – 2009 கல்வியாண்டில் புதிதாக மாணவர்களைச் சேர்க்கப்பட்ட போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Grußwort**

**von Manfred Bosl, des Vorstands der InitiativGruppe e.V.**



Im Jahre 1994 wurde die tamilische Schule in München gegründet. Das Ziel des tamilischen Schulverein ist, den Kindern und Jugendlichen die Sprache und Kultur des Heimatlandes zu vermitteln. Darüber hinaus erstreckt sich der Unterricht für die Schülerinnen und Schüler auf die kulturelle Bildung (z.B. Musik und Tanz) sowie auf sportliche Aktivitäten. Dem Verein ist zudem an interkultureller Verständigung gelegen und er hält Kontakte zu Herkunftsland aufrecht. Ehrenamtlich tätige Eltern organisieren mit großer Tatkraft das Schulgeschehen in ihrer Freizeit und an den Wochenenden. Für dieses große Engagement gebührt den Eltern den Verantwortlichen des Vereins unser Respekt und unser Dank.

Die Tamilsche Schule ist durch ihren gesellschaftlichen, Beitrag im besten Sinne Teil des multikulturellen Deutschlands. Durch Ihre öffentlichen Veranstaltungen-wie beispielsweise der Schuljahresfeier 2011 – tragen Sie wesentlich zum positiven Erscheinungsbild Ihrer Volksgruppe bei. Als erfahrene Integrationseinrichtung in München ist die InitiativGruppe e.V. überzeugt, dass die Bildungsorientierung der tamilischen Schule auch Auswirkungen auf den Schulerfolge der tamilischen Kinder in den deutschen Schulen hat. Die Unterstützung der Eltern während der schulischen und beruflichen Ausbildung ihrer Kinder ist von überragender Bedeutung. Durch die Existenz der tamilischen Schule steht den Eltern ein wichtiger Partner in Erziehungs- und Bildungsgelegenheiten ihrer Kinder zur Verfügung.

IG - InitiativGruppe
Interkulturelle Begegnung und Bildung e.V.

Als Vorstand der InitiativGruppe e.V. (IG) wünsche ich nun dem tamilischen Schulverein weiterhin viel Erfolg bei seiner wertvollen interkulturellen und integrativen Arbeit. Zugleich hoffe ich auf eine weiterhin gute Zusammenarbeit. Die IG wird in diesem Jahr (Oktober) ihr 40-jähriges Bestehen feiern und darf Ihren Verein schon heute zu diesem Ereignis sehr herzlich einladen.

Mit freundlichen Grüßen

**Manfred Bosl**

Geschäftsführender Vorstand

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**2005ம் ஆண்டு தொடக்கம் 2010 வரை முன்சன் தமிழாலயத்தில் ஆண்டு 11 வரை கல்வி பயின்று தமது கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவ மாணவிகள்**

2005 செல்வி சிவதர்சினி சிவநாதன்

2007 செல்வன் வீணாகரன் இராஜலிங்கம்

2007 செல்வன் சிவதர்சன் சிவநாதன்

2008 செல்வன் டிலக்ஷன் சோதிலிங்கம்

2008 செல்வன் சுஜிந்தன் விவேகானந்தன்

2009 செல்வன் பார்த்தீபன் குகதரன்

2009 செல்வன் சார்லன் செல்வநாதன்

2009 செல்வன் நிரோஷன் விவேகானந்தன்

2010 செல்வி கயல்விழி நவராசா

2010 செல்வி வைஷ்ணவி விஷ்ணுதாஸ்

2010 செல்வன் விஸ்ணுகரன் இராஜலிங்கம்


2010 செல்வி சாதணா சிவராசா

2010 செல்வன் அனுஷன் குணசேகரம்

2010 செல்வன் ரவிந்தன் ரவிச்சந்திரன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**2004ம் ஆண்டு தொடக்கம் 2010 வரையான காலப்பகுதியில் தமிழ்க்கல்விக் கழகத்தினால் நடாத்தப்பட்ட தமிழ்மொழி, சுற்றாடல்–சமூகக்கல்வி ஆகிய பாடங்களில் பொதுத்தேர்வில் யேர்மன் ரீதியில் வகுப்பு ரீதியாக அதிக புள்ளிகளைப் பெற்ற எமது தமிழாலய மாணவர்கள்**



விதுர்சன் சுரேஸ்குமார்

2005 (வளர்நிலை 1) தமிழ்மொழி 2ம் இடம்
2006 (வளர்நிலை 2) தமிழ்மொழி 2ம் இடம்
2007 (வளர்நிலை 3) தமிழ்மொழி 1ம் இடம்
2008 (வளர்நிலை 4) சுற்றாடற்கல்வி 3ம் இடம்




டிரும்ஜா பீற்றர் நொலெஸி

2005 (வளர்நிலை 2) சுற்றாடல் 2ம் இடம்



தயாளினி சிவலோகானந்தன்

2006 (வளர்நிலை 2) தமிழ்மொழி 1ம் இடம்



நிசாந் நந்தகுமார்

2006 (வளர்நிலை 6) சுற்றாடல் 3ம் இடம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பானுசா சற்குணநாதன்

2007 (வளர்நிலை 2) தமிழ்மொழி 2ம் இடம்



மயூறன் சுரேந்திரன்

2007 (வளர்நிலை 6) சுற்றாடல் 3ம் இடம்



நிதுர்சன் நந்தகுமார்

2008 (வளர்நிலை 6) தமிழ்மொழி 1ம் இடம்

2009 (வளர்நிலை 7) தமிழ்மொழி 2ம் இடம்



தர்சிக்கா கனகலிங்கம்

2008 (வளர்நிலை 6) தமிழ்மொழி 3ம் இடம்

சுற்றாடல் 3ம் இடம்



தமிழினி நிர்மலதாசன்

2008 (வர்நிலை 3) தமிழ்மொழி 1ம் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சியாமி கண்ணன்

2008 (வளர்நிலை 1) தமிழ்மொழி 1ம் இடம்



ராதுயன் ரமேஸ்குமார்

2008 (வளர்நிலை 1) தமிழ்மொழி 3ம் இடம்



கஜிபன் சிவபாலசிங்கம்

2009 (வளர்நிலை 2) சுற்றாடல் 2ம் இடம்



ஆரணி கணேசலிங்கம்

2010 (வளர்நிலை 2) சுற்றாடல் 3ம் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்க் கல்விக் கழகத்தின் 20வது ஆண்டு விழாவின்போது எமது தமிழாலயம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேர்வுப்பிரிவு

புலம்பெயர்ந்து வாழ்கின்ற நாம், எமது தாய்மொழியாம் தமிழைத் தொலைத்து விடாமல் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதற்குத் தூர நோக்குடன் யேர்மன் தமிழ்க் கல்விக் கழகமும் தமிழாலயங்களும் செயற்பட்டு வருகின்றன. அத்தகைய உயரிய பணியில் முன்சன் தமிழாலயமும் 17 வருடங்களாகத், தனது பணியை ஆற்றி வருகின்றது.

ஒரு மாணவன் ஓர் ஆண்டில் தான் கற்ற கல்வியின் அறுவடையைத் தேர்வின் மூலம் பெற்றுக்கொள்கிறான். அந்தவகையில் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை ஆண்டு தோறும் தேர்வை நடாத்துகின்றது. ஒரு மொழியானது பூரணமாக அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டுமாயின் எழுத்து வடிவத்தில் மட்டும் இருந்தால் போதாது பேச்சு வடிவத்திலும் சிறப்பாக இருக்க வேண்டும். உலகின் பல மொழிகள் இத்தன்மை இல்லாததால் வழக்கொழிந்து வருகின்றன. இதனைக் கருத்திற்கொண்டு கடந்த மூன்று ஆண்டுகளாகப் புலன் மொழிவளத் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனுள் கேட்டல், பேசுதல், வாசித்தல், என்பவை உள்ளடங்கும். மாணவர்கள் தமிழ் மொழியில் மொழி ஆளுமைத்திறன் மிக்கவர்களாக உருவாகுவதற்கு இது வழி சமைக்கின்றது.

இயந்திரமயமான புலம்பெயர் சூழலில் தமிழ்ப் பெற்றோர் தாய் மொழியைப் பிள்ளைகளுக்கு ஊட்டும் வகையில் வாரத்தில் ஒரு நாள் நடைபெறும் தமிழாலயத்திற்குத் தமிழைக் கற்கப் பிள்ளைகளை அழைத்து வருகின்றார்கள். பிள்ளைகளின் மொழி அறிவானது பெற்றோர், ஆசிரியர், மாணவர்கள் என்ற முக்கூட்டு இணைப்பினாலேயே சாத்தியமாகின்றது. எனவே, பெற்றோர்களும் பிள்ளைகளும் ஆர்வத்துடன் செயற்படுவதினூடாக ஆசிரியர்களாகிய நாமும் இனணந்து, எமது அன்னைத் தமிழை அகிலத்தில் என்றும் நிலைத்து நிற்க உழைப்போம்.

திருமதி றஜிகலா சிறீகாந்தன்,

ஆசிரியை

தேர்வுப்பிரிவு, தமிழாலயம் முன்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது 12 ஆண்டுகால முன்சன் தமிழாலய அனுபவங்கள்

வணக்கம்! எனது பெயர் வீணாகரன் இராஜலிங்கம். நான் முன்சன் தமிழாலயத்தில் மழலையர்நிலை தொடக்கம் ஆண்டு 11 வரை தமிழ்மொழி, மற்றும் சுற்றாடற்கல்வி கற்று நிறைவு செய்தேன். எனக்கு இதனால் கிடைத்த நன்மைகள் பற்றியும், நான் முன்சன் தமிழாலயத்தில் கல்வி கற்கும்போது ஏற்பட்ட பிரச்சனைகள், கஷ்டங்கள் பற்றியும் இப்பொழுது கூறவுள்ளேன்.

ஆரம்பத்தில் எனக்குத் தாய்மொழியாம் தமிழ்மொழியைக் கற்பதற்கான சந்தர்ப்பத்தைத் தந்துதவிய முன்சன் தமிழாலய நிர்வாகி திரு. நிர்மலதாசன் அவர்களுக்கு எனது நன்றிகளைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். வாரந்தோறும் என்னைத் தமிழாலயத்துக்கு அனுப்பி அங்கு பயிலும் சிலபாடங்களின் அர்த்தம் விளங்காதவிடத்து அவற்றைத் தெளிவுபடுத்தி, இடையூறு இல்லாத ஒத்துழைப்பைத் தந்து உதவிய எனது பெற்றோருக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். எனது பெற்றோரின் ஊக்கமும் ஒத்துழைப்பும் இல்லாமல் இருந்திருந்தால், இந்த அளவுக்கு எனது தமிழ்மொழி அறிவும், தமிழ்ப்பண்பும் வளர்ச்சி அடைந்திருக்க மாட்டாது என்பது சந்தேகமேயில்லை.

தமிழ்மொழியைக் கற்கும்போது ஆர்வத்துடனும் அக்கறையுடனும் கூடிய முயற்சி எடுத்துப்படிக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் நான் தமிழ்மொழியை மிகுந்த ஆர்வத்துடன் கற்றுவந்தேன். சில நேரங்களில் நான் தவிர்க்கமுடியாத சிலகாரணங்களால் தமிழாலய வீட்டுவேலைகளை சரிபடச்செய்ய முடியாவிட்டாலும், தேர்வு நேரங்களில் அதற்கென்று நேரத்தை ஒதுக்கி படித்து சித்தி பெற்று அடுத்த நிலைக்குச் சென்றுவிடுவேன். சிலவேளைகளில் பாடநூல் இல்லாமல் படிக்கும் கடினமான சந்தர்ப்பங்கள் இருந்தும் கூட பிரதி எடுத்து படித்திருக்கின்றேன்.

ஆரம்ப காலத்தில் தமிழாலயத்தில் இடவசதி இல்லாத காரணங்கள் இருந்தும் கூட கல்வி கற்பிப்பதில் எந்தவிதமான இடையூறுகளும் இல்லாமல் தமிழாலயம் ஒழுங்காக நடைபெற்று வந்தது. முன்பு ஆசிரியர் பற்றாக்குறை இருந்தது. நான் சில நிலைகளில் சுற்றாடற்கல்விப்பாடத்தில் ஆசிரியர் இல்லாமல் படித்துத் தேர்வு எழுதவேண்டிய சந்தர்ப்பமும் ஏற்பட்டது. ஆனால் இப்படியான நிலைமை எனக்குக் கோபத்தை ஏற்படுத்தவில்லை. காரணம், அப்பொழுது ஆசிரியர்கள் சிறிய வகுப்புகளுக்கே போதுமாக இருந்ததால், நாங்களே எங்களுடைய பாடங்களை எமது முயற்சியில் யாவரது உதவியும் இன்றிப் பயிலவேண்டி இருந்தது. தமிழாலய வளர்ச்சியைப் பொருட்படுத்தி எங்களைப் போன்று சிறிய வகுப்புப் பிள்ளைகளுக்கும் கஷ்டம் வரக்கூடாது என்று எண்ணியே நாங்கள் கஷ்டப்பட்டுப் படித்தோம். இப்போது தமிழாலயத்தில் ஏறக்குறைய 280 மாணவர்கள் கல்விகற்கின்றார்கள். தற்போதைய தமிழாலய வளர்ச்சியில் ஆண்டு 5க்கு உட்பட்ட மாணவர்களுக்கு இரண்டு ஆசிரியர்கள் மூலம் கல்விபயிற்றுவிக்கக் கூடிய வசதி ஏற்பட்டுள்ளது. இது எவ்வளவு பெருமைக்குரிய விடயம். ஜேர்மன் பாடசாலை திங்கள் முதல் வெள்ளி வரை நடைபெறும். சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில் தமிழாலயம் நடைபெறும். வாரம் ஒருமுறை பாடசாலை என்று செல்வதும் இரண்டு பாடசாலைகளிலும் சிறப்பாகக் கல்விபயின்று வருவதும் கடினம் என்று சில வேளைகளில் நான் நினைத்ததுண்டு. ஆனால் எமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மொழியாம் தமிழ்மொழியைக் கைவிட்டு விடக்கூடாது என்று நினைத்துப் படிக்க வேண்டும். இந்தக் கொள்கையை நாம் கடைப்பிடித்தால் நாம் எதிலும் சிறப்பாக வெற்றி அடையலாம்."முயற்சி திருவினையாக்கும்".

நாம் ஜேர்மன் பாடசாலையில் ஜேர்மன் மொழியைத் தவிர ஆங்கிலமொழியையும் படிக்கிறோம் அல்லவா? சிலர் அத்துடன் பிரெஞ்சுமொழி, லத்தீன், ஸ்பெயின் மொழியென்று படிக்கின்றார்கள். இவ்வாறு வேற்று மொழிகளைக் கற்கும் தமிழர்களாகிய நாம் எமது தாய்மொழியாம் தமிழ்மொழியை ஏன் கற்கக்கூடாது? எமது தாய்மொழியை எழுதிப் படித்து வாசித்து விளங்கிக் கொள்ளாமல் இருப்பது எவ்வளவு வெட்கக்கேடான விடயம். எமது இன அடையாளங்களில் எமது இனிமையான தமிழ்மொழி மிகமிக முக்கியமானதொன்று. அதனால் நாம் எந்த மொழியைப் பயின்றாலும் எமது தாய்மொழியான தமிழ்மொழியைக் கற்பது மிக அவசியமானது. அத்துடன் மிக பெருமைக்குரிய விடயமுமாகும்.

சில பெற்றோர்கள் என்னிடம் கூறியதில் என்னை மிகவும் ஆத்திரத்துக்குள்ளாக்கிய விடயம் என்னவென்றால், ஜேர்மன் பாடசாலை ஆசிரியர்கள் பலர் தமிழ்ப்பாடசாலைக்குப் போவதால் பிள்ளைகள் ஜேர்மன் பாடசாலைகளில் பாடங்களில் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். அதனால் தமிழ்ப்பாடசாலைக்குப் பிள்ளைகளை விடவேண்டாம் என்பதே. என்னதான் அந்தப் பிள்ளைக்கு ஜேர்மன் பாடசாலை கடினமாகப் பட்டாலும், ஒரு குறுகிய நேரத்தை அதாவது வார இறுதியில் தன்னும் ஒதுக்கி தமிழ்மொழியைக் கற்கக் கூடாதா?

அதாவது ஜேர்மன் பாடசாலையில் அந்தப்பிள்ளை பின்தங்கி நின்றால் தமிழைப் படித்ததால்தான் பிள்ளை பின்தங்குகின்றது என்று சொல்லமுடியாது. அவ்வகுப்பு ஆசிரியர் விளங்கப்படுத்துவது பிள்ளைக்கு விளங்காமல் இருக்கலாம், அல்லது அப்பிள்ளைக்கு எளிதாக புரிந்துகொள்ளும் தன்மை இல்லாது இருக்கலாம். இப்படியான பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வுகள் பல உள்ளன. உதாரணமாக Nachhilfe எனப்படும் மேலதிக உதவியை பிள்ளைக்குக் கொடுக்கலாம். ஆனால், அதற்காகத் தமிழ்மொழியைக் கற்காதே என்று ஓர் ஆசிரியர் கூறமுடியாது. இதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவும் முடியாது. கிழமையில் ஒரு நாள் தமிழ்ப்பாடசாலை சென்று வருவதும், தமிழ் வீட்டுவேலைகளுக்கு கிழமையில் சிறிது நேரம் ஒதுக்குவதும், ஒரு மாணவனுக்குப் பெருஞ்சுமையாகவும் ஜேர்மன் பாடசாலைக்கு இடையூறாகவும் இருக்கின்றது என்பதும் மிகப்பிழையான கருத்து என்றே நான் உறுதியோடு கூறுகின்றேன்.

நான் தமிழ்மொழியை ஆர்வத்துடன் கற்றதன் விளைவு மிக சுவாரசியமான விடயங்களில் பங்கேற்றுக்கொள்ளச் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. ஒரு ஜேர்மனியப் பெண்மணி ஜேர்மனிய ஹம் நகரில் ஸ்ரீ ஹம் காமாட்சி அம்பாள் கோயிலைப்பற்றி ஒரு விளக்கப்படத்தை எடுத்தபோது, தமிழ்மொழி மாற்ற வேலைகளில் என்னால் முடிந்த உதவிகளைச் செய்துகொடுக்க முடிந்தது. தமிழ்மொழியை ஓரளவு தெரிந்து வைத்திருந்ததால், திரைப்படத்தின் முக்கிய தமிழ்மொழிப்பெயர்ப்பினை என்னிடம் ஒப்படைத்தார். எனக்கு இது பெரும் மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருந்தது. இந்தத் துறையிலும் என் பங்களிப்பை வழங்கியதிலும், தமிழ்மொழி அறிவினால் மற்றவர்களுக்கு உதவி செய்யக்கூடிய ஆற்றல் இருந்ததும் நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழியை ஆர்வத்துடன் கற்றமையாலேயாகும். இந்த வகையில் நான் தமிழ்மொழி கற்றதால் பெருமையடைகிறேன்.


மறுபடியும் நான் கூறவிரும்புவது ஒன்றே ஒன்றுதான். எமது இனத்தின் அடையாளமான தமிழ்மொழியை நாம் கற்றுக்கொள்வது எமது புலம்பெயர் வாழ்க்கைக்கும் இன்றியமையாதது. பிறர் நமது கலாச்சாரம், பூர்விகம் பற்றி வினாவினால் தமிழ்மொழிமூலம் கூறிவிளக்கலாம். அப்படி விளக்கம் கூறாமல் விட்டால் தமிழன் என்ற அடையாளம் தொலைந்துவிடும்.

முக்கியமாக எனது பாடசாலைக் கல்வி சம்மந்தப்பட்ட சகல விடயங்களிலும் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து என்னை வளப்படுத்திய திரு. இளவழகன் ஆசிரியர் அவர்களுக்கு எனது தனிப்பட்ட நன்றிகளைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கின்றேன். அத்துடன் மழலையர்நிலை தொடங்கி ஆண்டு 11 வரை எனக்குத் தமிழ்மொழியையும் சுற்றாடற்கல்வியையும் கற்பித்து ஊக்கம் கொடுத்துதவிய அனைத்து ஆசிரியைகள், ஆசிரியர் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். மேலும் எமது முன்சன் தமிழாலயம் இன்னும் மென்மேலும் சகல துறைகளிலும் வளர்ந்து ஜேர்மனியில் மிகச்சிறந்த தமிழாலயமாக எதிர்காலத்தில் திகழ வேண்டுமென்று வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

நன்றி!

செல்வன் வீணாகரன் இராஜலிங்கம்
பொறியியலாளர் பல்கலைக்கழக மாணவன்

Bayerisches Staatsministerium für Wirtschaft, Infrastruktur, Verkehr und Technologie நிறுவனத்தின் கலண்டரில் வெளிவந்த எமது மாணவியின் ஓவியம்
Aarany Ganeshalingam Klasse 3b Grundschule an der Rothpletzstraße




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Meine 12 Jahre bei Tamilaayalam München

Hallo, mein Name ist Veenaagaran Rajalingam. Ich war sozusagen ein Schüler der ersten Stunde vom Tamilalayam München. 1994 gründete der Herr Nirmalathasan diese Schule mit wenigen Schülern, einer davon war ich. Ich fing ganz von vorne an, d.h mit einer Vorschulklasse, so wie es damals vom **T**amilischen **B**ildungs**v**erein e.V. mit Sitz in Stuttgart festgelegt worden war. Mittlerweile hat sich das wiederum geändert, mehr hierzu später. Viele andere Schüler von damals waren in Sri Lanka schon in einer Tamilschule, daher durften sie gleich in höheren Stufen starten.

Der Unterricht teilte sich auf in die tamilische Sprache analog zum Fach Deutsch an deutschen Schulen und das sogenannte „Sutradalkalvi" bzw. „Samukakalvi", welches man mit dem Heimat- und Sachunterricht vergleichen kann. Für viele stellt sich nun die Frage, was man denn nun in den Fächern über die Jahre lernt? Nun, im Fach Tamil lernt man wie zum Pendant Deutsch die Vielfalten der tamilischen Sprache, natürlich die Grammatik und ganz wichtig: die tamilische Literatur. Das ist und bleibt natürlich ein heißes Thema bei den Schülern. Die Texte erstrecken sich über viele Seiten, meist sind das Auszüge berühmter Stücke der tamilischen Literatur. Viele Schüler stöhnen immer noch über die komplizierte Sprache, den unzähligen Synonymen und der umständlichen Syntax des alten Tamil. Mittlerweile werden auch viele historische Texte in den Lehrbüchern abgedruckt, Schwerpunkt natürlich die Geschehnisse in und um Sri Lanka.

Früher wurden wir, die Schüler der ersten Generationen, mit den unterschiedlichsten Problemen konfrontiert. Damals war die Qualität der Bücher sehr unterschiedlich, manch ein Buch konnte man bedenkenlos lesen, die Schrift war sehr gut zu erkennen. Es gab aber auch viele Gegenbeispiele. Die Schriften mancher Bücher konnte man nicht entziffern, entweder viel zu klein oder beim Druck einfach verwischt oder schief abgedruckt, mit diesen Querelen hatten wir uns aber abgefunden. Damals mussten wir aber auch Einbußen bei den Lehrkräften hinnehmen. Damals gab es einfach nicht so viele Lehrer und Lehrerinnen, die uns den Stoff vermitteln konnten. Zu der Zeit als wir schon in den höheren Stufen waren, gab es durchaus Jahrgänge wo uns einfach die Bücher in die Hand gedrückt wurden, es hieß , dass wir uns für die Prüfung vorbereiten sollten, mithilfe der Prüfungen der letzten Jahre. Wir mussten uns in diesen Jahren also die Lerninhalte selbstdidaktisch aneignen. Wir waren aber damals weder sauer noch eifersüchtig auf die Schüler mit genügend Lehrkräften. Die meisten Lehrer kümmerten sich um die niedrigeren Jahrgangsstufen, daher opferten wir uns für die jüngere Generation, damit sie nicht wie wir damals ohne Lehrer auskommen müssen.

Im Jahre 2007 war ich letztendlich nach vielen Hürden im Begriff, die tamilische Schule erfolgreich zu beenden. Für den Abschluss der 11. Klasse gab es dann auch eine Ehrung. Nach jahrelangem Hickhack hatte ich endlich die Laufbahn erfolgreich beendet, in diesem Zusammenhang möchte ich mich bei meinen Eltern dafür bedanken, dass sie mich immer dahingeschickt haben, auch wenn es manchmal wirklich schwierig war mit der tamilischen Schule. Nicht wegen der Parallelität zur deutschen Schule, sondern wegen der Struktur damals an der tamilischen Schule an sich. Im Folgenden werde ich dies näher erläutern.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ich möchte Tamilalayam München in der Hinsicht nicht schlechtmachen, in der Vergangenheit ging es manchmal nicht anders. Diese Konflikte gab es früher, aber der Schulleiter von Tamilalayam München, Herr Nirmalathasan, hat mit der Unterstützung der Lehrer, der Eltern und des tamilischen Bildungsvereins vieles geändert und revolutioniert.

Mittlerweile werden die tamilischen Lehrbücher unter strengen Anordnungen gedruckt, sie sind hoher Qualität. Sehr sauber gedruckt, sehr gut illustriert; manchmal überkommt mich die Eifersucht, wieso wir nicht damals in den Genuss solcher Bücher kamen, damals war jedoch schon die Sicherstellung eines Lehrbuchen ein Kraftakt.

„Mittlerweile hat Tamilalayam München knapp 280 Schüler und Schülerinnen", erzählte mir letztens Herr Nirmalathasan mit voller Stolz. Dass er solch einen Erfolg verbuchen konnte, kann er wohl manchmal selbst nicht glauben. Viel mehr hat er es geschafft, soviele Lehrer und Lehrerinnen in diese Schule zu holen mit dem Ziel, die tamilische Sprache weiterzuvermitteln, dass mittlerweile fast jede Jahrgangsstufe von zwei Lehrerinnen betreut werden. „Auch wenn wir aus politischen Gründen ins Ausland emigriert sind, dürfen wir unsere Wurzeln nicht vergessen. Dazu gehört auch die tamilische Sprache. Wir müssen sie verbreiten, damit sie nicht in Vergessenheit gerät." Viele ehrenamtliche Lehrer der tamilischen Schule in ganz Deutschland unterrichten nach diesem Grundgedanken.

Seit diesem Jahr wird nun auch nicht mehr das Fach „Sutradalkalvi" unterrichtet, man möchte sich nun voll und ganz auf die Sprachlehre konzentrieren, neu dazu kam in den letzten Jahren allerdings das Fach Hinduismus, also Religionslehre. Viele Inhalte wurden außerdem auch in den deutschen Schulen unterrichtet, deshalb überschnitten sich vieles. Das war auch ein Beweggrund dafür, dass man sich letztendlich gegen das Fach entschieden hat. Unterteilt wird aktuell in 14 Jahrgangstufen, 2 Vorschulstufen und danach 12 Jahrgangstufen so wie man es von der deutschen Schule her kennt. Damals gab es keine Möglichkeit eine 12.Klasse zu besuchen. Im Jahr 2010 wurde dies eingerichtet, bei Bestehen darf man damit sogar weltweit an einer beliebigen Universität Tamil studieren, sofern sie es anbietet. Das zeigt auch schon deutlich, wie erfolgreich der tamilische Bildungsverein gearbeitet hat, um zu diesem Status zu kommen.

Mein persönliches Anliegen gilt nun den Lehrern und Lehrerinnen der deutschen Schulen, die dies zu lesen bekommen. Man akzeptiert die islamische Religionslehre. Griechische Sprachschule werden wohlwollend akzeptiert, auch hebräisch gilt als eine Sprache, die gern angenommen wird. Mich verdutzt es immer wieder zu hören, dass manche Lehrkräfte ihren Schülern und Schülerinnen raten, nicht die tamilische Schule zu besuchen. Einerseits haben diese Lehrkräfte natürlich Recht mit ihren Bedenken, dass ihre Schülerinnen eine doppelte Belastung hierdurch erleiden. Ich möchte dies auch nicht ablehnen, aber es ist wichtig, dass die Kinder über ihre Identität informiert sind. Für einen tamilischen Schüler ist es besonders essentiell, über seine Identität Bescheid zu wissen. Hierbei ist Tamil wichtig im Bezug darauf, was unsere Identität ausmacht. Falls Defizite in den Fächern bestehen, gibt es viele Wege diese auszugleichen, aber das die Belastung durch die tamilische Schule die Kinder daran hindert, in der deutschen Schule erfolgreich zu sein, dass kann ich beim besten Willen nicht akzeptieren. In dieser Hinsicht hätte ich mich besonders

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

von den deutschen Mitbürgern mehr Toleranz erwartet. Bitte überdenken Sie Ihre Meinung, da die Muttersprache ziemlich viel von einem Menschen ausmacht.

Ich kann im Folgenden viel erzählen, falls Sie mich fragen, wie ich von Münchner Tamilalayam profitiert habe. Ich möchte hierbei besonders ein Erlebnis hervorheben. Ich durfte an einem Dokumentarfilm über den Sri Kamadchi Ampal Hindu-Tempel in Hamm mitarbeiten. Die Regisseurin Frau Melanie Liebheit hatte mich damals darum gebeten, ihr bei den Übersetzungen von tamilischen Dialogen, die in dem Film vorkamen, zu helfen. Ich lernte hieraus sehr viel aus der Filmwelt, außerdem sehr viel Wissenswertes rund um den Tempel in Hamm. Sehr gefreut habe ich mich über diese Chance, die mir Tamilalayam München vermittelt hatte. Durch die Übersetzung war vieles verständlicher und wir haben uns sogar getraut, tamilische Untertitel zu setzen, in meinen Augen etwas sehr revolutionäres, um den Dokumentarfilm auch vielen Tamilen verständlicher zu machen. Ich bedanke mich herzlich für die Chance und außerdem danke ich natürlich Frau Liebheit, die mir die Gelegenheit gab, einen Ausblick in die Filmewelt machen zu dürfen.

Jahr für Jahr veranstaltet Tamilalayam München verschiedene Feier, sei es Dankesfeste für die Göttin Sarasvati oder verschiedene Jubiläumsfeiern des Tamilalayam München. Hierbei wird die Verantwortung für die Organisation und Durchführung des Events voll und ganz den älteren Schülern des Tamilalayam übergeben. Besonders hier sieht man dann auch, mit welcher Hingabe und Motivation die Schüler diese Feier organisieren. Pflichtbewusstsein und organisatorisches Talent wird hierbei besonders gefördert, welches in meinen Augen zu den wichtigsten sozialen Kompetenzen unserer Zeit gehört. Ich fand es erwähnenswert, dass nicht nur Kultur und Tradition vermittelt wird, sondern auch Kompetenzen, die für das Berufsleben ausschlaggebend sind.

Alles in allem bin ich sehr stolz darauf, Tamil auf dem Tamilalayam München gelernt zu haben. Wie man sieht, hat man auch nach Schulabschluss ständig etwas mit der Sprache Tamil zu tun. In diesem Artikel habe ich zusammengefasst wiedergegeben, was mich besonders anspricht, wenn man mich zu Tamilalayam München befragt. Ich bin immer noch voller Stolz zu sagen, dass ich Schüler des Tamilalayam München war und bin jederzeit bereit, Tamilalayam München zu helfen und der Entwicklung dieser Schule beizutragen, weil ich hiermit das schöne Gefühl habe etwas zurückzugeben für das, was ich von dieser Schule bekam, nämlich meine Muttersprache Tamil.

Ehemaliger Schüler

Veenaagaran Rajalingam

Bauingenieur Student

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பண்பாடு

தமிழர் பண்பாட்டில் நாம் பல விழுமியங்களைக் காண்கின்றோம். பழங்கால மக்கள் குகைகளில் வாழ்ந்தனர். விலங்குகளின் புலாலை உண்டனர். இலை தழைகளையும் மரவுரிகளையும் ஆடையாக அணிந்தனர். ஆனால் பழங்கால மக்களினதும் இக்கால மக்களினதும் உணவு, உடை, உறையுளில் மாற்றங்களைக் காண்கின்றோம்.

மனிதர்களின் புறத்தோற்ற வளர்ச்சியை நாகரிகம் என்பர். மனிதர்கள் உள்ளத்தினின்றும் வெளிப்படும் நல்லியல்புகளைப் பண்பாடு என்பர். பண்பாடு மாறாத் தன்மை உடையது. நாகரிகம் காலத்துக்குக் காலம் நாட்டுக்கு நாடு மாறும் தன்மை உடையது. மானம் தமிழர் பண்பாட்டில் தலைசிறந்தது. ஒருவன் தன் நிலையிலிருந்து தாழாதிருப்பது மானம் எனப்படும். கவரிமானின் ஒரு மயிரைப் பறித்தாலும் அது உயிரை விடுவது போல, தமிழர் மானம் இழந்தால் உயிர் வாழ விரும்பமாட்டார். தமிழர் பண்பாட்டில் ஒரு சிறந்த பண்பு கொடைப்பண்பு ஆகும். கொடைப்பண்பு என்பது இல்லை என்று வந்தவர்க்கு இல்லை என்று சொல்லாமல் அள்ளிக் கொடுப்பது. இது தமிழர் பண்பாடு ஆகும்.

செல்வி பானுசா சற்குணநாதன்

ஆண்டு – 6

ஏடு தொடக்குதல் வைபவத்தின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணினியின் பயன்கள்

விஞ்ஞான வளர்ச்சி கண்ட சாதனைகளில் கணினி முக்கிய இடத்தை வகிக்கின்றது. கணினியின் விரைவும் நுட்பமும் நேரத்தைச் சுருங்க வைத்துவிட்டது. பலர் பல நாட்கள் செய்யும் வேலைகளைக் கணினி ஒரே நாளில் செய்துவிடும். எழுத்துக்களை உருவாக்குதல், பதித்தல், கோர்வைப்படுத்தல் ஆகிய வேலைகளைச் செய்யலாம். உலக நாடுகள் எங்கும் உடனடியாகத் தொடர்பு கொள்ளலாம். பல்வேறு இணையத்தளங்கள் மூலம் உலக விடயங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ளலாம்.

சிறுவர்களுக்கான பல விளையாட்டுகளைக் கணினியின் துணையுடன் விளையாடலாம். இன்று அலுவலகங்களில் நடைபெறும் சகல வேலைகளும் கணினி மயப்படுத்தப்பட்டுள்ளன. கணினிப் பயன்பாட்டினால், வேலைகள் கால தாமதமின்றி விரைவாக நடைபெறுகின்றது. அனைவரும் கணினிக் கல்வியைக் கற்றிருக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

செல்வன் சஞ்ஜீவன் இராமலிங்கம்

வளர்நிலை 5

தமிழ்க் கல்விக் கழகத்தின் 21வது ஆண்டு நிறைவு விழாவின் போது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்சன் தமிழாலயம்

எனது பெயர் கஜீபன் சிவபாலசிங்கம். முன்சன் தமிழாலயத்தில் தமிழ் கற்கிறேன். எங்கள் நிர்வாகி திரு நிர்மலதாசன் அவர்கள். நான் இரண்டாயிரத்து ஐந்தாம் ஆண்டு மழலையர்நிலையில் ஆரம்பித்து இப்போது, நான்காம் ஆண்டில் படிக்கின்றேன். இருபத்திரண்டு ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்கள்.

ஏறக்குறைய இருநூற்றைம்பது மாணவர்கள் தமிழ் கற்கின்றனர். நாங்கள் சமயமும் படிக்கின்றோம். இங்கே நடைபெறும் விழாக்கள் தைப்பொங்கல், வாணிவிழா, ஆண்டுவிழா ஆகியனவாகும். ஒவ்வொரு ஆண்டிலும் அரையாண்டுத்தேர்வும், ஆண்டுப்பொதுத்தேர்வும் அத்துடன், புலன்மொழித்தேர்வும் நடைபெறுகின்றன.. எங்கள் வகுப்பாசிரியரினால் ஒவ்வொரு மாதமும் மதிப்பீடு நடாத்தப்படும்.

நாம் தமிழ்மொழியைக் கற்பதால் எமது மொழித்திறன் ஆற்றலையும் பேச்சுத்திறனையும் வளர்த்துக்கொள்ளலாம். இதன்மூலம் எனது தாயக உற்றார் உறவினருடனும் தமிழில் உரையாடலாம். அடுத்து தமிழுக்காகப் பாடுபட்ட தமிழ் அறிஞர்களையும் புலவர்களையும் மன்னர்களையும் அறிந்துகொள்ளலாம்.

செல்வன் கஜீபன் சிவபாலசிங்கம்

ஆண்டு 4

தமிழ்க் கல்விக் கழகத்தின் 21வது ஆண்டு நிறைவு விழாவின் போது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் திறந்து வாழ்த்துகிறோம்!

17வது அகவை நிறைவு விழாக் கொண்டாடும் முன்சன் தமிழாலயத்தை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம். ஆரம்ப காலம் தொட்டு எமது சகோதரத் தமிழாலயமாக இருந்துவரும் முன்சன் தமிழாலயம் தாய்மொழியினை உயிரினும் மேலாக மதித்து, இந்தப் புலம்பெயர் மண்ணில் தமிழ் அழிந்து போகாவண்ணம் பல்வேறு சிரமங்களுக்கும், வேலைப்பளுக்களுக்கும் மத்தியிலும் உறுதியுடன் செயற்பட்டு வருகின்றது.

சிறந்த நிர்வாகக் கட்டமைப்பையும், ஆர்வமும் செயற்திறனும் படைத்த ஆசிரியர்களையும் வளர்ந்த பல இளையோரைக் கல்வி, கலை, விளையாட்டு எனப் பல துறைகளிலும் தனிமுத்திரை பதித்து, பலரின் பாராட்டையும் பெற்று வருகின்றமை போற்றுதற்குரியதாகும். இத்தமிழாலயத்தை உருவாக்குவதற்கு எத்தனையோ இன்னல்களுக்கும் இடர்களுக்கும் மத்தியில் சோர்வடையாது, உழைக்கின்ற நிர்வாகி திரு நிர்மலதாசனுக்கும் நிர்வாகக் குழுவினருக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் எமது தமிழாலயத்தின் சார்பில் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிர்வாகம், ஆசிரியர்கள் பெற்றோர், மாணவர்கள்,

தமிழாலயம் - அவுக்ஸ்பூர்க்

முன்சன் அவுக்ஸ்பூர்க் இணைந்து நடாத்திய தமிழர் திருநாள் விழாவின் போது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகரம் கற்று ஆற்றல் பல பெற்று படிகள் பல கடந்து யேர்மன் ரீதியில் தமிழ்த்திறன் போட்டிகளில் 2004 தொடக்கம் 2010 வரையான காலப்பகுதியில் வெற்றிக்கனி பறித்து முன்சன் தமிழாலயத்திற்குப் பெருமை சேர்த்த எம் மாணவச் செல்வங்கள்**



**தினோஜா திருச்செல்வம்**


2004 (6–7) ஆத்திசூடி 1ம் இடம்
2005 (8–9) ஆத்திசூடி 1ம் இடம்
உரையாற்றல் 3ம் இடம்
2006 (8–9) ஆத்திசூடி 1ம் இடம்
உரையாற்றல் 1ம் இடம்
2007 (10–11) நறுந்தொகை 1ம் இடம்
2008 (10–11) நறுந்தொகை 1ம் இடம்
உரையாற்றல் 2ம் இடம்
கவிதை 2ம் இடம்
2009 (11–12) நறுந்தொகை 2ம் இடம்



**டிரும்ஜா பீற்றர் நொலெஸி**

2004 (6–7) சொல்வதெழுதுதல் 1ம் இடம்
வாசித்தல் 2ம் இடம்
வாசித்தல் 2ம் இடம்
2006 (8–9) வாசித்தல் 3ம் இடம்
சொல்வதெழுதுதல் 3ம் இடம்
2008 (10–11) உரையாற்றல் 3ம் இடம்
நறுந்தொகை 3ம் இடம்
2010 (13–14) உரையாற்றல் 2ம் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**விதுர்சன் சுரேஸ்குமார்**

2005 (6–7) ஆத்திசூடி 2ம் இடம்
வாசித்தல் 3ம் இடம்
2006 (8–9) வாசித்தல் 2ம் இடம்
2007 (8–9) சொல்வதெழுதுதல் 1ம் இடம்
வாசித்தல் 2ம் இடம்
2008 (10–11) வாசித்தல் 1ம் இடம்
கவிதை 3ம் இடம்
2010 (11–12) வாசித்தல் 1ம் இடம்



**தர்சிகா சபாநாயகம்**

2005 (10–11) ஓவியம் 3ம் இடம்
வாசித்தல் 3ம் இடம்



**கஜன் கணேசராசா**

2005 (10–11) கொன்றைவேந்தன் 2ம் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கயல்விழி நவராசா**

2004 (10–11) ஓவியம் 2ம் இடம்
2005 (12–13) திருக்குறள் 2ம் இடம்
2007 (14–15) திருக்குறள் 2ம் இடம்
2009 (15–16) உரையாற்றல் 1ம் இடம்
2010 (17–18) உரையாற்றல் 3ம் இடம்



**சிவதர்சினி சிவநாதன்**

2004 (16–17) திருக்குறள் 2ம் இடம்



**தமிழினி நிர்மலதாசன்**

2005 (6–7) உறுப்பமைய எழுதுதல் 2ம் இடம்
2006 (6–7) சொல்வதெழுதுதல் 1ம் இடம்
ஆத்திசூடி 2ம் இடம்
உரையாற்றல் 3ம் இடம்
2007 (8–9) உரையாற்றல் 3ம் இடம்
2008 (8–9) உறுப்பமைய எழுதுதல் 1ம் இடம்
2009 (9–10) கொன்றைவேந்தன் 2ம் இடம்
சொல்வதெழுதுதல் 3ம் இடம்
2010 (11–12) உறுப்பமைய எழுதுதல் 1ம் இடம்
நறுந்தொகை 2ம் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யானுகா நித்தியராஜா

2006 (12 – 13) ஓவியம் 3ம் இடம்



ஜொஹானஸ் பீற்றர் நொலெஸி

2006 (6 – 7) வாசித்தல் 2ம் இடம்



அஸ்மியா அமலதாஸ்

2007 (6 – 7) உரையாற்றல் 1ம் இடம்
2008 (8 – 9) உரையாற்றல் 3ம் இடம்
2010 (9 – 10) உரையாற்றல் 3ம் இடம்



சஞ்ஜீவன் இராமலிங்கம்

2007 (6 – 7) உறுப்பமைய எழுதுதல் 1ம் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சாதணா சிவராசா**

2007 (16 – 17) திருக்குறள் 3ம் இடம்



**வானதி நிர்மலதாசன்**

2008 (6 – 7) ஆத்திசூடி 1ம் இடம்
சொல்வதெழுதுதல் 3ம் இடம்
2009 (7 – 8) சொல்வதெழுதுதல் 3ம் இடம்
2010 (9 – 10) உறுப்பமைய எழுதுதல் 3ம் இடம்



**நிருசிகா அருணகிரிநாதன்**

2008 (6 – 7) உரையாற்றல் 3ம் இடம்
2009 (7 – 8) உரையாற்றல் 1ம் இடம்
2010 (9 – 10) உரையாற்றல் 2ம் இடம்



**வாசுகி கஜேந்திரன்**

2009 (7 – 8) சொல்வதெழுதுதல் 1ம் இடம்
உறுப்பமைய எழுதுதல் 1ம் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அகிர்ஜன் திருச்செல்வம்**

2010 (6 – 7) ஆத்திசூடி 3ம் இடம்



**ராயுவன் ரமேஷ்குமார்**

2010 (7 – 8) சொல்வதெழுதுதல் 1ம் இடம்



**ஆரணி கணேசலிங்கம்**

2010 (7 – 8) உறுப்பமைய எழுதுதல் 3ம் இடம்



**வைஷ்ணவி விஷ்ணுதாஸ்**

2010 (17 – 18) கட்டுரை 3ம் இடம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஜெனிபர் குணநாயகம்


2009 (6) உறுப்பமைய எழுதுதல் 3ம் இடம்



நிருசன் அமலதாஸ்

2009 (7-8) வாசித்தல் 2ம் இடம்

ஏடு தொடக்குதல் வைபவத்தின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்க் கழகத்தின் 21வது ஆண்டு விழாவில் எமது தமிழாலயம் கௌரவிக்கப் பட்ட போது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றேன்...

**"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் மூத்த தமிழ்"** எம் தமிழ் என்பது ஒரு கருத்து. இத்தனை பழைமை வாய்ந்த மொழிக்கு உரித்துடைய இனம் எம் இனம் என்று எண்ணும் போது பெருமையாக உள்ளது. எமக்கென்று ஒரு நிரந்தர சுதந்திரம் இல்லாமல், நாடற்றவர் போல் உலகெங்கும் சிதறுண்டு வாழும் இச் சூழ்நிலையில் எம் மொழியால் ஒன்றிணைந்து நிற்கிறோம் என்பது ஓரளவு மன நிறைவைத் தருகிறது.

தமிழர் புலம்பெயர்ந்து வாழும் அனைத்து நாடுகளிலும் வெவ்வேறு மொழிகளில் கல்விகற்கும் எம் இளம் சந்ததியினர் தாய்மொழியைப் பயில்வதற்காகத் தமிழ்க் கல்விக்கூடங்களை உருவாக்கிக் கொடுத்த பெரியோர்கள், கல்விமான்கள் அனைவருக்கும் நாம் மிகவும் நன்றிக்கடமைப்பட்டுள்ளோம்.

அத்துடன், வெறுமனே மொழியை மட்டும் கற்பதோடு நின்றுவிடாது பிள்ளைகளிடம் பொதிந்து கிடக்கும் ஆற்றல்களை இனங்கண்டு ஊக்குவிப்பதற்காக நடாத்தப்படும் போட்டிகளில் ஒன்று தமிழ்த்திறன் போட்டியாகும்.

எமது தமிழ்க் கல்விக் கழகத்தால் நடாத்தப்படும் தமிழ்த்திறன் போட்டியில் அவரவர் திறமைகளை வளர்த்தெடுப்பதற்கு ஏற்றவாறு முறையே எழுத்தாற்றல், சொல்வன்மை, கற்பனைத்திறன், ஞாபகத் திறன் போன்றவற்றிற்கு ஏற்ப மனனம், உரையாற்றல், கவிதை, வாசித்தல், ஓவியம் போன்ற பல விடயங்கள் போட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. போட்டியில் பங்கு பற்றும் மாணவர்கள் முறையே தமிழாலயங்களாலும் மாநில ரீதியாகவும் – இறுதியாக யேர்மன் ரீதியாகவும் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு, எமது கல்விக் கழகத்தால் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றனர். இப் போட்டியில் பங்கு பற்றும் மாணவர்கள் தமது வாழிட மொழிக் கல்வியிலும் திறமையுள்ளவர்களாக இருப்பதையும் காணமுடிகிறது.

எனினும், போட்டிகளில் பங்குபற்றிப் பரிசில்கள் கிடைக்கப்பெறாதவர்கள் திறமையற்றவர்கள் என்பதல்ல கருத்து. **"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது"** என்னும் கூற்றுப்படி, பிள்ளைகளை சிறுவயதிலிருந்து இப் போட்டிகளில் பங்குபற்ற வைப்பதன் மூலம் அவர்களது ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து எதிர்காலத்தில் திறமை மிக்கப் பயனுள்ள சமூகமாக ஆக்குவது பெற்றோராகிய எம் ஒவ்வொருவரது கடமையுமாகும்.

திருமதி ரஞ்சினி ரவீந்திரன்
ஆசிரியை
தமிழ்த்திறன் போட்டிப் பிரிவு
தமிழாலயம் – முன்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஔவையார்

ஔவையார் ஒரு சிறந்த தமிழ்ப்பெண்புலவர். அவர் நாம் வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும் என்பதற்காக பல நூல்களை எழுதியுள்ளார். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை அத்தோடு மழலையரில் இருந்து பாமரர் வரை விரும்பும்வகையில் இலகு தமிழில பல நூல்களை படைத்தார். [illegible]

ஆரணி கணேசலிங்கம்

வளர்நிலை 3



**சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்**
**பெரியோ ராயிற் பொறுப்பது கடனே.**

சிறியோர் செய்த – சிற்றறிவுடையோர் செய்த சிறுபிழை

எல்லாம் - சிறிய குற்றங்க ளெல்லாவற்றையும், பெரியோர் ஆயின்

மேலோராயிருப்பின், பொறுப்பது – பொறுத்துக் கொள்வது,

கடன் - முறையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளோரன்ஸ் நைட்டிங்கேல் (Florence Nightingale)



புளோரன்ஸ் நைட்டிங்கேல் (Florence Nightingale) அம்மையார் என்பவர் நவீன தாதிய முறையை உருவாக்கிய ஓர் ஆங்கிலத் தாதி ஆவார். பிரித்தானிய செல்வச் செழிப்புள்ள உயர்குடிக் குடும்பத்தைச் சேர்ந்த அவர் 12.05.1820ல் இத்தாலியிலுள்ள புளோரன்ஸ் (Florenz) என்னும் நகரத்தில் பிறந்தார். அதனால் அவரின் பெற்றோர் அவரைப் புளோரன்ஸ் என்று அழைத்தார்கள்.

புளோரன்ஸ் நைட்டிங்கேல் கிறிஸ்தவர் என்ற முறையில் தனக்கு இறைவனால் விதிக்கப்பட்ட பணியாக நினைத்து தாதியர் சேவையைத் தன் வாழ்நாள்முழுவதும் செய்துவந்தார். அவர் வறியவர்களின் மீதும், இயலாதவர்கள் மீதும் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். 1844ம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள ஓர் ஆதரவற்றோர் விடுதியில் வறியவர் ஒருவர் உரிய மருத்துவ வசதியின்றி இறந்தார். அதன் காரணமாகப் புளோரன்ஸ் நைட்டிங்கேல் ஆதரவற்றோர் விடுதிகளின் வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்று முன்னின்று வாதாடினார். இது வறியோர் சட்டத்தில் சீர்திருத்தம் கோருவதில் ஈடுபடுத்தியதுடன் மருத்துவ வசதிகளின் வழங்கலுக்கு அப்பால் அவரது ஈடுபாட்டை விரிவாக்கியது. அது மட்டுமல்லாது பொது மருத்துவமனைகளில் கவனிப்பையும் சூழலையும் மேம்படுத்த வேண்டுமென்று நைட்டிங்கேல் வாதாடி வந்தார். மருத்துவ வசதிகளுக்கும் சுகாதார நுட்பங்களுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்த மருத்துவமனைகள் பற்றிய குறிப்புக்கள், அக்காலத்தில் தாதியர்களுக்கான மிகச் சிறந்த பாடநூலாகக் கருதப்பட்டது. தாதியப்பணி பற்றிய குறிப்புக்கள்' உடல்நலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்கள்' 'மருத்துவமனை நிர்வாகமும் செயல்த்திறனும்' என்பவை நைட்டிங்கேல் எழுதிய புகழ் பெற்ற நூல்களுள் சிலவாகும்.

பராமரிப்பு, செயலில் கவனம் மற்றும் மருத்துவமனை மேலாண்மை என்பவற்றைக் கடைப்பிடித்ததன் மூலம் அனைத்துத் தாதியர்க்கும் முன் உதாரணமாகத் திகழ்கிறார். நைட்டிங்கேல் தாதியர் பயிற்சிக்கூடத்தின் சேவை இன்றும் தொடர்கிறது.

அவர் தனது வாழ்நாள்முழுவதும் சேவைகள் பல செய்து 'அதீத களைப்பு ஏற்படல்' எனும் நோய் ஏற்பட்டு 1896ல் படுத்த படுக்கையானார். அதன் பின் 13.08.1910ல் ஐக்கிய இராச்சியத்தில் மரணம் அடைந்தார்.

அவரின் நினைவாக ' **உலகத் தாதியர் தினம்**' புளோரன்ஸ் நைட்டிங்கேலின் பிறந்தநாளன்று கொண்டாடப்படுகின்றது. கே.எல்.ஏம் (KLM) விமானநிறுவனம் தங்கள் எம்.டி. (MD)-11 விமானமொன்றில் புளோரன்ஸ் நைட்டிங்கேலின் பெயரைப் பதித்திருக்கின்றது. இஸ்தன்புல்லில் (Istanbul) உள்ள மூன்று வைத்தியசாலைகள் இவர் பெயரைக் கொண்டுள்ளன. இன்னும் பல இவரின் சாதனைகளும் நினைவு கூரலும் உலகில் நடைபெற்று வருகின்றன.

செல்வி ஜெருஜா தமிழ்ச்செல்வன்

ஆண்டு - 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது தாயகம்

எமது தாயகம் ஆசியாவின் தென்கிழக்குப் பகுதியில் இந்துசமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளது. அது எமது தமிழீழமாகும். அதன் பரப்பளவு இருபதினாயிரம் சதுர கிலோமீற்றர் ஆகும். தமிழீழத்தில் 3,4 மில்லியன் மக்கள் வாழ்கின்றார்கள். தமிழீழத்தின் தேசியப்பறவையாக செண்பகமும், தேசியப்பூவாக கார்த்திகைப்பூவும், தேசியமரமாக வாகையும் உள்ளது. தமிழீழத்தின் தேசியக்கொடி புலிக்கொடியாகும்.

வரலாற்றுக் காலத்தின் முன்பே தமிழீழம் தமிழர்களின் நிலமாகும். அப்பகுதி தமிழ்மன்னர்களால் ஆளப்பட்டு வந்ததாகும். சிறீலங்கா அரசினால் தமிழர்களின் வாழ்வுரிமை, குடியுரிமை கல்வியுரிமை, மொழியுரிமை போன்ற உரிமைகள் பறிக்கப்பட்டன. 1972ம் ஆண்டில் ஆயுதமேந்திய விடுதலைப் போராட்டம் தொடங்கியது. ஆயுதமேந்திய விடுதலைப் போராட்டத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாவீரர்கள் தாய்நாட்டிற்காய் தமது இனிய இன்னுயிரை ஈந்தார்கள். மாவீரர்களின் நினைவு நாள் கார்த்திகை மாதம் இருபத்தியேழாம் திகதியில் ஒவ்வொருவருடமும் நடைபெறுகின்றது. எமது மாவீரர்களின் கனவை நிறைவேற்றுவது தமிழர்களின் கடமையாகும்.

நன்றி

தமிழினி நிர்மலதாசன்
ஆண்டு 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் – ஒரு பார்வை

தமிழீழத்தில் வன்னி மாவட்டத்தில் ஒரு கிராமம் முள்ளிவாய்க்கால். இங்கு இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரில் அப்பாவி மக்கள் மீது ஏன் இந்த வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டது? இதை ஏன் சர்வதேசம் பார்த்து ஊமையாய் நின்றது? இலங்கையில் இடம்பெற்ற போரின் உச்சக்கட்டமே முள்ளிவாய்க்கால்!

இங்கு தான் பேதம்பாராது பெருந்தொகையான அப்பாவித் தமிழ் மக்கள் சிங்கள அரசினால் கொன்று குவிக்கப்பட்டு, அக்கிராமம் ஒரு கொலைக்களமாகக் காட்சி தந்தது. முள்ளிவாய்க்கால் இன்னமும் அரசியல்வாதிகளின் ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகின்றது. 2009இல் நடைபெற்ற இனப்படுகொலைகள், இவைபற்றிய அறிக்கைகள் இன்னமும் தெளிவு பெறாத நிலையில் சாதாரண தமிழ்மக்கள் பயங்கரவாதிகள் என்றும், அதனால் அவர்களே இப்போரின் குற்றவாளிகள் எனவும் அரசதரப்புச் சொல்லிவருகின்றது.

**"தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்தொழிக்கின்றோம்"** எனக் கூறிக்கொண்டு, அங்குள்ள பொதுமக்களை அவர்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொள்ளாது அரச படைகளால் இக்கிராமம் சுற்றிவளைக்கப்பட்டு, பயங்கரத்தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எனப் பலரும் கொல்லப்பட்ட நிலையில், ஐக்கிய நாடுகள் (UN) அமைப்பினால் போர்நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதையும்மீறி அரசபடைகளால் போர் தவிர்ப்பு பிரதேசம் எங்கும் விமானத் தாக்குதல் மூலம் நிர்மூலமாக்கப்பட்டது.

இங்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டும். பெண்கள் குழந்தைகள் கூட யுத்தப் பிரதேசத்தை விட்டு வெளியேறுவதற்கு அரச படைகளால் அனுமதிக்கப்படவில்லை. அதிகளவிலான இளைஞர்கள், யுவதிகள் கொன்று குவிக்கப்பட்டுப் புதை குழிகளில் மூடி மறைக்கப்பட்டனர். எஞ்சியவர்கள் பசி பட்டினியுடன் சிறைப் பிடிக்கப்படுகின்றனர். 18 வைகாசி போர் முடிவிற்கு வந்தது. இங்கு இடம்பெற்ற போர் அனர்த்தங்கள் சர்வதேச சமூகத்திற்குச் சாதாரண விடயம் அல்ல. முள்ளி வாய்க்காலில் மாத்திரம் இக்கொடுமைகள் நடக்காதிருந்தால், பல்லாயிரக் கணக்கான எலும்புக்கூடுகள் வன்னிமண்ணில் விதைக்கப்பட்டு இருக்காது.

இச்சமரில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை அரச தரப்பால் குறைத்துக் கூறப்படுகின்றது. உண்மையில் 1,00,000இற்கு மேல் என அஞ்சப்படுகின்றது. மனிதப்படுகொலைகள் நடந்து 2 வருடங்கள் கழிந்த பின்னரும் மனிதப் படுகொலைகள், மனிதப்புதைகுழிகள் என்றில்லாமல் உண்மைகளை வெளிக் கொணர்ந்து குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும்.

செல்வி லாவண்யா இராஜரட்ணம்

ஆண்டு – 8

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## Mullivaikal

Wir müssen die Wahrheit und warum das Massaker an die Zivilbevölkerung in den letzten Tagen des Krieges passierte wissen, wir wollen wissen, warum die Welt ein stummer Zeuge dieser Veranstaltung war?
Die Ereignisse in Mullivaikal markieren den Höhepunkt des Bürgerkriegs in Sri Lanka, die bösartigste der Schlachten, in denen das Leben der armen Zivilisten völlig ignoriert wurde.

Es gab keinen Zweifel, dass die unschuldigen Zivilisten in großer Zahl massakriert wurden. Was am wichtigsten im Auge zu behalten ist, dass heute leider Mullivaikal weitgehend ein politisches Instrument ist. In der 2009 Massaker fehlen wie den Berichten zufolge die Hintergründe und Verantwortlichkeiten für die Katastrophe in Mullivaikal. Die einfache Erklärung: Ein Schwarz-Weiß-Ereignis, in dem die „Tamilen" die Terroristen waren und „allein" die Schuld trugen..
Mullivaikal war ein Dorf in Vanni, die von den Regierungstruppen belagert wurden. Zu diesem Massaker kam es, weil die sri-lankische Armee sich brutal gegen die LTTE einzuwenden hatte, ohne die Zivilbevölkerung der Region zu berücksichtigen. Nach der Hoffnung von Sicherheit und Schutz der unschuldigen Bewohner von Mullivaikal wurde den staatlichen Kräften befohlen sie rücksichtslos zu attackieren sogar in den „no fire zones".
Während dieser Zeit nahm die UN eine Position der "Neutralität" an in der Praxis bedeutete es Untätigkeit, auch wenn große Anzahl von Männern, Frauen und Kinder bei diesen Angriffen getötet wurden. Srilankischen Streitkräfte griffen die sogenannten "kein Feuer Zonen" oder die Konfliktparteien an andernfalls würden sie den Waffenstillstandsabkommen brechen.

Es ist ein Punkt geschmacklos, aber es muss gesagt werden, dass sie nicht einmal Frauen gehen ließen. Viele der Jungen und Mädchen wurden hingerichtet und in Massengräbern verscharrt. Jeden Tag dieses Krieges hat man die unsäglichen Grausamkeiten gegen Zivilpersonen begangen gesehen. Gefangen in dieser kleinen Fläche, unter ständigem Beschuss in Sri Lanka, Schlaflosigkeit und Durst, unbewaffnete Männer, Frauen und Kinder erlagen Halluzinationen, Paranoia und Verzweiflung. Die Psyche der Menschen wurde gebrochen.

Mullivaikal ist nicht einfach ein Fall der internationalen Gemeinschaft bei der nur Quälereien begangen wurden. Die Aktionen der internationalen Gemeinschaft förderten, unterstützte und ermutigte die Angreifer. Der Fall von Mullivaikal hätte nicht geschehen müssen. Es bestand keine Notwendigkeit für Tausende von Skeletten über die nordöstliche Küste verstreut werden. Es besteht keine Notwendigkeit für Tausende von tamilischen Kindern die Geschichten ihrer Väter, Mütter, Onkel und Brüder von srilankischen Armee getötet wurden angehoben zu werden.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Wie viele starben?

Es gibt verschiedene Schätzungen über die Verstümmelten und die Toten. Einige schätzen, die Toten als etwa 10.000, während einige andere auch so viel wie 100.000 schätzen. Es war eine der schlimmsten und konzentriert wirkenden Tötungen seit der Zeit des zweiten Weltkriegs.

Die Tatsache ist unbestritten, dass während der Belagerung von Mullivaikal Tausende von tamilischen Männern, Frauen und Kinder getötet wurden. Die meisten von ihnen starben, als die Enklave vollständig von der srilankischen Armee umzingelt war und es fiel fast kampflos aus. Eine beträchtliche Anzahl erreichte die Sicherheit erst nach dem 18. Mai 2009.

Der Fall Mullivaikal ist jetzt zwei Jahre alt. Viel ist über die Sache geschrieben worden. Diskussionen über Mullivaikal kann nicht auf Völkermord und Massengräber begrenzt werden. Eine offensichtliche Analyse der Ereignisse muss berücksichtigt werden, um die wirklichen Motive, die zu dem Massaker führte zu verstehen.

Hat Mullivaikal die staatliche Brutalität über die 25 Jahre des Krieges veranschaulichen können? Lassen Sie die Wahrheit gesagt. Das ist die Frage, die von allen, einschließlich der internationalen Gemeinschaft beantwortet werden muss.

Lavanjah Rajaratnam

8. Klasse

என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலா

நான் சென்ற ஆண்டு தாயகம் சென்று எனது பெரியம்மா வீட்டில் தங்கியிருந்தேன். அப்போது என் அண்ணாக்களின் கல்விச்சுற்றுலாவூடாக நல்லூர் கந்தசுவாமி கோவில், யாழ்கோட்டை, யாழ்நூலகம், பழைய பூங்கா போன்ற இடங்களுக்குச் சென்றேன். முதலில் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குச் சென்றதும் கோவில் கோபுரத்தை வணங்கிவிட்டுப் பாதணிகளைக் கழற்றிவிட்டு உள்ளே சென்று ஆறுமுகப்பெருமானைக் கும்பிட்டுவிட்டு பின்பு யாழ்கோட்டைக்குச் சென்றோம். அங்கு சென்றதும் மிகப் பழைமை வாய்ந்த அந்தக் கோட்டையைச் சுற்றிக் காணப்பட்ட பாழடைந்த அகழிகளைப் பார்த்தோம். பல வழிகளைக் கொண்டு சுரங்கங்களும் அமைக்கப்படிருந்தன.

அதன் பின்பு யாழ்நூலகம் சென்று நூலகத்தையும் பார்வையிட்டு, பழைய பூங்காவிற்குச் சென்றோம். அங்கு ஆயிரக்கணக்கான வௌவால்கள் தொங்கியிருந்தன. அவற்றுக்குக் கற்களால் எறிந்தேன். அவை மேலே பறந்து சென்றன. இவை எல்லாவற்றையும் பார்த்துவிட்டு இறுதியாக நாங்கள் வீட்டிற்குச் சென்றோம். அன்று முழுதும் மகிழ்ச்சியான நாளே. அண்ணா வளர்க்கும் கிளிக்கு எங்களது பெயரைச் சொல்லிக்கொடுத்தால், அந்தக்கிளி சொல்லிக் கொடுத்த பெயரை மிகவும் அழகாகக் கூறும். இவற்றை எல்லாம் பார்த்து மகிழ்ந்தேன். நான் இருக்கும் நாட்டையும் தாய் நாட்டில் இருக்கும் இயற்கையையும் எண்ணி மகிழ்ந்தேன்.

செல்வி சியாமி கண்ணன்

வளர்நிலை – 4

தென்மானில விளையாட்டுப் போட்டிக்கு செல்லும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தமிழ் போல் நிலைத்திருக்க வாழ்த்துகிறேன்.



17வது அகவை நிறைவைக் காணும் "முன்சன்" தமிழாலயத்தை வாழ்த்தும் பெரும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததையிட்டு நான் பெருமகிழ்வு அடைகிறேன். பெற்றதாய் மீது அன்பு கொண்டவனே தான் பிறந்து வாழ்ந்த தாய் மண் மீதும் காதல் கொண்டவனாய் இருப்பான். இந்த இரண்டையும் நேசிக்கத் தெரிந்த மனிதனுக்கே தனது தாய் மொழியின் அருமைபெருமை தெரியும்" என்று சொன்னால் அது மிகையில்லை. புலம்பெயர் தேசத்தில் வளர்ந்து வரும் எமது இளம் தலைமுறைக்குத் தாய் மொழியை எடுத்துச் செல்லும் அரும் பணியைச் செய்ய தூரநோக்குச் சிந்தனை கொண்டு 17வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட முன்சன் தமிழாலயம் இன்று வளர்ந்து பெருவிருட்சமாக வேரூன்றி நிற்பதைப் பார்க்கின்ற போது நான் தமிழனாகப் பெருமைகொள்கிறேன்.

**"கோவில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்"** என்பது பழமொழி. ஆனால், இன்று புலத்தில் "தமிழாலயம் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்பது புதுமொழி. இதற்கு அமைவாக முன்சன் தமிழாலயம் திகழ்கின்றது என்பது பெருமைக்குரிய விடயமாகும். மேலும், கடந்து வந்த பாதைதனைப் பாடமாகக் கொண்டு, எதிர்வரும் காலந்தன்னில் மென்மேலும் தாய்மொழிக் கல்வி என்னும் உயர்ந்த பணியில் **என்றும் வெற்றி** என்ற பாதையில் முன்னேறிச் செல்ல நூர்ன்பேர்க் தமிழாலயம் சார்பில் இதயம் பூரித்த பேரன்போடு வாழ்த்துவதோடு நின்று விடாது முன்சன், நூர்ன்பேர்க் தமிழாலயங்களின் வளர்ச்சிக்கு இரு தமிழாலயங்களின் நிர்வாகிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் ஒருமித்த சகோதர அன்புணர்வுடன் இணைந்து பணியாற்றத் தொடர்ந்து முன்வர வேண்டுமென உரிமையுடன் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வதுடன், கடந்த காலங்களில் எமது தமிழாலய வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் உதவி புரிந்த முன்சன் தமிழாலய நிர்வாகி திரு நா. நிர்மலதாசன், பரீட்சைக் காலங்களில் தலைமை நடுவராக முன்னின்று பணி செய்த ஆசிரியர் திரு சி. இளவழகன், அவர்களுடன் இணைந்து செயலாற்றிய ஏனைய ஆசிரியர்களுக்கும் இந்த இனிய நாளில் நூர்ன்பேர்க் வாழ் ஈழத்தமிழர்கள் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதிலும் பெருமிதம் அடைகிறேன்.

முள்ளிவாய்க்கால் பேரவலம் நடந்து முடிந்த கையோடு தமிழாலயங்களின் இருப்பும் இல்லாமல் அழித்தொழிக்கப்படும் என்றே பலராலும் எதிர்பார்க்கப்பட்டது. இந்தக் காலகட்டத்திற் தமிழாலயங்கள் பற்பல சவால்களை எதிர்நோக்கிய போதும் தமிழ்த்தேசியத்தின் மீது நம்பிக்கை கொண்ட மக்களினது ஒத்துழைப்பினாலும், அர்ப்பணிப்புடன் உழைக்கின்ற நிர்வாகிகள், ஆசிரியர்களினதும் முயற்சியினாலும் தமிழாலயங்களின் ஒருங்கிணைப்பு நடுவமாகச் செயலாற்றும் தமிழ்க் கல்விக் கழகத்தின் நேர்த்தியான வழிகாட்டலினாலும் தமிழாலயங்கள் எதிர்நோக்கிய பல சவால்களையும் கடந்து வந்த சாதனைப் பெருவிழா இது என்றால் அது மிகையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வகை இடையூறுகள் வருகின்ற போதிலும் அதனையும் வெற்றி கொண்டு தாய்த் தமிழ்க் கல்வியுடன், தமிழர் பண்பையும் எம் புலத்துச் சிறார்களுக்குக் கற்றுக் கொடுக்கும் ஆலயமாய், வெள்ளி- பொன்- வைரம் என அனைத்து விழாக்களும் கடந்து, இன்னும் பற்பல பெருவிழாக்கள் கண்டு, காலத்தால் நிலைத்து நின்று அன்னைத் தமிழுக்குச் சேவை செய்திட வாழ்த்துகிறேன்.

"வாழிய...வாழிய...பல்லாண்டு காலம் தமிழ்ப் பணி தொடர...."

இறுதியாக முன்சன் தமிழாலயத்தின் பதினேழு வருடக் கல்விப் பயணத்தில் தாய் மொழிக் கல்வியைக் கற்றுச் சாதனை படைத்த மாணவர்களுக்கும் கை கொடுத்து உதவிய பெற்றோர்களுக்கும் சற்றும் சளைத்து விடாது, மன உறுதியுடன் உழைக்கும் தமிழாலய நிர்வாகிக்கும், மற்றும் பிரதிபலன் பாராது சேவை நலனோடு அயராது உழைக்கும் ஆசிரியர்களுக்கும் இந் நேரத்தில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் தங்கள் தமிழ்ப்பணி தொடர நெஞ்சார வாழ்த்தி, இனி வரும் காலங்களிலும் முன்சன் தமிழாலயத்தின் கல்விப்பயணம் சாதனைகள் படைக்கும் ஆண்டுகளாய்த் தொடர, தமிழ் அன்னையை வேண்டி விடைபெறுகிறேன்.

நன்றி

மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், உதவி நிர்வாகி

ந.யோகராசா

நிர்வாகி, தமிழாலயம் - நூர்ன்பேர்க்.

தமிழர் திருநாளில் தமிழ்த்திறன் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களைக் கௌரவிக்கும் போது




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் எண்ணத்தில்...



எமது தமிழாலயம் 1994 ஆண்டு 8 மாணவர்களுடனும் இரண்டு ஆசிரியர்களுடனும் ஆரம்பிக்கப்பட்டது. இன்று எமது தமிழாலயம் பல சாதனைகளைக் கண்டு பாரியவளர்ச்சியுடன் சிகரமாக உறுதியுடன் தலை நிமிர்ந்து 281 மாணவர்களைத் தன்னகத்தே கொண்டு 17வது அகவையில் காலடி எடுத்து வைத்திருக்கிறதைக் கண்டு பெருமகிழ்வடைகிறேன்.

நமது பிள்ளைகள் புலம்பெயர்ந்தநாட்டில் வேற்று மொழிக் கலாச்சாரத்தில் வாழ்ந்தாலும் மாணவர்களின் நெஞ்சகங்களுக்குத் தளராத நம்பிக்கையுடன் துணிவூட்டி, தாய்மொழிப் பற்றூட்டித் தமிழாலயத்தின் மூலம் ஒன்றிணைத்து வள்ளுவன் தந்த தமிழ் உணர்வை ஊட்டிக் கற்பிக்கின்றோம். மழலையர்நிலையில் ஆரம்பித்து இன்று ஆண்டு 12 வரை மாணவ மாணவிகள் கற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.

எமது பிள்ளைகள் கிடைத்தற்குரிய பேறாகிய உயர்கல்விகற்று சிறந்துவாழவேண்டும் என்பதற்காகப் 12ம் ஆண்டு வரை தமிழ்மொழியைக் கற்றுப் புரிந்துணர்வுமூலம் டொச் மொழியை சர்வகலாசாலையிற்கற்றுச் சிறந்த வாழ்வு வாழவேண்டும் என்பதே எமது நோக்கம். ஆனால், பெற்றோர் அதைச் சிந்திப்பதில்லை. தாய்மொழிக் கல்வியை இடையில் நிறுத்துகின்றனர். அதனால் மிகவும் கவலை அடைந்துள்ளோம். முழுமையாகக் கற்பதனால் சிந்தனைத்திறன் மேலும் வளர்ச்சியடைகின்றது. தமிழிலுள்ள நுட்பங்களையும் அறிவதனால் டொச்மொழியையும் இலகுவாகக் கற்று சர்வகலாசாலைக்கும் போகமுடியும். தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை புதிய கல்வித் திட்டமாக புலன்மொழி வளத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளது. இதன்மூலம் மாணவர்கள் ஒரு படி முன்னேறியுள்ளார்கள். எதிர்காலச் சந்ததிகளை முழுமையான தமிழர்களாக மாற்றுவது எங்கள் இளந்தலைமுறையினரின் எதிர்காலக் கடமையாகும்.

புலம் பெயர்ந்த நாட்டிலும் பெற்றோர்கள் எவ்வளவு சிரமத்திற்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள். விடுமுறை நாட்களிலும் ஓய்வை எதிர்பார்க்காமல் பிள்ளைகளுக்குத் தமிழ்மொழிக் கல்வியை ஊட்டுவதற்கு அழைத்து வருகின்றார்கள். தமிழினத்தின் பண்பாடுகளைத் தமது பிள்ளைகளுக்குக் கைமாற்றுச் செய்வதில் பல சிரமங்களையும் செலவுகளையும் சந்திக்கின்ற போதிலும் அவை அனைத்தையும் ஒரு சவாலாக ஏற்று எம்முடன் சேர்ந்து நின்று ஒத்துழைக்கின்றார்கள்.

இப் பூமிப்பந்தில், நாம் வாழ்ந்த மண்ணை விட்டுச் சொந்தம் பந்தம் - சொத்து சுகம், எமது தாய்மண் அனைத்தையும் தொலைத்து அல்லல்பட்டு ஈற்றில் புலம் பெயர்ந்த நாட்டில் வாழ்ந்தாலும் எங்களுக்குக் கிடைத்தற்கரிய சொத்து எம் உயிரினும் மேலான தமிழ். இதைக் கற்பதற்குச் சகல நாட்டிலும் தமிழாலயங்கள் இருப்பதையிட்டு நாம் மகிழ்வடைகின்றோம். இந்தச் சந்தர்ப்பத்தைக் கைவிடாமல் பெற்றோர்களாகிய உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் பிள்ளைகள் முழுமையாகத் தமிழைக் கற்றுக் கொள்வதற்குத் தமிழாலயத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி கற்ற பண்பாளர்ளைச் சான்றோர் எனச் சிறப்பித்துக் கூறுவர். கற்றோருக்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு என ஔவையார் கூறுகிறார். **"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து"** கல்வியை நாள்தோறும் கிரமமாகக் கற்றல் வேண்டும். எனவே, ஒவ்வொரு பெற்றோரினதும் தலையாகிய கடமை, நம் உயிரினும் மேலான தமிழ்க் கல்வியைப் பிள்ளைகளுக்கு ஊட்டி, கண்போலக் கருதி நாள்தோறும் கற்று அறிவாளிகளாய் உருவாக்க முயற்சி செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி இரத்தினமலர் மாணிக்கராஜா

ஆசிரியை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகிறேன்


17வது அகவையில் காலடி வைக்கும் முன்சன் தமிழாலயம் மென்மேலும் வளர வேண்டுமென எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தமிழாலயத்தினைத் திறம்பட நிர்வகிக்கும் நிர்வாகி நிர்மலதாசன் அவர்கட்கும் கல்வி கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களிற்கும் எனது நன்றி கலந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் அதேவேளையில், பல மாணவ மாணவியரை உருவாக்கி அவர்களை எதிர்காலத்தின் தமிழாலய வளர்ச்சிக்கு உதவுபவர்களாக உருவாக்க வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

நன்றி

பழைய மாணவி மற்றும் முன்னாள் ஆசிரியை

செல்வி சிவதர்ஷினி சிவநாதன்

2010–2011 பொதுத் தேர்வின் போது முன்சன்–அவுக்ஸ்பூர்க் தமிழாலய மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழும் கலையும் தந்த தமிழாலயம்

எமது தாய் மண்ணை விட்டு துரதிஷ்டவசமாகப் புலம்பெயர்ந்து அந்நிய நாடுகளில் வாழும் என்போன்ற இளம் சமுதாயத்தினரின் அறிவுக் கண்களுக்கு இன்றியமையாத விருந்தாகத் தமிழாலயங்கள் அமைந்திருக்கின்றன. இவை எமக்குத் தமிழ்க் கல்வியை மட்டும் கற்பிப்பதோடல்லாமல் எமது கலை, கலாச்சாரம், பண்பாடு, பண்டைய வரலாறுகள் என்பவற்றையும் புகட்டி வருகின்றன. இவ்வகையில் அமைந்ததே எமது முன்சன் தமிழாலயமும் ஆகும்.

நான் 1997ம் ஆண்டு எமது தமிழாலயத்தில் இணைந்து கொண்டேன். ஆனால், ஆரம்பத்தில் எமது பாடசாலை இடப்பற்றாக்குறை மற்றும் ஆசிரியர் போதாமை போன்ற பல பிரச்சனைகளை எதிர் கொண்டது என்று கேட்டறிந்து கொண்டேன். எனினும், சோர்வடையாமல் உறுதியுடன் எந்த இடர்பாடுளையும் எதிர் கொண்டு 281 மாணவர்களும் 22 ஆசிரியர்களும் உள்ளடங்க மிகப்பெரிய பாடசாலையாகத் திகழ்கிறது. நான் எனது தமிழாலயத்தில் தமிழ்மொழிக் கல்வியறிவை வளர்த்தது மட்டுமன்றி நல்ல பண்பாடு, பழக்கவழக்கங்கள்,வெற்றி தோல்வியைச் சமமாக ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை என்பவற்றையும் கற்றுக் கொண்டுள்ளேன். எனது ஆசிரியர்களின் கற்பித்தல் திறமையினாலும் பெற்றோர்களின் ஊக்கத்தினாலும் நான் தொடர்ந்து விடாமுயற்சியுடன் படித்து 11ம் ஆண்டுப் பொதுத்தேர்விலும் சித்தியடைந்துள்ளேன்.

எமது தமிழ்ப் பாடசாலையில் நடனம், சங்கீதம், மிருதங்கம், வீணை போன்ற நுண்கலைகளும் கற்பிக்கப்பட்டு வருகின்றன. இத்துடன், எமது தமிழாலயத்தைப் பன்முகப்படுத்தும் முகமாகத் தேர்வுப்பிரிவு, தமிழ்த்திறன்போட்டிப்பிரிவு, கலைப்பிரிவு, விளையாட்டுத்துறைப்பிரிவு எனத் துறைகள் வகுக்கப்பட்டு, இத் துறைகள் ஒவ்வொன்றும் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் மற்றும் பெற்றோர்களாலும் வழிநடாத்தப்பட்டும் வருகின்றன. இதனால், பாடசாலையின் பணிகள் யாவும் ஒழுங்காகவும், சிறப்பாகவும் நடைபெற்று வருகின்றன. எமது பாடசாலை பொங்கல்விழா, வாணிவிழா, இல்ல விளையாட்டுப்போட்டி என்பவற்றையும் நடாத்தி வருகின்றது. நானும் இந் நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு, எமது தமிழாலயத்திற்குப் பெருமை தேடிக் கொடுத்திருக்கிறேன். இவை மாத்திரமின்றி எமது தமிழாலயம் காலத்திற்கும் தேவைக்கும் ஏற்றவாறு ஈழ மண்ணில் வாழும் எமது உறவுகளுக்கும் உதவிக்கரங்களை நீட்டியுள்ளது. இவ்வாறாக, எமது தமிழாலயம் பரிணாம வளர்ச்சி கண்டுள்ளது.

எமது தமிழாலயத்தின் முன்னேற்றப் பாதைக்கு எப்பொழுதும் படிக் கற்களாக இருப்பவர்கள் பாடசாலை நிர்வாகத்தினர், பெற்றோர்கள் என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். ஆசிரியர்கள் எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் தன்னலமற்ற புனித சேவையை மாணவர்களாகிய எமக்கு ஆற்றி வருகின்றனர். பெற்றோர்களும் பல சிரமங்களுக்கு மத்தியில் தம்மாலியன்ற பங்களிப்பைச் செய்து வருகின்றனர். மற்றும் முக்கியமாக எமது பாடசாலை ஆரம்பித்த நாளிலிருந்து இன்றுவரை தொடர்ந்து எமது பாடசாலை நிர்வாகியாக திரு. நிர்மலதாசன் அவர்கள் பணியாற்றி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வருகிறார். இவரின் ஓயாத உழைப்பும், விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாக அமைந்துள்ளது.

நான் பழைய மாணவன் என்ற வகையில் எமது தமிழாலயத்தில் ஒரு வருடம் உதவி நிர்வாகியாகப் பணியாற்றி உள்ளேன். எனது ஜேர்மன் பாடசாலையின் உயர்தர வகுப்புக் காரணமாக ஏற்பட்ட சில தடங்கல்களால் இப்பணியைத் தொடரமுடியவில்லை. ஆயினும், நான் எனது தமிழாயத்திற்குக் கணினி வேலைகள் மற்றும் வெளிவேலைகள் உட்பட என்னாலியன்ற பல உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறேன். எதிர்காலத்திலும் செய்துகொண்டேயிருப்பேன். இதேபோல், எனது சக மாணவர்களும் எதிர்காலச் சந்ததியினரும் தம்மாலியன்ற பங்களிப்புக்களைச் செய்யவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இது தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரதும் கடமையும் கூட என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது யாவரும் அறிந்த முதுமொழி. ஆனால் நான் கூறுவது என்னவெனில், புலம்பெயர்நாடுகளில் "தமிழாலயம் இல்லாத நகரில் குடியிருக்க வேண்டாம்" என்பதேயாகும். எமது தமிழாலயம் பதினேழாவது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதை எண்ணி நான் மிக மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். மென்மேலும் பல துறைகளிலும் எமது தமிழாலயம் வளர்ச்சியடைந்து தனக்கென்றொரு தனி முத்திரை பதித்து, என்போன்ற பல சிறந்த மாணவர்களை உருவாக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

நன்றி

பழைய மாணவன்

செல்வன் டிலக்ஷன் சோதிலிங்கம்

மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டின் போது எமது குழு விளையாட்டு வீரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பொங்கல் திருநாள்

தமிழர் திருநாள், தைப்பொங்கல் திருநாளாகவும் தமிழ்ப் புத்தாண்டுப் பிறப்பாகவும் உழவர் திருநாளாகவும் விளங்குகின்றது. இத்திருநாள் தைத்திங்கள் முதலாம் நாளில் கொண்டாடப்பட்டு வருகின்றது. இத்தினத்தன்று உழவர்கள் தமது உழைப்பிற்கு உதவிசெய்த கதிரவனுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டாடும் விழாவாகும்.

தைப்பொங்கல் சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும் மகிழ்ச்சியான தினமாகும். பொங்கல் நாளுக்கு முதல்நாளே வீடுகளைச் சுத்தம் செய்வர். பொங்கல் அன்று வீட்டு முற்றத்தை மெழுகிக் கோலமிட்டு அலங்கரிப்பர். சாணத்தில் பிள்ளையாரை அமைத்து வைப்பர். பூரண கும்பம் வைத்துக் குத்துவிளக்கு ஏற்றுவர். பழம், பாக்கு, வெற்றிலை ஆகியவற்றையும் வைப்பர்.

புதிய பானைக்கு மாவிலை, இஞ்சியிலை, மஞ்சளிலை ஆகியவற்றைக் கட்டி அழகு செய்வர். பின்னர், புதிய அடுப்புகளின் மேல் புதிய பானையில் நீர் நிறைத்துப் பாலும் விட்டு வைப்பர். அடுப்பில் தீ மூட்டி எரிப்பர். பொங்கற் பானையிலிருந்து பால்பொங்கி வழியும்பொழுது சிறுவர்கள் பட்டாசுகள் கொளுத்தி மகிழ்வார்கள். அவ்வேளையில், புத்தரிசியைப் பானையில் முறைப்படி இடுவர். சர்க்கரை, முந்திரிப்பருப்பு ஆகியனவற்றையும் பொங்கற் பானையிலிடுவர். பொங்கல் பதமாக வந்ததும் பொங்கற் பானையை அடுப்பில் இருந்து இறக்குவர்.

பின்னர், சூரியனுக்குப் பொங்கலைப் படைத்து வழிபடுவர். பொங்கலைத் தாமும் உண்டு, அயலவர்களுக்கும் கொடுத்து மகிழ்வார்கள். தங்கள் உறவி னர்களது இல்லங்களுக்குச் சென்று பொங்கல் வாழ்த்துக் கூறி மகிழ்வார்கள்.

செல்வி தயாளினி சிவலோகானந்தன்

ஆண்டு - 7




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்ப வளர்ச்சி

ஒரு தொழில்நுட்ப வளர்ச்சி என்பது மனிதவாழ்வில் பல்வேறு துறைகளில் புதிய நவீன தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்துவதைக் குறிக்கும். முற்காலத்தில் மனிதர்கள் தமக்குள் தொடர்புகள் கொள்வதற்கும் பொழுதுபோக்குச் சாதனங்கள் பாவிப்பதற்கும் வாய்ப்புகள் இருக்கவில்லை. கைத்தொலைபேசி, கணினி என்பவையின்றி அவர்கள் இலகுவான வாழ்வை வாழ்ந்து வந்தனர். இயந்திரங்களின் உதவியின்றி வேலைகளைச் செய்து முடித்தனர். இவ்வரலாற்றின் ஒரு காலப்பகுதியில் இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டது.

இம்மாற்றம் தொமசு நியூகொமெனால் (Thomas Newcoman) 1712இல் கண்டுபிடிக்கப்பட்ட நீராவி இயந்திரத்தால் ஆரம்பிக்கப்பட்டது. இக்கண்டுபிடிப்புத்தான் இங்கிலாந்தின் தொழில்நுட்ப வளர்ச்சியைத் தொடக்கியதாகும். இங்கிலாந்தில் தொழில்நுட்ப வளர்ச்சியின்மேல் அதிகளவு கவனம் செலுத்தினர். நிலத்தை உழுவதற்கும் விவசாயம் செய்வதற்கும் பல்வேறு இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவ்வியந்திரங்களால் பல பயன்களைப் பெற்றனர். கனிய வளத்தை உபயோகிக்கத் தொடங்கினர். அக்காலத்தில் பல புதுப்புது இயந்திரங்கள் உருவாக்கப்பட்டதால் வேலைவாய்ப்புகள் உருவாயின. ஆடைகள் மக்களால் அதிகளவில் பயன்படுத்தப்படுவதால் ஆடை உற்பத்தி நிறுவனங்கள் அதிகளவில் நிறுவப்பட்டன. இவையெல்லாம் இங்கிலாந்தின் தொழில்நுட்ப வளர்ச்சிக்குக் கரணியமாக விளங்கின. அங்கு ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சி 19ம் நூற்றாண்டில் ஐரோப்பா முழுவதிலும் பரவியது.

பின்பு, இங்கிலாந்தின் இயந்திரங்களை ஒத்த இயந்திரங்களையும் அவற்றை விடச் சிறந்த தொழில்நுட்பமுடைய இயந்திரங்களையும் ஏனைய ஐரோப்பிய நாடுகள் தயாரித்தன. எனினும், முக்கியத்துவம் வாய்ந்த நவீன நீராவி இயந்திரம் 1796இல் ஆங்கிலேயரான ஜெயம்சு வட் (James Watt) என்பவரினால் கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன், நெசவு இயந்திரமும் கண்டுபிடிக்கப்பட்டது. நெசவு இயந்திரத்தால் பல ஆடைகளை உற்பத்தி செய்ய முடிந்தது. எனினும், இத்தொழில்நுட்ப வளர்ச்சியில் நன்மை மட்டும் ஏற்படவில்லை. முன்னர், தொழிற்சாலைகள் நகர்ப்புறங்களில் அமைந்திருந்ததால் நகரங்களின் வளி அசுத்தமடைந்தது. அத்துடன், சிறுவர்களைத் தொழிலில் ஈடுபடுத்தவேண்டிய நிலை ஏற்பட்டது. பல வேலைவாய்ப்புகள் ஏற்பட்டிருந்தாலும் பாமரமக்கள் பாதிக்கப்பட்டனர். குறைந்த கூலியில் அதிகளவு நேரம் உழைப்பதால் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களை அமைத்துப் பல ஊர்வலங்களை நடத்தினர். கிளர்ச்சிகள் செய்தனர். இதனால், தொழிலாளர்கள் வாழ்வில் சில நன்மைகள் ஏற்பட்டன.

இத்தொழில்நுட்ப வளர்ச்சி சில துன்பங்களை ஏற்படுத்தினாலும் இக்காலப்பகுதி நமக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. தொழில்நுட்ப வளர்ச்சியினால்தான் உலகிலுள்ள அனைத்தையும் ஒரு நொடியில் அறிவதற்கான வாய்ப்பு நமக்கு ஏற்பட்டது. அத்துடன், இக்காலப்பகுதியில் பொழுதுபோக்குச் சாதனங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. புதிய தொழில்நுட்பங்கள் மக்கள் நல்வாழ்வுக்குப் பயனுள்ள விதத்தில் அமைய வேண்டும். இதுவே சிறப்பு.

செல்வன் நிதுர்சன் நந்தகுமார்

ஆண்டு – 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Industrialisierung

Unter einer Industrialisierung versteht man ein Wachstum in der Wirtschaft, Bildung und anderen Teilbereichen. Früher lebten die Menschen ohne jeglichen Möglichkeiten der Kommunikation oder Unterhaltung. Sie lebten ein einfaches Leben ohne Sachen wie Handys, Computer und so weiter. Sie mussten ihre Arbeiten ohne Hilfe von Maschinen erledigen. Jedoch gab es einen entscheidenden Punkt in unserer Geschichte der diesen Zustand veränderte.

Alles begann im Jahre 1712 als Thomas Newcomen eine einfache Dampfmaschine erfand. Dies war eine ausschlaggebende Erfindung für den Anfang der Industrialisierung in England. In England fixierte sich alles auf die Industrialisierung. Es wurden viele gewinneinbringende Maschinen zur Bewirtschaftung von Feldern gebaut. Man begann die Rohstoffe besser zu benutzen. Da viele neue Maschinen gebaut wurden benötigte man gleichzeitig viele Arbeiter. Da die Nachfrage nach Kleidung in England sehr hoch war entstanden zusätzlich mehr Absatzmärkte. Dies alles führte letztendlich zur Industrialisierung. Nach der Industrialisierung dort begannen im 19.Jahrhundert in ganz Europa Industrien zu entstehen. Sie ahmten nicht nur England nach sondern erfanden mehr und effizientere Maschinen als die Engländer. Jedoch stammt die wichtige Dampfmaschine aus dem Jahre 1796 von James Watt, einem Engländer. Zudem kam noch die Erfindung des Webstuhls hinzu. Durch den Webstuhl war es leichter Kleidung herzustellen. Jedoch hatte diese Industrialisierung nicht nur Vorteile. Städte versanken in Rauch und Qualm, da die Industrien anfangs direkt neben Städten gebaut wurden. Auch nahm die Rate von Kinderarbeit zu. Es entstanden viele Gewerkschaften, da die Arbeiter zu viel arbeiteten und dafür nur wenig bezahlt wurden. Auch wenn viele Arbeitsplätze vorhanden waren, Bauern, die in der Landwirtschaft arbeiteten, verloren ihren Job, da sie größtenteils durch Maschinen ersetzt wurden.


Auch wenn die Industrialisierung schwerwiegende Nachteile aufgezeigt hat ist nun dieses Zeitalter für uns sehr wichtig. Durch die Industrialisierung sind wir in der Lage jede neue Nachricht in anderen Ländern schnell zu erfahren. Auch haben wir jegliche Möglichkeiten uns durch Medien zu unterhalten.

Nithursan Nanthakumar

9. Klasse

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2005ம் தொடக்கம் 2010 வரையிலான காலப்பகுதியில் யேர்மன் தென்மாநில ரீதியாக நடைபெற்ற மாவீரர் வெற்றிக்கிண்ண மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகளில் சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள்**



சுஜிந்தன் விவேகானந்தன்

2006



ஜொஹானஸ் பீற்றர் நொலெஸி

2006

2007

2008



டிரும்ஜா பீற்றர் நொலெஸி

2006

2007


2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வியாசகி கோவிந்தராஜா

2008



கபிலன் சத்தியாபரன்

2008



சுஜீவன் மாணிக்கராஜா

2007

2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்மாநில மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டியில் 1ம் இடத்தை பெற்ற போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுத்துறை

மனித உடல்உள நலத்தை வளர்ப்பதற்கும் அதன் வலுவை மேலும் மேலும் உறுதியாக்குவதற்கும் மிகவும் அவசியமானது விளையாட்டு ஆகும். அத்துடன், நல்ல பண்புகளையும் சிறந்த பழக்க வழக்கங்களையும் உருவாக்கக் கூடிய வலிமையும் பொருந்தியது விளையாட்டுத்துறையாகும்.

சில வேளைகளில், வேறு துறைகளில் அடைய முடியாத சிறப்புக்களையும் பெருமைகளையும் தற்கால உலகில் விளையாட்டுத்துறை மூலம் இலகுவாகப் பெற்றுக்கொள்ளலாம். அதற்காகத்தான், யேர்மன் பாடசாலைகளில் விளையாட்டுத்துறைக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

மெய்வல்லுனர் விளையாட்டு (Leichtathletik), டெனிஸ் (Tennis), கொல்வ் (Golf), வேக உந்து ஓட்டம் (Formel 1 Rennen) போன்ற விளையாட்டுகளில் பலர் மிகப் பிரசித்தி பெற்றுப் பிரகாசிப்பதோடு பெருந்தொகையான பணத்தையும் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

உலகில் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் உதைப்பந்தாட்ட வெற்றிக் கிண்ணத்தையும், ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியையும் ஒரே நேரத்தில் கூடிய தொகையானோர் நேரடி ஒளிபரப்பின் மூலம் பார்த்து இரசிக்கின்றார்கள். இந்தச் சிறப்பு வேறு எந்தத் துறைக்கும் இல்லவே இல்லை.

நாங்களும் முழு முயற்சியுடன் உற்சாகமாக விளையாட்டுத்துறைக்கும் முக்கியத்துவம் கொடுத்து ஈடுபட்டால் ஒரு நாள், நகர அளவிலோ, நாடளாவிய ரீதியிலோ பிரபல்யம் அடைய நிச்சயமாக வாய்ப்புக்கள் உண்டு.

செல்வி டிரும்ஜா பீற்றர் நொலெஸி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலாவின் முக்கியத்துவம்

இன்றைய நவீன உலகில் மனிதனின் வாழ்வு இயந்திரத் தன்மை உடையதாக மாறிவிட்டது. அதிலும் ஐரோப்பிய நாடுகளில் வாழும் நாம், எமது உடல்நலத்தையும் உளநலத்தையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய கட்டாய நிலைமையில் வாழ்கின்றோம். இதற்குச் சுற்றுலா ஒரு மிகச் சிறந்த மருந்தாக நான் கருதுகிறேன்.

சுற்றுலா, குடும்பத்துடன் மட்டும் அல்லாது நண்பர்களுடனும் செல்லலாம். ஒரு சூழலிருந்து இன்னொரு சூழலுக்குச் செல்லும் போது மனதிற்குப் புதுத்தென்பு கிடைக்கிறது. வியக்கத்தக்க அதிசயங்களையும் இயற்கைக்காட்சிகளையும் கண்டுகளிக்கும் போது மனம் இலகுவாகிறது. சுற்றுச்சூழல் எமது உடலைப் பலப்படுத்துகிறது. வேலையினால் ஏற்படும் மன அழுத்தம் குறைகிறது. காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் விளைவுகளிலிருந்தும் எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

பல நாட்டு மக்கள் சுற்றுலாவைத் தமது வாழ்வில் ஒரு பகுதியாகக் கருதுகின்றனர். பொழுதுபோக்கிற்காக மட்டுமல்ல விடுமுறையை மகிழ்ச்சியுடன் கழிப்பதற்காகப் பெரியோர் முதல் சிறியோர் வரை சுற்றுலாவை விரும்புவர். அது அவர்களின் ஆரோக்கியமான வாழ்விற்கும் நீண்ட ஆயுளுக்கும் மிகவும் முக்கியமானது.

செல்வன் விதுர்சன் சுரேஸ்குமார்

ஆண்டு – 7




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகத்தில் சுனாமி ஏற்படுத்திய பேரழிவு

சுனாமி ஜப்பானிய மொழியில் துறைமுக அலை என்று குறிப்பிடப்படும். பூமி அதிர்ச்சி மண் சரிவுகள், எரிமலை வெடிப்பு , விண்பொருட்களின் மோதுகை போன்றவை சுனாமி அலைகளை ஏற்படுத்தக் கூடிய மூலக் கரணியங்களாகும். இது 2004 ஆம் ஆண்டில், டிசம்பர் 26 ஆம் நாளன்று சுமாத்திராத் தீவின் வடமேற்குக் கடற்கரையிலிருந்து கிட்டத்தட்ட 150 கி.மீ. தூரத்தில் ஆழக்கடலில் நிகழ்ந்த நிலநடுக்கத்தால் இச்சுனாமி உருவானது.

உலக மக்களைக் கண்கலங்கி ஏங்க வைத்து விட்டுச் சென்று விட்டது சுனாமி என்கின்ற ஆழிப்பேரலை. படுத்து உறங்கியவர்கள், பாடசாலை சென்றவர்கள், தொழில் புரியச் சென்றவர்கள், வழியால் போனவர்கள், வந்தவர்கள் அனைவரையும் அள்ளிச் சென்றது ஆழிப்பேரலை. கரையோரப் பிரதேசங்கள் அனைத்துமே அழிக்கப்பட்டன. தாய்மண் மீட்புப் போராட்டத்தில் பெரும் அழிவுகளைச் சந்தித்து அவலங்கள் சுமந்து வாழ்ந்த மக்களை இயற்கை தன் சீற்றத்தினால் சின்னாபின்னப்படுத்திச் சென்றுவிட்டது. தாய் தகப்பன் இன்றி அழும் பிள்ளைகள், மனைவி பிள்ளைகளை இழந்து நடைப்பிணமானோர் குடும்பத் தலைவன், சித்தப்பிரமை பிடித்தலையும் தாய்மார்கள். என்ன கொடுமை இது...?

கடல் நீர் புகுந்ததினால் உப்புநீராக மாறிவிட்ட நன்னீர், மலசலகூட வசதியின்மை, தொற்று நோய் அபாயம், எத்தனை துன்பமென்று தாங்கிக்கொள்வது. ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் அவதியுறும் மக்களுக்கு உதவுவதற்காக, வெளிநாட்டு உதவியுடன் திட்டங்களைச் செயற்படுத்த முன்பே பேரினவாதிகளின் எதிர்ப்பினால் நீதிமன்றத்தினால் தடை உத்தரவு போடப்பட்டுவிட்டது. உலகத் தமிழர்களின் உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்தது. தாயக விடுதலைக்குத் தோள் கொடுத்த மக்கள் சுனாமி என்கின்ற ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் தண்ணீர் குடிப்பதற்குக் கூடத் தவித்தார்கள்.

ஆழிப்பேரலை இடம்பெற்று ஏழு ஆண்டுகளை அண்மிக்கும் நிலையிற்கூடப் பாதிக்கப்பட்ட அம்மக்களின் வாழ்க்கையில் விடிவு ஏற்படவில்லை. புலம்பெயர்ந்த தமிழர்களாகிய நாம் அம்மக்களின் வாழ்வுக்கு ஒளியேற்ற வேண்டிய உயரிய பணிக்கு உரித்துடையவர்களாக இருக்கின்றோம். மீண்டும் இத்தகைய இயற்கை அழிவு ஏற்படக் கூடாது என இயற்கையைப் பிரார்த்திப்போம்.

செல்வி சாதனா சிவராசா

ஆண்டு - 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைப்பிரிவு

முன்சன் தமிழாலயம் இவ் ஆண்டு 17வது ஆண்டை நிறைவு செய்கின்றது. முன்சன் தமிழாலய மாணவர்கள் தமிழைக் கற்பதற்கு மட்டுமில்லாமல் கலையையும் கற்பதற்கு வழி முறைகள் செய்து கொடுத்திருக்கிறது முன்சன் தமிழாலயம். இதற்காகக் கலைப்பிரிவுப் பொறுப்பாளராகப் பணியாற்றும் நான் முன்சன் தமிழாலய நிர்வாகத்திற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். இந்தப் பணியைச் செய்வதற்கு உதவியாக இருந்த ஒவ்வொரு கலைவகுப்புப் பணியாளர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முதலில் கலைவகுப்பில் நடனவகுப்பு ஒன்றுதான் நடைபெற்றது. தற்போது சங்கீதம், வீணை, மிருதங்கம் என்று வளர்ச்சி அடைந்துள்ளது. இந்தக் கலைவகுப்புகளில் 50 மாணவர்கள் கலைகள் பயின்று வருகின்றார்கள்.

முதன்முதலில் நடன ஆசிரியையாக திருமதி உமா கிருபாகரன் பணியாற்றினார். பின் தொடர்ச்சியாக திருமதி வானதி தேசிங்குராஜா அவர்களும் திருமதி பிரியந்தி குணரட்ணம் அவர்களும் பணியாற்றினார்கள். இன்னும் ஒரு நடனப்பிரிவில் திருமதி கீதா தங்கேஸ்வரன் ஆசிரியையாகப் பணியாற்றி வருகின்றார். சங்கீதம் வீணை ஆசிரியையாக திருமதி ஜெயராணி சகாதேவன் அவர்களும் மிருதங்க ஆசிரியராகத் திரு சுகுமார் ஜெகநாதன் அவர்களும் பணியாற்றுகிறார்கள். முன்பு கற்பித்த கலை ஆசிரியர்களுக்கும் தற்போது, கற்பித்துக்கொண்டிருக்கும் கலை ஆசிரியர்களுக்கும் தமிழாலயம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கல்வியும் கலையும் நம்மிரு கண்கள்...

இதைப் பேணிக்காக்க வேண்டியது ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் கடமையாகும். அத்தோடு, கலையென்பது மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும். இதை மகிழ்ச்சியாகக் கற்பதே நன்று. இந்தக் கலைவகுப்புகள் தொடர்ந்தும் நல்ல வளர்ச்சி பெறவேண்டும் என மனமார வாழ்த்துகின்றோம்.

திருமதி தனேஸ்வரி சண்முகராசா

கலைப்பிரிவுப் பொறுப்பாளர்

தமிழாலயம் முன்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது தமிழாலயத்தின் நுண்கலைப்பிரிவின் உதவிச்செயற்பாட்டாளர்கள்

எமது தமிழாலயத்தின் நுண்கலைப்பிரிவுகளான நடனம், வாய்ப்பாட்டு, வீணை, மிருதங்கம் என்பனவற்றிற்கு கலைப்பிரிவுப் பொறுப்பாளருக்கும் கலைப்பிரிவு ஆசிரியர்களுக்கும் தொடர்பாளராக செயற்பாட்டாளராக பணியாற்றி கலைப்பிரிவுகள் நன்கு நடைபெற உதவுவோர் விபரம். இவர்களுடன் கடந்தகாலத்தில் உதவிச் செயற்பாட்டாளராகப் பணிபுரிந்தவர் திருமதி மஞ்சுளா ஜீவச்சந்திரன்.



நடனம் – உதவிச்செயற்பாட்டாளர்
திருமதி இராசமலர் ஸ்ரீவரதராசா



நடனம் – உதவிச்செயற்பாட்டாளர்
திருமதி சத்தியபாமா கணேசலிங்கம்



உதவிச்செயற்பாட்டாளர்
வாய்ப்பாட்டு – வீணை
திருமதி தனரஞ்சிதம் சிவகுமார்



உதவிச்செயற்பாட்டாளர்
மிருதங்கம்
திருமதி சிறிமதி சந்திரசேகரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழாலய நடன ஆசிரியை திருமதி சாவித்திரி இமானுவேல் அவர்களும் மாணவிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழாலய நடன ஆசிரியை திருமதி கீதா தங்கேஸ்வரன் அவர்களும் மாணவிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழாலய சங்கீத ஆசிரியை திருமதி ஜெயராணி சகாதேவன் அவர்களும் மாணவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழாலய வீணை ஆசிரியை திருமதி ஜெயராணி சகாதேவன் அவர்களும் மாணவிகளும்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மிருதங்க ஆசிரியர் திரு ஜெகநாதன் சுகுமார் அவர்களும் மாணவர்களும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது மாணவர்களின் ஓவியங்கள்...



அகிரஜன் திருச்செல்வம்




டர்சிகா பத்மநாதன்



பார்த்தீபன் இராமலிங்கம்



ஆன் சுஜானி றொபேட்



டிலானி சுபாஸ்கரன்



சஞ்சய் சுபநேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது மாணவர்களின் ஓவியங்கள்...



அமுதா பெ.


கிரண் கந்தன்



அபினா நவசீலன்


அங்கனி கிருஸ்ணபாபு


அச்யுதன் இராமதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Geschichte Deutschlands (Zusammenfassung)

ca. 2000 v. Chr. – 900 n. Chr.

Die deutsche Geschichte ist zeitlich sehr schwer einzugrenzen. Die Vorfahren der Deutschen sind höchstwahrscheinlich Germanen und Kelten. Diese hatten eine eigene Sprache und Schrift. Zudem besaßen sie eine eigene Kultur. Wirtschaftlich gesehen waren die Germanen Selbstversorger und in erster Linie Bauern und Jäger. Diese Stämme begannen nach einiger Zeit mit der Ausdehnung ihrer Territorien und eroberten hierbei weite Teile Europas, darunter auch Italien, was unweigerlich auch zum Untergang des römischen Reichs beigetragen hat.

900 n. Chr. – 1500 n. Chr.

Im 10. Jahrhundert begann erstmals die Geschichte mit dem Königtum. Deutschland nannte sich in dieser Zeit das Heilige Römische Reich Deutscher Nation. Das Christentum gewann während dessen immer mehr an Bedeutung. Es kam sogar soweit, dass für dessen Verbreitung Kriege geführt wurden.

500 n. Chr. – 1800 n. Chr.

Es herrschte die Ständegesellschaft in diesem Zeitraum. Die wenigen Adeligen hatten die Vorherrschaft und alle Übrigen konnten politisch nichts unternehmen. Die Bauern führten wegen dieser Unterdrückung mehrere, langjährige Kriege. Dadurch gelang es ihnen nach sehr langer Zeit im 18. Jahrhundert die verharrte Ständegesellschaft zu durchbrechen.

1800 n. Chr. – 1914 n. Chr.

Das Kaisertum hatte sich in Deutschland erneut etabliert. Wirtschaftliche Fortschritte rücken immer mehr in den Vordergrund. Zudem kam es weiterhin zu erneuten Kriegsausbrüchen in Europa. Die Situation spitzt sich in den darauf folgenden Jahren zu.

1914-1918

Der Erste Weltkrieg brach wegen verschiedensten Problemen im Bereich der Wirtschaft und der Politik aus. Auf der einen Seite kämpfen Großbritannien, Frankreich und Russland, auf der anderen Deutschland, Österreich und Ungarn.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Deutschland wird Verlierer dieses Krieges und musste die Alleinschuld im Versailler Vertrag unterzeichnen.

1918-1939

Deutschland wurde erstmals zu einer Demokratie (Weimarer Republik). Immer mehr ging Deutschland nun teilweise wegen den Sanktionen des Versailler Vertrages aber auch wegen der Weltwirtschaftskrise in New York finanziell in den Ruin. Die Folge war, dass eine Hyperinflation eintrat. Ein Brot kostete beispielsweise 10 Mio. Mark.

1939 – 1945

Hitler erkennt seine Chance und nutzt die schlechte Stimmung des deutschen Volkes aus und kommt durch seine strategisch durchdachten Manöver an die Macht und wollte nun seine Ziele durchsetzen. Seiner Ansicht nach waren nur Arier lebenswürdige Menschen. Arier sind seiner Beschreibung nach groß, blond, stark und haben blaue Augen (ironischer Weise entsprach Hitler selber nicht diesem Ideal). Alle anderen minderwertigen Rassen, wie 6 Mio. Juden, wurden deshalb von Hitler und seinen Leuten umgebracht. Der Zweite Weltkrieg brach aus. Genau wie im Ersten Weltkrieg verlor auch Deutschland diesen Krieg.

1945 - heute

Daraufhin wurde Deutschland von den 4 Siegermächten übernommen. Aufgrund russisch-amerikanischer Meinungsunterschiedenen (Kommunisten vs. Demokraten) wurde Deutschland durch eine Mauer in West und Ostzone geteilt. Der Drang nach einer Wiedervereinigung war schließlich so groß, dass 1989 die Mauer fiel. Seit jeher leben die Deutschen in einer relativ friedvollen Demokratie.

Nisanth Nanthakumar

11. Klasse

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யேர்மனியின் வரலாறு (சுருக்கம்)

கி.மு 2000 – கி.பி 900

யேர்மனியின் வரலாற்றுக்கதையின் தொடக்கத்தைக் குறிப்பிடுவது சிரமமானது. யேர்மனியரின் முன்னோர் கேர்மானனும் கெல்ற்றனும் ஆவர். இவர்கள் ஒரு மொழியையும் எழுத்தையும் தெரிந்துகொண்டனர். அத்துடன், தனிப்பண்பாடு உடையவர்களாக இருந்தனர். பொருளாதாரத்தைப் பார்க்கும் பொழுது கேர்மானியர் பெரும்பாலானவர்கள் வேட்டைக்காரர்களாகவும் கமக்காரர்களாகவும் இருந்தனர். இவ்வினம் சிறிய காலப்பகுதியின் பின்பு தங்கள் நிலப்பரப்பை பெருப்பிக்கத் தொடங்கி, இன்றைய ஐரோப்பாவின் சில நிலப்பரப்புகளைக் கைப்பற்றினர். கைப்பற்றிய நிலப்பரப்பில் இத்தாலிய நிலப்பரப்பும் அடங்கும். றோம இராச்சியத்தின் அழிவுக்கு இது ஒரு முக்கிய கரணியம் ஆகும்.

கி.பி 900 – கி.பி 1500

10ம் நூற்றாண்டில் ராஜாக்களின் ஆட்சிக்காலம் தொடங்கியது. யேர்மனி இக்காலப்பகுதியில் கைலிக இறோமிச றைக் டொய்ட்சர் நட்சியோன் (Heilige Römische Reich Deutscher Nationen) என அழைக்கப்பட்டது. கிறீத்தவ மதத்தின் முக்கியத்துவம் அதிகரிக்கப்பட்டது. இதன் வளர்ச்சிக்காகப் போர்களைக்கூடத் தொடுத்தனர்.

கி.பி 1500 – கி.பி 1800

இக்காலப்பகுதியில் வர்க்க (சமூக ஆதிக்க) முறை ஆட்சி அமைந்தது. ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கின்ற சிறுபான்மையினமாகவும் அரசியலுரிமை இல்லாத பெரும்பான்மையினமான கமக்காரர்களும் என இரு பிரிவினர்களாக வாழ்ந்தனர். தாழ்த்தப்பட்ட பெரும்பான்மையினம் நீண்ட ஆண்டுகாலப் போர்களைத் தொடுத்தனர். இப்போர்களினால் நீண்டகால இடைவெளியின் பின் சமூக ஆதிக்க ஆட்சி முறை ஒழிக்கப்பட்டது.

கி.பி 1800 – கி.பி 1914

பின்பு யேர்மனியில் அரசமுறை ஆட்சி நடைமுறைக்கு வந்தது. இந்த ஆட்சியில் பிசுமார்க் என்பவர் முக்கியத்துவம் வாய்ந்தவர். முதல்முறையாக அரசாங்கக் காப்புறுதிகளை, உதாரணமாக மருத்துவத்திற்கும் வேலைக்கும் நடைமுறைக்குக் கொண்டு வந்தார். அத்துடன், ஐரோப்பிய நாடுகளுக்கிடையே சிறந்த பொருளாதார அரசியல் தொடர்புகளை அமைத்தார். தொழில்நுட்ப வளர்ச்சியின் மீது அதிகளவு கவனம் செலுத்தப்பட்டது. பிசுமார்க்கின் ஆட்சிக்குப்பின் ஐரோப்பாவிலிருந்த சிறந்த தொடர்புகள் சுக்குநூறாகிப் போர்கள் ஏற்பட்டன. அடுத்த ஆண்டுகளில் எல்லாத் துறைகளின் நிலைமைகளும் மோசமடைந்தன.

கி.பி 1914 – கி.பி 1918

முதலாம் உலகப்போர், பொருளாதாரத்திலும் அரசியலிலும் பல பிணக்குகள் ஏற்பட்டதனால் உருவானது இப்போரின் போது. ஒரு பக்கத்தில் பிரித்தானியா, பிரான்சு, ரஷ்யாபோன்ற நாடுகளும் மறு பக்கத்தில் நின்ற யேர்மனி ஆஷ்த்திரியா –

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கங்கேரி ஆகிய நாடுகளுக்கு எதிராகப் போரிட்டன. யேர்மனி இப்போரில் தோல்வியைத் தழுவிக் கொண்டு
இப் போருக்கான முழுப்பொறுப்பையும் யேர்மனி ஏற்றுக்கொள்ளும் என வெர்சையர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

கி.பி 1918 – கி.பி. 1939

யேர்மனியில் முதன்முறையாக ஜனாதிபதி ஆட்சிமுறை நடைமுறைக்கு வந்தது (வைமாரர் றெபுபிலிக்). யேர்மனி வெர்சையர் ஒப்பந்தத்தின் விதிமுறைப்படி ஏனைய நாடுகளுக்கு நிதியுதவி அளித்ததாலும் நியுயோர்க்கில் தொடங்கிய உலகப்பொருளாதாரவீழ்ச்சியினாலும் யேர்மனிக்குப் பணப்பிரச்சனை ஏற்பட்டது. அதனால், பெரிய பணவீக்கம் ஏற்பட்டது. உதாரணமாக ஒரு இறாத்தல் பாணுக்குச் செலவிடும் பணம் 10 மில்லியன் டொச் மார்க்காக இருந்தது.

கி.பி 1939 – கி.பி. 1945

யேர்மனியரின் மோசமான நிலைமையைப் பயன்படுத்தித் தன் தந்திரோபாயத்தினால் ஆட்சியைக் கைபற்றித் தன் நோக்கங்களை நிறைவேற்ற முனைந்தார் கிட்லர். அவரின் கொள்கையின் அடிப்படையில் ஆரியர் மட்டும் வாழ்வுரிமை பெற்றவர்கள். மஞ்சள் தலைமுடி, உயர்ந்த தோற்றம், நீலக் கண்கள் வலிமை மிக்கவர்களாக ஆரியர்களைக் கிட்லர் உருவகித்தார். (கிட்லரின் தோற்றம் ஆரியர் உருவத்தை ஒத்ததில்லை என்பது நகைப்புக்குரியது.) ஆரியர் அல்லாத மீதி அனைத்து இனங்களும் (அவற்றுள் 6 மில்லியன் யூதர்களும் அடங்குவர்) கொல்லப்பட்டனர். கிட்லர் போலந்து நிலப்பரப்பைக் கைப்பற்ற முனைந்ததால் இரண்டாம் உலகயுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. முதலாம் உலகயுத்தத்தைப் போல இரண்டாம் உலகயுத்தத்திலும் யேர்மனி தோற்றது.

கி.பி 1945 – இன்று

இரண்டாம் உலகயுத்தத்தில் யேர்மனியுடன் போரிட்டு வெற்றியடைந்த நாடுகள் யேர்மனியை நான்கு பகுதிகளாகப் பிரித்து ஆட்சி நடத்தின. அமெரிக்கா, ரஷ்ய அரசியல் பிணக்குகள் கரணியமாகக் கிழக்கும் மேற்குமாக யேர்மனியைப் பெருஞ்சுவரினால் பிரித்தனர். யேர்மனியர்கள் ஒன்றிணைய விரும்பியதால் 9.11.1989ல் சுவர் உடைக்கப்பட்டது. தற்போது யேர்மனியில் பாராளுமன்ற ஆட்சிமுறை அமைதியாக நடைபெறுகிறது.

செல்வன் நிசாந் நந்தகுமார்

ஆண்டு 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் மாசடைதல்

இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த மனிதன் நாகரிகம் வளர வளர அவன் வாழ்க்கை முறைகளிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. புதுப்புது விஞ்ஞானக்கண்டுபிடிப்புகளும் வாழ்க்கையை இலகுவாக்கப் பல இயந்திரப்பொறிகளையும் கண்டு பிடித்தான். காடுகள் அழிக்கப்பட்டு வீடுகள் தொழிற்சாலைகள் எனப் பல உருவாக்கப்பட்டன. இதன்காரணமாக இறைவனால் படைக்கப்பட்ட இயற்கை மெல்ல மெல்ல மாற்றமடைந்து பல எதிர்விளைவுகளை ஏற்படுத்தியது. இதனால் பூமியில் நீர், காற்று, மண் போன்ற சூழலில் மாசுக்கள் ஏற்பட்டன. சூழல் மாசடைதலில், ஒளிசார் மாசடைதல், ஒலிசார்மாசடைதல் வெப்ப மாற்றங்கள் பண்பாட்டு மாசடைதல் என்று பலவகைப்படும்.

தொழிற்சாலைகள் வாகனங்கள், அணுமின்னுலைகளிலிருந்து வெளியேற்றப்படும் புகைக்கழிவுகளால் வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டின் (CO2) அளவைக் கூட்டுகின்றது. இதனால் பூமியைச் சுற்றிப் பாதுகாப்பாயுள்ள ஓசோன் படலம் பாதிப்படைந்து விட்டது. இதன் விளைவாக சூரிய ஒளி பூமியை நேரடியாக வந்தடையும் போது அக்கதிரத் தாக்கத்தால் தோல் புற்றுநோய் உட்படப் பல நோய்கள் உருவாகுகின்றன. பூமியின் வெப்பம் படிப் படியாக உயர்ந்து செல்கின்றது. இதனால் வட தென் துருவப் பகுதிகளில் பனிமலைகள் மிக விரைவாக உருகிக்கொண்டிருக்கின்றது. இதனால் பனிக்கரடி, பென்குயின், கடல்நாய் போன்ற பல அரிய வகை கடல்வாழ் உயிரினங்கள் அருகிக் கொண்டு செல்கின்றது. கடல்நீரமட்டம் உயர்ந்து கொண்டு செல்வதால் இயற்கை அழகுடைய பல தீவுகளும் சிறிய நாடுகளும் அபாயத்தை எட்டிக்கொண்டிருக்கின்றன. திடீர் திடீரென்று பல்லாயிரம் ஏக்கர் கணக்கான காடுகள் எரிவதும் இதனால் மழைவீழ்ச்சி பாதிப்பு அடைகிறது. காலம் தவறிய மழைவீழ்ச்சி வெள்ளம், புயல் போன்ற இயற்கை அனர்த்தங்களும் சேர்ந்து இயற்கையை அழிக்கின்றது. காட்டில் வாழும் பல உயிரினங்களும் அழிகின்றன.

அணுமின்னிலையத்தின் மூலம் மின்சக்தியைப் பெறுதல் இன்று பரவலாகப் பல நாடுகளில் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. புதுப்புது அணுவாயுதங்களைக் கடலுக்கடியில் வறிய நாடுகளில் பரீட்சித்துப்பார்ப்பதாலும் அணுக்கழிவுகளைக் கடலில் கொட்டுவதாலும் வறிய நாடுகளில் புதைப்பதாலும் இதன் கதிரியக்கத்தாக்கத்தினால் புதுப்புது நோய்களும் புற்றுநோய் உருச்சிதைவான குழந்தைபிறத்தல், தலைமயிர் கொட்டுதல், பயிரிடமுடியாமல் பல்லாயிரக்கணக்கான விளைநிலங்கள் பாதிப்படைந்து உயிரினங்கள் வாழமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இதற்கு உதாரணமாக 1986ல் உக்ரைனிலுள்ள சேர்னோபிலில் (Tschernobyl) ஏற்பட்ட அணுவுலை வெடிப்பைக் கூறலாம். இரண்டாம் உலகப் போரின் போது யப்பானில் 1945ல் கிரோசிமா (Hiroshima) நாகசாகியில் (Nagasaki) அமெரிக்காவால் அணுகுண்டு போடப்பட்டது. அண்மையில் 2011ல் பூமியதிர்வினால் சுனாமி ஏற்பட்டு கடலுக்கண்மையிலிருந்த புக்குசீமா (Fukushima) அணுமின்னுலை பாதிப்படைந்து பல அனர்த்தங்களை விளைவித்தது. அதனால் அதன் செயற்பாட்டை நிறுத்திவைத்திருக்கிறார்கள். 1984ல் இந்தியாவிலுள்ள போப்பால் என்னும் நகரத்தில் யூனியன் கார்பைடு எனும் உயிர்க்கொல்லி மருந்து தயாரிக்கும் தொழிற்சாலையில் ஏற்பட்ட விசவாயுக்கசிவினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். பலர் பார்வையிழந்தனர். இதன் தாக்கங்கள் வருடக்கணக்காகத் தொடர்ந்தவண்ணம் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெக்சிக்கோ வளைகுடாவில் எண்ணைக் கோபுரத்தில் ஏற்பட்ட வெடிப்பினால் 500.000 – 1 மில்லியன் தொன் எண்ணை கடலில் பரவியதால் பல்லாயிரக்கணக்கான மீன்கள், ஆமைகள், டொல்பின்கள், கடற்பறவைகள் இறந்தன. கடற்கரை ஓரங்களிலுள்ள நிலப்பகுதிகள் எண்ணைக்கழிவுகள் படிந்து பாதிப்புகளை ஏற்படுத்தியது.

இன்று பல நாடுகளில் பல பண்பாட்டுச் சீரழிவுகள் நடைபெறுகின்றன. போதைப்பழக்கங்கள், கட்டுப்பாடற்ற குடிவகைகள், பாலியல் முறைகேடுகள் போன்றவை வளரும் சமுதாயத்தைப் பாதிக்கின்றது. அதனால் எயிட்சு நோய் பரவிவருகிறது. போதைப் பழக்கங்களினால் சிலர் முறைகேடாக நடக்கிறார்கள். இது ஒரு பண்பாட்டு மாசடைதல் ஆகும். ஒழுங்கான வாழ்வின்மூலமே பண்பாட்டுச்செழுமையைப் பேணலாம்.

வல்லரசு நாடுகள் தங்களுக்கிடையே உள்ள ஆயுதப்போட்டி, பொருளாதாரப்போட்டி, விஞ்ஞானப்போட்டிகள் காரணமாகச் சூழல் மாசடைதலைக் கட்டுப்படுத்த ஏனோ தானோ என்று மிக மந்தகதியிலேயே செயற்படுகின்றன. இயற்கையைப் பாதுகாக்க Greenpeace, Bund, WWF, RobinWood போன்ற பல அமைப்புகள் போராட்டங்களையும் பல பிரச்சாரங்களையும் செய்து வருகின்றன. யப்பான், தாய்வான் போன்ற நாடுகளில் பாதிக்கப்பட்ட மக்கள் அணுமின்னுலைகளுக்கெதிராகப் போராட்டங்கள் செய்து வருகின்றனர். யேர்மனியில் போராட்டங்கள் நடந்தன. இதனால் யேர்மனிய அரசு படிப்படியாக அணுமின்னுலை இயக்கங்களை நிறுத்துவதாக உறுதி கூறியுள்ளது.

இதற்கு மாற்றாக சூரிய ஆற்றல் சக்தி, நீராற்றல்சக்தி, புவிவெப்பாற்றல்சக்தி, கடலலையாற்றல்சக்தி, காற்றின் சக்தியைப் பெற்று மின்சாரம், ஒளி, வெப்பம் போன்ற பலவற்றைப் பெறலாம். புவியின் வெப்பத்தையும் ஆற்றலுக்குப் பயன்படுத்தலாம். நீர்ப்பெருக்காற்றல் என்பது நீர் ஓட்டத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களைப் பயன்படுத்தி மின்மாற்றம் அல்லது வேறு சக்தியைப் பெற்றுக் கொள்ளலாம். இயற்கையை எமக்கு நண்பனாக்கிக் கொண்டால் எமது புவியின் அடுத்தடுத்து வரும் சந்ததிகளும் பாதுகாக்கப்படும். சூழல் மாசடைதலைத் தடுத்துச் சூழல் சமநிலையை நன்கு பேணுவதன் மூலம் பூமிக்கிரகத்தையும் மனித வாழ்வையும் பாதுகாப்போம்.

செல்வன் கீர்த்தனன் உலகநாதன்

ஆண்டு – 11
மாணவர் பிரதிநிதி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நான் தமிழில்...

அன்னைத் தமிழை - நான்
அருஞ் சுவையாய்க் கற்றிட
அமைந்த ஆலயம்
முன்சன் தமிழாலயம்

மழலைத் தமிழில் தொடங்கி
ஆண்டு 12 வரை – எனை
அணைத்து வளர்த்து ஆளாக்கிய - என்
அன்புத் தமிழாலயம்

என்றென்றும் எம் தமிழைக் காக்கும்
என் தமிழாலயம்
புலம் பெயர் வாழ்வில்
பூத்திட்ட முத்தமிழ் ஆலயம்

பதினேழாவது ஆண்டில்
பரந்து விரிந்திட்ட
முன்சன் தமிழாலயம்

தமிழில் நான் வளர
வித்திட்ட ஆலயம்
தமிழில் நான் வளர
தரமான ஆசிரியர்களுடன்
அன்பான நிர்வாகி
நிர்மலதாசன் மாமாவும்
தமிழில் நான் நிலைத்துநிற்க! – உதவிய
தமிழாலயம்

பொறுப்பான என் பெற்றோரும் உறுதுணையாய் நிற்க!
தமிழை நான் கற்கிறேன் நிறைவாய்
தமிழில் நான் தளைக்கிறேன் சிறப்பாய்
தமிழே வாழியவே! என் தாய்த் தமிழே வாழியவே!

அன்புடன்

செல்வன் ரவிந்தன் ரவிச்சந்திரன்

ஆண்டு 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது மாணவர்களின் ஓவியங்கள்...




ஜெசிக்கா அருமைநாயகம்



றஜிதன் செல்வராசா



சாணுயன் கந்தசாமி



நிவிதன் நகுலன்




பிறின்ஸ்வின் அருள்நாயகம்



தீபிகா செல்வபாஸ்கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது மாணவர்களின் ஓவியங்கள்...



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழலையர் நிலை  ஆசிரியை திருமதி டெனிசியா பீற்றர்தோமஸ்பிள்ளை



1வது வரிசை இ-வ: அஸ்விதா சிவநேசன். ராகுல் சவகுமாரன். ஜெசிக்கா அருமைநாயகம். யெனுசன் அருணகிரிநாதன். அட்சரன் இராமதாஸ்.
அகநிலா நிர்மலதாசன். ஜெசிக்கா குணநாயகம். செந்துயா ரவிச்சந்திரன். கயானி கண்ணன். துஷிகா சிவநாதன். மேனுஷா தங்கராஜா
விதுசன் செல்வராசா. யபிஷா நகுலன். கிருசன் பாஸ்கரன். ஆதித்தியன் இரத்தினகுமாரன்

2வது வரிசை இ-வ: அகிர்ஜன் திருச்செல்வம். பார்த்திபன் இராமலிங்கம். சஞ்சய் சுபநேசன். சிபோன் சீமான்பிள்ளை. டெனிஷ் றொபின். சம்போஷ் கங்காதரன்
ஆன் சுஜானி றொபேட். அபினுயா யோகராசா. டர்சிகா பத்மநாதன். லக்ஷ்மன் பூபாலசிங்கம். கவின் குலதீபன். பிறித்திவ் முருகதாஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் நிலை ஆசிரியை திருமதி சுதாஜினி இராஜலிங்கம்



1வது வரிசை இ-வ: நிறிஷன் யோகலிங்கம். அகரன் பரணிகரன். மதுஷா சிறிதரன். ஆதீஸ் ஆறோன் சதீஸ்குமார். லக்சாஜினி ஜனா தேவசிகாமணி. அனேஸ் கொலின் கேதீஸ்வரன். சதுர்சா சிவானந்தராஜா அச்யுதன் இராமதாஸ். கிரண் கந்தன். பர்ணிகா பாலகிருஷ்ணன்

2வது வரிசை இ-வ: திவ்யன் குகதரன். தனுஷ் சத்தியராஜ். அங்கனி கிருஸ்ணபாபு. ஹரிஸ் சிவகுமாரன். மதுவந்தி இராஜேந்திரகுமார். அபினா நவசீலன். சஞ்ஜை பூபாலசிங்கம். அமுதா பெ. அக்ஷயன் செல்வராஜா. ஹரணி நவரட்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு 1அ ஆசிரியை திருமதி சிவாஜினி நகுலேந்திரன்



1வது வரிசை இ-வ: சஞ்சிகா கரினா கடம்பராசா. ஷரணி முருகதாஸ். ஜிவினா இராஜலிங்கம். பிரடீஸ்வின் அருள்நாயகம்

2வது வரிசை இ-வ: விதுஷ் சிவநாதன். றஜிதன் செல்வராசா. அரவிந் தங்கேஸ்வரன். ஸ்ரெபான் சீமான்பிள்ளை. ஆரணன் சிவானந்தம்

சமூகமளிக்காதோர்: யுலியன் ரவீந்திரன். நிறோஜன் செல்வரெட்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு 1ஆ ஆசிரியை திருமதி சிவாசினி சிவானந்தம்



1வது வரிசை இ–வ: செந்தூரி மோகனதாசன். சிவனஜா இராஜசேகரம். ஆகாஷ் ஆனந்தராஜா. சாரங்கன் கஜேந்திரன். சாறுயன் சந்திரமோகன். நிதுயன் மங்களேஸ்வரன்

2வது வரிசை இ–வ: கிர்ஜென் செல்வராஜா. சுஜானா நாகேஸ்வரன். சானுயன் கந்தசாமி. அகிலேஸ் ரவீந்திரன். அவினாஸ் ரவீந்திரன். தாரிகா தங்கராஜா

சமூகமளிக்காதோர்: பிறிக்கிற்றே அலெக்ஸ் றொபின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்நிலை 2அ ஆசிரியர் திருமதி சரஸ்வதி நிர்மலதாசன்



1வது வரிசை இ-வ: ராயுவன் ரமேஷ்குமார். நந்து நாகேஸ்வரன். ஜெனிபர் குணநாயகம். சந்யா பரணிகரன். அனோயன் சிவானந்தராஜா. சுபிகா இரத்தினசிங்கம். கிருத்திகா சிவகுமார்

2வது வரிசை இ-வ: வைஸ்ணா நாகேஸ்வரன். அகிதன் அமரசேகரம். கபிலன் இராசசேகரம். நதுசன் கமலநாதன். அலானா சிறிதரன். நாட்யா கமலநாதன் காருணியா விஜியாகரன். சஸ்கியன் சந்திரசேகரம். சதுர்ஷன் சசீந்திரன்

சமூகளிக்காதோர்: லியோன் நாகையா. ஷரண் மகேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு 2ஆ ஆசிரியை திருமதி இரதிகலா விஷ்ணுதாஸ்



1வது வரிசை இ-வ: மீனுஜா சிறீதர். கோகுலன் ஜெயச்சந்திரன். விநோதா விக்கினேஸ்வராசா. அனுஷா சிவநாதன். அபிசாத் குணசீலன்

2வது வரிசை இ-வ: சுவேதா ஆனந்தசிங்கம். கௌசிகன் இரத்தினகுமாரன். நிவிதன் நகுலன். நிவேதன் டிறோன் ரகுதாஸ். டனுசிகன் பத்மநாதன். சுஜாந் லவ்ரின் சுதாகரன்.

3வது வரிசை இ-வ: அன்பூரா இரவிக்குமார். துஷ்மிதன் குணரட்னம். காவியன் வினாயகமூர்த்தி. சஜிவா குருபரன். ஜினோஜ் இராஜலிங்கம் மிதுஜன் பூபாலசிங்கம். சாபிதான் நாகேஸ்வரன் -சமூகமளிக்காதோர்: சனுயன் ஜீவநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு 3அ ஆசிரியை திருமதி ரோகினி சிவானந்தராஜா



1வது வரிசை இ–வ: சகீரன் சுரேஸ்குமார். சமிதா பாஸ்கரன். லதுஜன் தமிழ்ச்செல்வன்

2வது வரிசை இ–வ: அரிஸ் அணா ஜெயமோகன். நிறோஜன் விசையாதன். அபினேஸ் சதீஸ்குமார். சங்கவி சுரேந்திரன். சாருஜன் பூபாலசிங்கம்

3வது வரிசை இ–வ: சகீதன் வினாயகமூர்த்தி. அனுசியா ஸ்ரீஜெயமோகன். ரொபியாஸ் தவச்செல்வன். லவண்யா இராமச்சந்திரன். கிருஜன் சுரேந்திரன் ராகவி ஆனந்தசிங்கம்

சமூகமளிக்காதோர்: கவிஷான் செல்வரட்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு 3ஆ ஆசிரியை திருமதி மோகனராணி கந்தசாமி



1வது வரிசை இ-வ: யுரேன் தெய்வபாலன். ஆரணி கணேசலிங்கம். பிரணவன் விவேகானந்தன். பிரணவன் சுரேந்திரன். பாலகுமரன் ஜீவச்சந்திரன். சாருஜன் நடராஜா
நிருசன் அமலதாஸ். பிறின்ஸ்வின் அருள்நாயகம்


2வது வரிசை இ-வ: அஜந்தன் துரைச்சாமி. கஜானா மனோகரன். பிரஷானி கணேசமூர்த்தி. நிறோசன் மங்களேஸ்வரன். ரதீபன் இராஜலிங்கம. மாதேஷ் தேவகுமார்
பிரித்திகா சிறிகாந்தன். அபிநயா அனிற்ரா சிவகுரு. அஷ்வின் சுதாகரன்

சமூகமளிக்காதோர்: விநோட் விக்கினேஸ்வரராசா. ஜிவேணி பரமேஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு 4அ ஆசிரியை திருமதி பிறேமினி செல்வரட்ணம்




1வது வரிசை இ-வ: அபினா அமரசேகரம். வாசுகி கஜேந்திரன். வானதி நிர்மலதாசன். நிருஷிகா அருணகிரிநாதன். ரதுசன் ரவிச்சந்திரன். யானுஜா சிவானந்தராசா
2வது வரிசை இ-வ: தீபிகா செல்வபாஸ்கரன். நிவேகா குமாரசாமி. ஜொஹானஸ் பீற்றர் நொலெஸி. கஜிபன் சிவபாலசிங்கம். நிவேதா குமாரசாமி
பிரதாபன் விவேகானந்தன். நிருஷியன் சுகுமார்

சமூகமளிக்காதோர்: செலினா நாகையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு 4ஆ ஆசிரியை திருமதி பகீரதி ஆனந்தசிங்கம்



1வது வரிசை இ-வ: பூஜா பாலச்சந்திரன். ரணுசியா ஸ்ரீஜெயமோகன். சசிபன் சிவராசா. சியாமி கண்ணன். வைஸ்ணவி விஜயகுமாரன். அபிஷா யோகராசா. அனிற்ரா கணேசலிங்கம். ராதுயன் ரமேஷ்குமார்


2வது வரிசை இ-வ: பிரசாந் சிவராசா. செல்வரஞ்சிதன் சசீந்திரன். மாட்டின் மத்தியாஸ். இறைகுமாரன் தர்மகுலசிங்கம். நிவேதா சிவானந்தன். ஆரணியா நகுலேந்திரன். சஜிவா கடம்பராசா

சமூகமளிக்காதோர்: சுகிர்தன் சிறீதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு 5 ஆசிரியை திருமதி ஜெகதீஸ்வரி இராமதாஸ்



1வது வரிசை இ–வ: விதுரன் விஷ்ணுதாஸ். அஸ்மியா அமலதாஸ். வாரகி கோவிந்தராசா. ஸ்ரீராம் ஸ்ரீவரதராசா. அபிநயா ஜீவச்சந்திரன். தர்சன் ரவிச்சந்திரன் துஷானி கணேசமூர்த்தி

2வது வரிசை இ–வ: அபிதா ஜெயமோகன். அபிநயா குணசீலன். மதுஷா மனோகரன். சஞ்ஜிவன் இராமலிங்கம். ஜானிக்கா சிறீகாலிங்கம். கனுஜன் இரத்தினசிங்கம் அபிரந்திகா பாஸ்கரன்

3வது வரிசை இ–வ: ஜினிதா இராஜலிங்கம். சதுர்ஷிகா சசீந்திரன். தரண்யா இராஜரட்ணம். சுதேசியா சந்திரமோகன். சுதர்சனன் சிவானந்தன். சாருயன் கந்தசாமி சண்ஜீபன் சுரேந்திரன். பிரியங்கன் புஸ்பராஜா –சமூகமளிக்காதோர்: லியானா முருகையா. பவீன் தேவறஞ்சித். கௌசிக் குணசீலன். சுபீட்ஷனா சிறீதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு 6  ஆசிரியை திருமதி றஜிகலா சறீகாந்தன்




1வது வரிசை இ–வ: இந்துஷன் செல்வபாஸ்கரன். அபிஷேக் ஜெயமோகன். கவிராஜ் செல்வரெட்ணம். பாலேந்திரன் நகுலேந்திரன். விதுசன் சிவானந்தன்
திவ்வியா ஜெயச்சந்திரனஇ. பிரபு சிவகுமார. டர்ஷா பத்மநாதன். பானுசா சற்குணநாதன்

2வது வரிசை இ–வ: அபிரா சோதிலிங்கம். நிலோயனா மங்களேஸ்வரன். தமிழினி நிர்மலதாசன். ஜெருஜா தமிழ்செல்வன். துசாணி குணரட்னம். வீதுஷன் சிவநாதன்
சிவகீர்த்தனன் சிவகுமாரன். விலோஜன் விசையாதன். யாழினி சிவபாலசிங்கம். –சமூகமளிக்காதோர்: கிருசன் பரமேஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு 7 ஆசிரியர்கள் திருமதி அபிராமி கனகலிங்கம் திருமதி ரஞ்சினி ரவீந்திரன்



1வது வரிசை இ–வ: சுபாங்கி இராஜலிங்கம். ஜனுசன் சந்திரகுமார். தயாளினி சிவலோகானந்தன். காத்யா மத்தியாஸ்

2வது வரிசை இ–வ: விதுர்சன் சுரேஸ்குமார். அரவிந்த் சிவகுமார். பிரியங்கா சண்முகேந்திரன். ஜெனினா ஜீவச்சந்திரன். ஜான்ஸ்வன் சிவநாதன்

சமூகமளிக்காதோர்: மெலனி சற்குணராஜா. கிருரிகா திசைநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு 8 ஆசிரியை திருமதி நந்தினிதேவி செல்வபாஸ்கரன்



1வது வரிசை இ–வ: கஜீபன் விநாயகமூர்த்தி. ரனோதன் ரவிச்சந்திரன். டிலக்ஷிகா சிறீகாந்தன். லாவண்யா இராஜரட்ணம். துனிசியா கங்காதரன். திவ்யா பாலச்சந்திரன் டிரும்ஜா பீற்றர் நொலெஸி. அனிதா இராசதுரை

2வது வரிசை இ–வ: அகிலன் இராசதுரை. விபூசன் சிவநாதன். மிகேதன் உலகநாதன். பிரவின் அருள்நாயகம். தர்ஷனா தவச்செல்வன். பியானா புஸ்பராசா திேனாஜா திருச்செல்வம். சேயோன் சற்குணநாதன் –சமூகமளிக்காதோர்: பிரவீன் சண்முகேந்திரன். பிரகாஷ் முருகையா. பவித்ரன் தேவறஞ்சித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு 9 ஆசிரியை திருமதி இரத்தினமலர் மாணிக்கராஜா



1வது வரிசை இ-வ: காருண்யா நவராசா. மயூரி சண்முகராசா. அயுந்தினி பாஸ்கரன். வியாசகி கோவிந்தராசா. தர்சிக்கா கனகலிங்கம். கயானா சோதிராஜா. விதுசா விஜயகுமாரன்

2வது வரிசை இ-வ: அருச்சுணன் சுரேந்திரன். டிலக்ஷன் சிறீகாந்தன். நிதுர்சன் நந்தகுமார். சயந்தன் உலகநாதன். தர்ஷிகன் குனபாலன். சுஜீவன் சந்திரமோகன் அர்ஜினி ஜீவநாதன். செந்தூரி ஸ்ரீஸ்வரதராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு 10 ஆசிரியர் சிவபாதசுந்தரம் இளவழகன்



1வது வரிசை இ–வ: வைஷன்யா சிறீகாலிங்கம். வர்சித்தா பாலச்சந்திரன். நிசாந்தி சற்குணநாதன். பிறவீனா கந்தசாமி

2வது வரிசை இ–வ: விஜிதன் விஜயகுமாரன். பிரசாத் இராஜரட்ணம். பிரசன்னா சண்முகேந்திரன். மயூறன் சுரேந்திரன்

சமூகமளிக்காதோர்: கபிலேசன் ஜீவநாதன். பவிதா தேவறஞ்சித். வாகீசன் பரமேஸ்வரன்

ஆசிரியர் சிவபாதசுந்தரம் இளவழகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு 11 ஆசிரியை திருமதி சரோஜநாயகிஅம்மா இரத்தினம்




1வது வரிசை இ-வ: சன்னிதி பரமலிங்கம். தர்சிகா சபாநாயகம்.

2வது வரிசை இ-வ: கீர்த்தனன் உலகநாதன். ஜான்சி சிவநாதன். நீலவேணி சந்திரகுமார். நிசாந் நந்தகுமார்

சமூகமளிக்காதோர்: கஜன் கணேசராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1வது வரிசை இ-வ: கயல்விழி நவராசா. சாதனா சிவராசா. வைஷ்ணவி விஷ்னுதாஸ்
2வது வரிசை இ-வ: ரவிந்தன் ரவிச்சந்திரன். சார்லன் செல்வநாதன். விஸ்ணுகரன் இராஜலிங்கம்
சமூகமளிக்காதோர்: ஆசிரியர் சிவபாதசுந்தரம் இழவளகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில சிந்தனைக் குறிப்புக்கள்

–ஆசிரியர் சிவபாதசுந்தரம் இளவழகன்

தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா
இப்பயிரை

கண்ணீரால் காத்தோம் கருகத்திருவுளமோ
–பாரதியார்

முள்ளிவாய்க்கால் – அதன் தணலும் வெய்யதும் இன்னமும் மாறவில்லை அதன்பின்பு வாழ்வின் போக்கும் மனநிலையும் வழமைக்குத் திரும்பவில்லை சென்றதனைக் குறித்தல் வேண்டா இன்று புதிதாய் பிறந்தோம் என்று நீவீர் எண்ணமதைத்
திண்ணமுற இசைத்துக்கொண்டு எம் இளையோர் செயற்படல்வேண்டும். தீமையெல்லாம் அழிந்துபோம் திரும்பிவரா என்பதை நிறுவுதல்வேண்டும். இற்றைத்
திங்கள் இவ்வெண்நிலவில் எம் மண்ணும் பிறர்கொளார் என்ற வரிகள் நிதர்சனமாக வேண்டும். தாயகத்தில் எமது சுயநிர்ணயம் – மாவீரர் நனவும் வெல்லப்படல் வேண்டும். களத்திலும் புலத்திலும் எம் இளையோர் தம் கடமைகளைச் செய்வார்களா?

புலம்பெயர்ந்த ஏனைய தேசிய இனங்களது ஆக்கபூர்வமான கடந்த கால அநுபவங்கள் தமிழில் வெளிக்கொணரப்படல் வேண்டும். பொன்னும் பொருளும் தொழிலும் தேடி அமெரிக்காவிற்குப் புலம்பெயர்ந்த ஐரோப்பிய மக்களது சாதனைகள் முக்கியமாக யேர்மனியரின் 2வது தலைமுறையினர் தொழில்நுட்பம் பொருளாதாரம் கொலிவூட் என்பனவற்றில் அவர்கள் சாதித்த விடயங்கள் என்பன எம்இளம்தலைமுறையினருக்கு எடுத்துக்காட்டப்படல் வேண்டும். புலம் பெயர்ந்த பெற்றோர்கள் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து தமது பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து வாழிட மொழிக் கல்வியையும் பெறுவதற்கு உழைக்கின்றார்கள். எமது இரண்டாவது தலைமுறையினர் சாதிக்கப் போவது என்ன? அவர்களது பெற்றோர்களுக்கு இருந்த நெருக்கடிகள் இவர்களுக்கு இல்லை. காலம்தான் பதில் சொல்லும்.

அமெரிக்காவில் சுரங்கத்தொழிலாளர்களுக்கென டெனிம் காற்சட்டையைக் கண்டுபிடித்ததும் ஒரு யேர்மனியர் தான். இப்படியே புலம்பெயர்ந்த யூதர்கள் அயர்லாந்து மக்கள் தமது தாய்நாட்டின் விடுதலைக்காகப் புலம்பெயர்ந்த நாடுகளில் ராஜதந்திர அரசியல் தொடர்பூடகங்களில் ஆற்றிய பணிகள் எடுத்துக்காட்டப்பட வேண்டும். எமது இளையோர்கள் தமது திறமைகள் சாதனைகளை ஐரோப்பியர் மத்தியில் நிலைநாட்டல் வேண்டும் திறமான புலமையெனில் அதனை வெளிநாட்டார் மதித்தல் வேண்டும் என்ற மகாகவி பாரதியாரின் கருத்திற்கு ஏற்ப செயற்படல் வேண்டும். இதற்கு நல்லதொரு உதாரணமாக கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தொழில்நுட்பத்தில் மிகச் சிறந்த இளம் ஆய்வாளர் என்ற விருதை ஈழத்தமிழரான சிவராதை லோகநாதன் பெற்று யேர்மன் அரசால் கௌரவிக்கப்பட்டார் இங்கிலாந்தில் செல்வன் கணேஸ் சிற்றம்பலம் என்ற 13 வயதுச் சிறுவன் (B.SC) கணிதப் பட்டதாரித் தேர்வில் முதல்த்தரச் சிறப்புச் சித்திபெற்று மிக இளவயதில் பட்டதாரியாகி உலக சாதனை படைத்தார். இது மிகவும் மகிழ்வுக்கும் பாராட்டுக்கும் உரிய விடயமாகும்.

தமிழ்மொழியை – தாய்மொழியை ஏன் கற்க வேண்டும்? இதனை எமது இளையோருக்குச் சரியாக நாம் விளக்க வேண்டும். வேர் அறக் கூடாது வேர் தொடர்பு இருக்க வேண்டும். வேரைத் தேடிச் சென்று வாழ வேண்டிய சந்தர்ப்பங்கள் வரலாம். புலம்பெயர்ந்த பல நாடுகளில் வாழும் எம் தமிழ்ச் சிறார்கள் பொதுவாக ஒன்றுகூடும் வேளையில் இணைப்பு மொழியாகத் தாய்மொழி தமிழே விளங்க வேண்டும். விளங்கினால் மிக நன்று. பல்லினக்கலாச்சாரத்துள் வாழும் எம் சிறார்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளம் தேவை. கடவுச்சீட்டுப் போல தமிழே எமது அடையாளம். அல்லாது விட்டால் எம்மை நாடோடிகள் என்பர். எமது மரபு அறிவுச் செல்வத்தைக் கற்றுக்கொள்ள எமது வரலாற்றை இலக்கியங்களை மக்கள்பண்பாட்டை அறிவுபூர்வமாக உணர்வோடு அறிந்து கொள்ள கற்கத் தாய்மொழி தமிழே சிறந்தது. தாய்மொழியில் திறமையில்லாதவர்களில் பலர் மேற்படிப்பில் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றார்களெனச் சில கல்வி ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சில விதிவிலக்குகளும் உண்டு தான் கற்ற கல்வியைத் துறைசார்ந்த அறிவை நிபுணத்துவத்தைத் தாயகமக்களுக்கும் பயன்படுத்த வேண்டுமென்றால் தாய்மொழி தமிழை அறிந்திருத்தல் நன்கு பயன்படும் அல்லவா? தாயக உறவுகளோடு கதைப்பதற்கும் கடிதங்கள் எழுதுவதற்கும் தமிழைவிடச் சிறந்த ஊடகம் ஏது?
வாழும் நாட்டில் நிறவாத இனவாத அலைகள் எழும் பொழுது எமது சிறார்களின் எதிர்காலத்தையும் சிந்தித்தல் வேண்டும். தாய்மொழியைக் கற்கும் பொழுதே தம் அடையாளத்தையும் முகத்தையும் பெறுவார்கள். தாய்மொழியிலும் வாழும் நாட்டின் மொழியிலும் பயிற்சிபெற்றவர்களே திறம்படச் செயற்படுகிறார்கள் என அமெரிக்கா, சுவீடன் நோர்வே கல்வி ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றார்கள். எமது இளையோர் ஐரோப்பிய அறிஞர்களுடான சந்திப்பில் அவர்கள் உங்களது தாய்மொழியில் நீங்கள் பேசுவீர்களா எழுதுவீர்களா எனக் கேட்கும்பொழுது எனக்கு தாய்மொழி தெரியாது என்று சொல்லித் தலைகவிழவேண்டி வராது. மொழி ஆய்வாளரின் கருத்துப் படி நான்கு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் ஒரே நேரத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட மொழிகளைக் கற்கக் கூடிய வல்லமை அவர்களது மூளை அமைப்பிற்கு உண்டு. ஆகவே தாய்மொழியைக் கற்பதில் என்ன தடை? போலிச் சாட்டுக்கள் வேண்டாம்.

தாய்மொழியையும் வாழும் நாட்டின் மொழியையும் நன்கு பயின்ற மொழித்திறன் கொண்ட உயர்கல்வி கற்கும் எம் இளையோர் எம் சிறார்களின் வாழும் நாட்டுக் கல்விச் சந்தேகங்களைத் தீர்ப்பதற்கு உதவுதல் வேண்டும். இதற்கான வழிவகைகள் குறித்து எம்மவர்கள் சிந்தித்தல் வேண்டும் எமது சிறார்களின் ஐயங்களை எழுத்துவடிவில் பெற்று பதிலளிக்கலாம். அதனை விட மாதம் ஒருதடவையாவது ஒரு வகுப்பை நடத்தலாம். சில நாடுகளில் இது மேற்கொள்ளப்படுகின்றது.

ஒரு தேசியயினத்தின் பண்பாட்டைக் கணிப்பிடும் அளவுகோல்களில் பல விடயங்கள் உண்டு. சமூகவேறுபாடு இன்மை, பெண்கள் உயர்நிலை கல்வித்தரம் என்பனவும் தற்பொழுது சர்வதேச அளவில் உள்ளடக்கப்படுகின்றது. ஈழத்தமிழ் தேசியயினம் உலகளவில் உயர்வடைவதற்குத் தமிழ்ச்சிறார்களின் கல்வித்தரம் உச்சநிலைக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும். புலம்பெயர்ந்த தமிழ்ச்சிறார்களின் கல்வி ஆளுமை வளர்ச்சிக்கு எம் தமிழ் வீட்டுச்சூழல் உகந்ததாக உள்ளதா? பிள்ளைகளது கல்வி வளர்ச்சிக்கு உகந்ததாக வீட்டுச்சூழல் அமையவேண்டும். படி படியென்று சொல்லாமல் படிப்பதற்குரிய நேர அட்டவணை வீட்டுச்சுவரில் அல்லது கதவில் எழுதித் தொங்க விடப்படல்வேண்டும். தொலைக்காட்சியை விளையாட்டை நிறுத்துங்கள்! எனப் பெற்றோர் சொல்லாமலேயே பிள்ளைகளுக்கு இது படிப்பதற்குரிய நேரம் என விளங்கவேண்டும். இது மிகச் சிறு வயதிலிருந்தே பழக்கத்தில் கொண்டுவரப்பட்டு வழக்கமாக வேண்டும். குறித்த நேரத்திற்கு நித்திரைக்குச் செல்லல் விடுமுறைநாட்களில் குறித்த நேரத்திற்கு வீடு திரும்புதல் என்பன சிறுவயதில் இருந்தே ஒழுங்குமுறையாக்கப்பட வேண்டும். பொதுவாகக் கணினி வீட்டின் பொது அறையில இருத்தல் நன்று. இதனால் கல்வி சாரா முறைகேடுகள் தவிர்க்கப்படும். கணினியில்க் கற்பதை அளவாக்கி நூல்களை வாசிப்பது எழுதுவது கணிதப்பயிற்சிகள் செய்வது கட்டாயமாக்கப்பட வேண்டும். பத்திரிகைகள் வாசிப்பது செய்திகள் பார்ப்பதும் நன்று. பிள்ளைகள் கற்கும் வேளையில் தொலைக்காட்சியில் அதிக சத்தம் நீண்ட தொலைபேசி உரையாடல்கள், நண்பர்கள், உறவினர்கள் பிள்ளைகள் படிக்கும் வேளையில் அடிக்கடி வீட்டிற்கு வருதல் என்பன மட்டுப்படுத்தல் வேண்டும். மேம்பட்ட சில ஐரோப்பியக் குடும்பங்களில் தாய்மார்கள் இரவுணவை பிற்பகல் 14–15 மணிக்கே தயார்படுத்திவிட்டு மாலை வேளைகளில் பிள்ளைகளது கற்றலை மேற்பார்வை செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனிப்பார்கள் உயர்கல்வி அறிவற்ற தாய்மாரும் இதனைச் செய்வர். வீட்டில் உள்ள வாழிடக் கல்வியில் திறமைபெற்ற மூத்த பிள்ளைகள் தமது இளைய உடன்பிறப்புக்களின் கல்வி மேம்பாட்டுக்கு உதவிடுதல் வேண்டும். இதனைப் பெற்றோர் சிறுவயதிலிருந்தே பழக்கப்படுத்த வேண்டும். பெற்றோருக்கிடையான கருத்தாடல் அளவானதாக இருக்கலாம். பண்பாடற்ற வார்த்தைகளைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் பிள்ளைகள் அதனைக் கேட்டுத் திரும்பவும் கூறலாம். அம்மாவுக்கு ஒன்றும் தெரியாது அம்மா மொக்கு என ஒரு தந்தை சொல்வாராக இருந்தால் பிள்ளைகள் தாயை எப்படி மதிப்பார்கள்? தாயின் சொல்லை எப்படிக் கேட்பார்கள்? ஆணாதிக்க மனப்பான்மையை எமது சில தந்தையர் தவிர்க்க வேண்டும். காலையில் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பும் வேளையில் அமைதியாக மகிழ்வாக அனுப்பி வைக்க வேண்டும். சத்தமிட்டு ஏசீ பிள்ளைகளை உணர்வுத்தெறிப்புடன் (Stress) பாடசாலைக்கு அனுப்புதல் கூடாது. பிரச்சனைகளை மாலையில் பேசித்தீர்க்க வேண்டும். பெற்றோர் பிள்ளைகளது நாளாந்தம் பாடசாலைக் கொப்பிகளைப் பார்த்தல் வேண்டும். இன்று மொழி கணிதம் என்பவற்றில் என்ன கற்பித்தார்கள்? பாடங்கள் விளங்கியதா? கடந்தவார வகுப்புத் தேர்வில் என்ன பெறுபேறு என்பனவற்றை விசாரித்தல் வேண்டும். வாழிடப் பாடசாலைகளில் புதிய வகுப்புகளுக்குச் செல்லும் பொழுது சில பாடங்கள் கடினமானதாக நெருக்கடிமிக்கதாக மன அதிர்ச்சியைத் தரத் தக்கதாக இருக்கும். இதனை முன்கூட்டியே பெற்றோர் கவனித்து தனிப்பட்ட போதனைகளுக்கு வழிவகை செய்தல் வேண்டும். இதனால் இந்தப் பிள்ளைகள் தேர்வில் தோல்வியடைந்து மீண்டும் அந்த வகுப்பில் இருந்து கற்க வேண்டிய நிலை வராது. வாரத்தில் ஒரு நாளும் நீண்ட விடுமுறை நாட்களிலும் பிள்ளைகளின் பொழுதுபோக்கிற்கு பெருமளவு இடமளிக்க வேண்டும். எமது ஒழுங்கில் கல்வியில் பெற்றோர்கள் மிக அவதானமாக இருக்கின்றார்கள் என்ற விழிப்புணர்வு பிள்ளைகளுக்கு இருத்தல் வேண்டும். இதற்கேற்ற வகையில் வீட்டுச் சூழலும் பெற்றோரின் செயற்பாடும் அமைதல்வேண்டும்.

பொருளாதார நெருக்கடிகள் இங்குண்டு பிள்ளைகளை வளர்த்து ஆளாக்குவதற்கே வாழ்வில் பணம் தேவை. இதற்காகவே எமது பெற்றோர்கள் வேலைக்குச் செல்கின்றார்கள். ஆனால் தாயோ தந்தையோ இன்றிப் பிள்ளைகளை வீட்டில் தனியே விட்டு இருவரும் ஒரேநேரத்தில் வேலைக்குச் செல்லலாமா? பிள்ளைகளது மாலை நேரக் கல்வியை அல்லது அவர்களது வாழ்வைக் கவனிக்காது விட்டு விட்டு பணம் உழைப்பதில் என்ன பயன்? இதனால் பிள்ளைகளது உளவியல், தாக்கம் அடையாதா?

பிள்ளைகளோடு உரையாடும்பொழுது சில விடயங்களிற்குத் தக்கவாறு அமைதியாக விளக்கம் அளிக்க வேண்டும். தாய் தந்தை இருவரில் ஒருவராவது கண்டிப்பும் மிக்க அவதானமும் மேற்பார்வையும் பிள்ளைகளிடத்தில் வைத்திருத்தல் வேண்டும். மற்றவர் தோழமை நட்புணர்வுடன் பிள்ளைகளுடன் பழகுபவராக இருத்தல் நன்று. பிள்ளைகளின் ஆற்றல் திறமை என்பவற்றைக் கண்டுபிடித்து வளர்த்தெடுக்கப்படவேண்டும். சில வேளைகளில் சிறந்த ஆசிரியர்களும் இதனைச் செய்வர். வளர்ந்த பிள்ளைகளுடன் கலந்துரையாடி கருத்துப்பரிமாறி பிரச்சனைகளைப் பேசித் தீர்க்கும் முறை வீட்டுச்சூழலில் காணப்படவேண்டும். சில வேளைகளில் கண்டிப்பும் தேவை தான் அளவுக்கு மீறிய பாசமோ சர்வதிகாரக் கண்டிப்போ புலம்பெயர்சூழலில் பலன் தராது.

பல்கலாச்சார சூழலில் வாழும் எம் வளர்ந்த பிள்ளைகளின் மன உணர்வைப் பெற்றோர்கள் கணித்தறிதல் வேண்டும். சில பிள்ளைகள் பெற்றோர் சொல் கேட்டு நடப்பார்கள். சில பிள்ளைகள் பெற்றோர்களுடன் சரி பிழைகளைக் கதைத்துக் கருத்துப் பரிமாறிச் செயற்படுவார்கள். சிலர் வீட்டில் நல்ல பிள்ளைகளாகவும் வெளியில் தீய நட்புக் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். மூன்றாவது பிறிவு குறித்து பெற்றோர் கூடிய கவனம் எடுத்தல் வேண்டும். வாழிடப் பாடசாலைகளில் நடை பெறும் பெற்றோர் ஆசிரியர் சந்திப்பில் தவறாது கலந்து பிள்ளைகளது கல்வித் தரம் வகுப்பறை நடத்தை என்பவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரித்தறிந்து தக்க நெறிமுறைகளை பிள்ளைகளுக்கு எடுத்துக் காட்டி வழிநடத்த வேண்டும்.

பாடசாலை அமைப்பு கல்வித்திட்டம் ஆசிரியவியல் குறித்த விமர்சனங்கள் உலகெங்கும் உண்டு. அதனால் இவற்றை மேலும் பயனுள்ளதாக நவீன மயப்படுத்தல் வேண்டும். தமிழ்ச் சூழலிலும் இவ்விடயங்கள் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். பழையன புதியனவற்றில் சிறப்பானவற்றை இணைத்து ஆசிரியவியல் பாடத்திட்டங்களில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். புத்தகத்தில் உள்ள பாடத்தைப் பிள்ளைகளுக்கு அப்படியே தூக்கிக் கொடுக்காமல் பிள்ளைகள் விளங்கக் கூடிய வகையில் வாழும் நாட்டின் எடுத்துக்காட்டுகளுடன் பிள்ளைகள் விரும்பும் வகையில் இலகுவாக சுவையாக ஆசிரியரகள் கற்பித்தல் வேண்டும். தேடல் மூலம் ஆசிரியவியல் நுட்பங்களையும் புதிய அறிவினையும் ஆசிரியர் பெற்றுக் கொள்ளல் வேண்டும். தேர்வு உத்திகளைப் பயன்படுத்தி எமது மாணவர்களில் பலர் சித்தி அடைந்தாலும் சரியாக எழுதுதல் பேசுதல் என்பன வற்றில் போதிய திருப்தி நிலைமையில்லை. மொழியைப் பிழையாக எழுதிப் பேசிக்கொண்டு தேர்வில் சித்தியடைவதில் பயனில்லை. பெற்றோர் பிள்ளைகளின் வாழிட மொழிக் கல்விக்கு இடையூறு இல்லாத விதத்தில் சொல்வதெழுதுதல் வாசிப்பு என்பனவற்றை வெள்ளி சனி மாலைகளில் பயிற்சி அளித்தல் வேண்டும். சிறிய பந்தியொன்றைக் கொடுத்து பார்த்தெழுதி வாசிக்கச் செய்து பின்பு அதனைச் சொல்வதெழுதுதல் சொல்ல வேண்டும். விட்ட பிழைகளை மூன்று தரம் திரும்ப எழுதச் செய்தல் வேண்டும். இதனாலேயே எமது மாணவர்கள் பிழையற எழுதி வாசிக்கும் மொழித்திறன் பெறுவார்கள்.

ஆதிகாலத்தில் தாய் தந்தை மூத்த உறுப்பினர்கள் அடுத்த தலைமுறையினருக்கு தமது அனுபவங்களைக் கூறி செயல் மூலமும் நெறிப்படுத்தி வழிநடத்தினர். மேம்பட்ட சமூகத்தின் மூத்த தலைமுறையினர் அடுத்த தலைமுறையினரைப் பல்வேறு துறைகளிலும் தகுதி ஆக்குவது தமது கடமை எனச் செயற்படுகின்றனர். தம்மை மீறி வளர்ந்துவிடுவார்களோ தங்களது இடத்தை எடுத்து விடுவார்களோ என்ற அச்சம் அவர்களுக்கு இல்லை. தங்களிலும் மேம்பட்டவர்களாக தகுதியானவர்களாக இளந்தலைமுறையினரை ஆக்குவதே சான்றோர் கடமையாகும். இதில் அவர்களுக்கு எவ்வித அச்சமோ தயக்கமோ இருக்காது அறிவும் தகுதியும் செயலும் ஒழுங்கும் கொண்டவர்களுக்குக் காலமறிந்து பொறுப்புளைக் கையளிப்பர். இளையோரும் இதற்கு விருப்பாய் தயாராய் இருத்தல் வேண்டும். எமது தமிழ்ச்சமூகத்தின் சூழல் இதில் எப்படி உள்ளது? இது ஆய்வுக்குரிய விரிவாக எழுதப்பட வேண்டிய விடயம். நாம் எம் இளையோரை அடுத்தகட்டத்திற்குத் தயார்படுத்தினாலேயே எமக்கு விடிவு உண்டு.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும். இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும் என்ற மகாகவி பாரதியின் வரிகளுக்கு இணங்க தமிழ்மொழியிலும் வாழிடமொழியிலும் மிகப் புலமை பெற்ற எமது இளம்தலைமுறையில் சிலராவது துறைசார்ந்த நூல்களை விடயங்களைத் தமிழ்மொழியில் மொழிபெயர்த்து தமிழ்ச் சமுதாயத்துக்குத் தர வேண்டும். இது எம் சிறார்களுக்கும் நன்மை பயக்கும். அது போல் புறநானூறு, திருக்குறள் சிலப்பதிகாரம் போன்ற செந்தமிழ் நூல்களின் கருத்துக்களை வாழும் நாட்டின் மொழியில் மொழிபெயர்த்தல் வேண்டும். சிலப்பதிகாரத்தை ஐரோப்பிய மொழிகளில் சுருக்கமாக மொழிபெயர்த்து அதனை ஒரு நாட்டிய நாடகமாக்கி வாழிட நாட்டு மக்கள் மத்தியில் மேடையேற்றலாம். சிறு பிள்ளைகளது கல்வி ஆசிரியவியல் போன்ற பிறமொழியாக்கங்களைத் தமிழில் மொழிபெயர்க்கலாம்.

எனது பாடசாலைப்பருவத்திலேயே பன்னிரெண்டாம் வகுப்பில் கற்கும் பொழுதே ரோசாலக்சம்பேர்க் என்ற யேர்மனியில் வாழ்ந்த சிறந்த பெண்மணியை அறிந்திருக்கின்றேன். மிகச் சிறந்த தீரமுள்ள அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டாளர் அவரிடம் தேசிய இனப்பிரச்சனைகள் குறித்த தவறான பார்வைகளும் இருந்தன. ஒரு பிரச்சனை குறித்துப் பல்வேறு தத்துவப்பார்வைகள் உண்டு. தேசிய இனப் பிரச்சனை சுயநிர்ணய உரிமை அயர்லாந்து விடுதலைப்போராட்டம் குறித்த கார்ல் மார்க்ஸ் – எங்கெல்ஸ் லெனின் ஆகியோரது விவாதக் குறிப்புகளை எமது இளம்தலைமுறையினர் கற்பது நன்று. இது எமது தேசிய இனப்பிரச்சனையின் பரிமாணத்தை அறிவுபூர்வமாக விளங்கிக் கொள்ளவும் வெளிநாட்டு ஊடகவியலாளர் அரசியல்தலைவர்களுக்கு எம் தாயக நிலைமைகளை விளக்கவும் உதவும்.

வேலை இடங்களில் எம்மில் சிலரை வாழிட நாட்டினர் உங்கள் நாட்டில் சண்டை முடிந்து விட்டதே பிரச்சனையில்லைத்தானே என்று கேட்பார்கள். சிலர் ஏனோ தானோ என்று பதிலளிப்பார்கள். சில பெற்றோர்களது வீட்டு உரையாடலைக் கேட்டு சில பிள்ளைகள் பாடசாலைகளில் நாட்டுப் பிரச்சனை முடிந்துவிட்டது என்றும் பதிலளிப்பது உண்டு. இது எவ்வளவு அறிவீனமானது. அடிப்படைப் பிரச்சனைகள் இருந்ததால் தான் ஆயுதப்போராட்டம் தொடங்கியது. ஆயுதப்போராட்டம் நிறுத்தப்பட்டதால் பிரச்சனைகள் தீர்ந்துவிட்டதா? இல்லை சிறிலங்கா அரசின் ஈழத்தமிழருக்கு எதிரான போர் சத்தம் இல்லாத வகையில் நடந்துகொண்டுதான் இருக்கின்றது. சிறிலங்கா இராணுவத்தின் சப்பாத்து கால்களுக்கீழேயே எமது மக்கள் வாழ்கிறார்கள். தொழில்தேடி யாரும் எவ்விடத்திலும் குடியேறலாம்! ஆனால் எமது நிலத்தில் திட்டமிட்ட குடியேற்றம் மேற்கொள்ளப்படுகிறது. உங்களது வீட்டின் ஒரு அறையில் மாற்றார் வந்து அடாத்தாகக் குடியிருந்து இது எனது வீடென்றால் நீங்கள் ஏற்பீர்களா?

சுண்ணாம்பு, இல்மனைட், கடல்வளம் போன்ற எமது இயற்கை வளங்கள் சிறிலங்கா அரசால் நாளாந்தம் அபகரிக்கப்படுகின்றது. அபிவிருத்தித் திட்டங்கள் எதுவும் மேற்கொள்ளப்படுவதில்லை. எமது மக்களுக்கு அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்படுகின்றது. தமிழீழம் சிறிலங்காவின் உள்நாட்டுக் காலனியாக (Local Colony) அடிமைநாடாக விளங்குகின்றது. போர் நிறுத்தப்பட்டதே தவிர மாநில சுயாட்சி (Autonomy) போன்ற அரசியல் தீர்வுகள் கூட ஆராயப்படவில்லை. தயவு செய்து எமது பிள்ளைகளுக்கு நாட்டில் பிரச்சனையில்லை என்று மூடத் தனமாக சொல்லிக் கொடுக்காதீர்கள். நேர்மையாக அவர்களுக்கு விடயத்தை விளக்குங்கள்.

எமது இளையோர்கள் சிலர் வாழும் நாட்டில் உயர்கல்வி கற்கின்றார்கள் தமிழ் மொழிப் பாடசாலையில் ஆசிரியர்களாக நிர்வாகப் பொறுப்புகளில் பணிசெய்கின்றார்கள். ஒரு அரசியல் தலைவரை ஊடகவியலாளரைச் சந்தித்துத் தாயக நிலையை விளக்க வேண்டும் என்றால் வருகின்றார்கள். எமது பிள்ளைகளுக்கு அரசியல் வேண்டாமென்று இவர்களது பெற்றோர் இவர்களைத் தடுப்பதில்லை அமைதியான அரசியல் வழிமுறைகள் ஐரோப்பாவில் உண்டு. அதே வேளையில் இப் பிள்ளைகள் தமது உயர் கல்வியில் கண்ணும் கருத்துமாக இருந்து அதற்கு முதன்மை அளித்து ஐரோப்பியர்மத்தியில் சாதனைகள் புரிகின்றார்கள். தமிழ் சமூகத்திற்கும் தாம் வாழும் நாட்டிலும் தொடர்புகளைப் பேணி சமநிலை பேணுகின்றார்கள். வாழும் நாட்டின் முற்போக்குச்சக்திகளோடு இணைந்து அவர்களின் நிகழ்வுகளிலும் பங்குபெறுகிறார்கள். தமிழ்மொழி தாயகவிடுதலை என்பவற்றுக்காய் புலம்பெயர்ந்த நாடுகளில் குறிக்கப்பட்ட சில இளையோர்கள் உழைக்கின்றார்கள். தமிழீழத்தாய் இவர்களை என் தவப்புதல்வர்கள் தவப்புதல்விகள் என நன்றியுடன் பார்க்கின்றாள். எனக்குத் தகுதியில்லாவிட்டாலும் நான் இவர்களை நோக்கித் தலை வணங்குகின்றேன். வாழ்க நீவீர் தொடர்க உம் பணிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Thamilalayam München
N. Nirmalathasan
Siegenburgerstraße 21a

81373 München

## Herzlichen Dank!

Zum 17- jährigen Jubiläum der Thamilalayam München möchten wir uns für die vielseitige Unterstützung bedanken. Für die uns zur Verfügung gestellten Räume bedanken wir uns besonders bei der:

- Erlöserkirche in der Ungererstraße
- Kreuzkirche in der Hiltenspergerstraße
- ASD (Allgemeine Sozial Dienst) in der Tumblingerstraße
- Berufsbildungszentrum in der Lindwurmstraße
- Kath. Pfarramt St. Gertrud
- IG- Initiativ Gruppe
- VHS (Volkshochschule) in der Landwehrstraße

Unser Dank auch an das Schulreferat München, das uns seit 1997 Räumlichkeiten zur Verfügung gestellt hat.

Thamilalayam München

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியுரை

எமது தமிழாலயம் 17 வருட வளர்ச்சியை எட்டியுள்ளது. இவ் வளர்ச்சிக்குப் பலர் உதவியுள்ளார்கள். இவர்கள் சகலருடைய விபரங்களையும் இம்மலருக்குள் பதிவு செய்யப் பல பக்கங்கள் தேவையாகும். தமிழாலயம் மேலும் வளர்ச்சியடைய சகல பெற்றோரின் உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் வேண்டி நிற்கின்றோம். கடந்த காலங்களில் தமிழாலயத்திற்கு முக்கியமான உதவிகளைச் செய்தோரின் விபரங்கள்:

ஒலி – திரு கனகேந்திரம் இராஜலிங்கம்
ஒளிப்பதிவு – திரு கணபதிப்பிள்ளை சிவலோகானந்தன்

திரு ஏகாம்பரம் மகாலிங்கம்

திரு அரியகுட்டி இராஜலிங்கம்

ஒளிப்படம் – திரு சிவசுப்பிரமணியம் குணசீலன்

திரு சிவதயாளன்

கலை வகுப்புகளுக்கான இடங்கள் – திரு துரையப்பா கஜேந்திரன்

திருமதி நளினி இராமச்சந்திரன்

விளையாட்டுப் போட்டி – திருமதி சுபோதினி விவேகானந்தன்

திரு பீற்றர் நொலெஸி

திரு சின்னையா இராஜரட்ணம்

திருமதி லலிதா நந்தகுமார்

தமிழ்த்திறன் போட்டிக்கு சில ஆக்கங்களைத் தந்துதவியவர் –
திரு இராஜதுரை திலகேஸ்வரன்

வாகன உதவி – திரு முத்தையா கணேசலிங்கம்

திரு செல்வரட்ணம் செல்வபாஸ்கரன்

திரு கனகசபை தமிழ்ச்செல்வன்

உணவு தயாரித்தோர் – திரு கந்தசாமி புவிச்சந்திரன்

திரு அரசரட்ணம் நகுலேந்திரன்


திரு பரமு ஆனந்தசிங்கம்

தமிழாலய இட ஒழுங்கமைப்பு – திரு இந்திரகுமார் குமாரசாமி

தேர்வுகள் விழாக்களின் மண்டப ஒழுங்குகளைச் செய்தோர் பலராவர். இவர்களுக்கும் ஏனைய உதவிகள் செய்த பலருக்கும் எமது நன்றியினைச் செலுத்துகின்றோம்.

**தமிழாலயம் முன்சன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Schüler der Thamilalayam-München

மூன்சன் தமிழாலய மாணவர்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மலர் ஆக்கம்

இம்மலரை வெளியிடுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய சகலருக்கும் நாம் நன்றிமலர்களைத் தூவுகின்றோம். எம்மை அறியாமலே இம்மலரில் அச்சுப்பிழைகள் தகவல் தவறுகள் இடம்பெற்றிருக்கலாம். வளர்ச்சியடைந்து வரும் தமிழாலயம் என்றவகையில் மாணவர்களது பன்முக ஆக்கங்கள் இம்மலரில் வெளிவந்துள்ளது. இதிலுள்ள குற்றங்களைக் களைந்து நிறைவுகளை ஏற்குமாறு வேண்டுகின்றோம்.

மலர் ஆக்கம் – ஆசிரியர் குழு: திருமதி ஜெகதீஸ்வரி இராமதாஸ்
திருமதி சரஸ்வதி நிர்மலதாசன்
திருமதி இரத்தினமலர் மாணிக்கராஜா

கணினி வடிவமைப்பு: செல்வன் பார்த்தீபன் குகதரன்

கணினி தமிழ் தட்டச்சு உதவி: செல்வன் டிலக்ஷன் சோதிலிங்கம்
செல்வி தமிழினி நிர்மலதாசன்
செல்வன் கீர்த்தனன் உலகநாதன்

ஒளிப்படங்கள்: செல்வன் வியுலன் குலசேகரம்
அட்டைப் பட அமைப்பு:


ஒளிப்பட ஆவணச் சேகரிப்பு: செல்வன் பிரகாஷ் முருகையா
செல்வன் அகிலன் இராசதுரை

மலர் ஆக்க ஆலோசகர்: திரு சிவபாதசுந்தரம் இளவழகன்

Druckerei:
DWAM GmbH & Co. KG
Gmunder Str. 35a
81379 München
Tel.: 089/3546200
www.dwam.eu

முகவரி:
Thamilalayam München
N. Nirmalathasan
Siegenburgerstraße 21a
81373 München
Germany

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



முன்சன் தமிழாலய மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Schüler der Thamilalayam-München

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org